799

799

KAVERI VACHAGAM

BOOK V

(Based on the New Syllabus, 1939.)

907

VIDWAN M. RAJAMANIKKAM, B.O.L.
Tamil Pandit, Muthialpet High School, Madras.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 MAR 1942
MADRAS

K. R. VARDON & CO.
TANJORE

799

காவேரி வாசகம்

ஐந்தாம் புத்தகம்

(Based on the New Syllabus, 1939)

494.81186

ஆசிரியர் :

வித்வான், மா. இராசமாணிக்கம், B. O. L.,

தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர்கலாசாலை, சென்னை.

907

கே. ஆர். வார்டன் அண்ட் கம்பெனி,

தஞ்சாவூர்

1941

பதிப்புரிமை]

[விலை அணு 7

P3/9

Printed at the Jupiter Press, Madras.

முகவுரை

காவேரி வாசகம் என்னும் பெயருடைய இத் தமிழ்ப்பாட வரிசை, கல்வித்துறையினர் அண்மையில் வெளியிட்டுள்ள புதிய பாட இயல் (Syllabus) படி எழுதப்பெற்றது. புதிய பாட இயலில் குறிப் பிடப்பட்டுள்ள ஒவ்வொரு குறிப்பும் இதன்கண் இடம் பெற்றுள்ளது. மாணவர் பிழையின்றிப் பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய தமிழ் அறிவினையும், பொது அறிவினையும் பெறச் செய்தலே இந்நூல் வரிசையின் நோக்கமாகும்.

பாட இயலிற் கண்டவாறே புதிய சொற்கள் பாடந்தோறும் தரப்பெற்றுள்ளன. ஒவ்வொரு நூலிலும் பிள்ளைகளது தகுதிக் கேற்றபடி கதை, கைத்தொழில், பயிர்த்தொழில், சுகாதாரம், உரை யாடல், இலக்கியம், நாடகம் முதலிய அறிவியல் பாடங்கள் எழுதப் பட்டுள்ளன. அவ்வாறே எளிய முறையில் அமைந்த பழைய பாடல்களாகிய கும்மி, தாலாட்டு, அம்மானை, பந்தாட்டம், ஊசல், பள்ளு, குறம் முதலியனவும் புதிய பாடல்களும் நடிப்புக்குரிய பாடல்களும் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடத் தின் முடிவிலும் கேள்விகள், பயிற்சி, இலக்கணம் என்பவை வகுப் புக்கு ஏற்றவாறு கொடுக்கப்பட்டுள்ளன. மௌன வாசிப்பின் அவசி யம் கதைப் பாடங்கள் மூலமாகவும் படப்பயிற்சிகள் மூலமாகவும் வற்புறுத்தப்பட்டுள்ளது. கடிதம், கட்டுரை முதலியன எழுதுதற் குத் தக்கவாறு சில பாடங்களும், மாதிரிக் கடிதங்களும் எழுதப்பட் டுள்ளன.

சுருங்கக் கூறின், காவேரி வாசக வரிசை—செவிலித்தாய் போல் மக்களுக்குத் தன் நன்னீரை அளித்துக் காக்கும் புகழ் மிக்க காவேரி ஆறுபோல்—தமிழ் மாணவர்க்கு அறிவினை ஊட்டும் செவிலித் தாயாக அமைவுறும் எனல் மிகையாகாது.

மா. இராசமாணிக்கம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 MAR 1942
MADRAS
907

ஆசிரியர்க்கு :

1. பாட இயலினும், தமிழ்ப்பாட நூலிலும் கண்டுள்ள வகுப்புக்கேற்ற நிறுத்தக் குறிகளைப் பற்றிய அறிவைத் தெளிவுற ஊட்டி, அவை இடவேண்டும் இடங்களை நன்கு உணர்த்திப் பழக்குதல் இன்றியமையாதது. பொருள் விளங்கும்படி வாசித்தற்கு நிறுத்தக் குறிகள் இன்றியமையாதவை என்பது பிள்ளைகள் உள்ளத்தில் நன்கு பதியச் செய்தல் நல்லது.

2. ஒவ்வொரு பாடத்தின் ஈற்றிலும் தரப்பட்டுள்ள பயிற்சியில் நன்கு பழகும்படி மாணவரை ஊக்குதல் நற்பயிற்சியாகும். பயிற்சிகளிற் பழகும் மாணவர் அறிவு விரைவில் நிறைவுறும் என்பது கல்வி அறிஞர் கருத்தாகும். பயிற்சிகளை மாதிரியாகக் கொண்டு, மேலும் பல உதாரணங்கள் தந்து, பிள்ளைகளைப் பழக்குதல் சிறப்புடையது.

3. குறிப்புப் புத்தகம்—அவசியமான பத்திரிகைச் செய்திகளை ஒட்டிவைத்துக்கொள்ளும் நோட்டுப் புத்தகம் — என்பவற்றின் அவசியத்தைப் பிள்ளைகளுக்கு விளக்கி, அவற்றை வைத்துக் கொண்டு பழகுமாறு செய்தல் ஆசிரியர் அருங்கடனாகும்.

4. பிள்ளைகளைப் பல இடங்களுக்கு அழைத்துச் செல்லுதல், அவ்விடங்களைப்பற்றிய செய்திகளை விளக்குதல், அவற்றைப்பற்றிக் கட்டுரை வரையச் செய்தல், பத்திரிகைச் செய்திகளை நாள்தோறும் அறிவித்துப் பிள்ளைகட்கு உலக அறிவை ஊட்டுதல் முதலியன பிள்ளைகள் முன்னேற்றத்திற்கு ஏற்றவையாகும்.

5. தோட்ட வேலை, அட்டை வேலை, மூங்கில், பிரம்பு இவற்றைக் கொண்டு செய்யும் கைத்தொழில், நூல் நூற்றல், தையல் வேலை, பின்னல் வேலை முதலியவற்றில் பிள்ளைகள் பெறும்

அநுபவத்தை அன்றாடம் தத்தம் குறிப்புப் புத்தகத்தில் எழுதச் செய்தல் நல்ல முறையாகும்.

6. பாட நூலில் வரும் உரையாடல்களை நாடகமாக நடிக்கச் செய்தல், நாடக உருவில் எழுதச் செய்தல், நாடக உருவில் உள்ளவற்றைக் கதை வடிவில் எழுதச் செய்தல், கதையில் கூறப்படும் பாத்திரங்களாகத் தம்மை நினைந்து தம் சரித்திரம் கூறுதல் போலவும்-அதனைப் பிறர் கூறுதல் போலவும் சொல்லவும் எழுதவும் செய்தல் முதலியன மாணவர்க்குப் பேசும் திறனையும் எழுதும் திறமையையும் விரைவில் முன்னேறச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

7. இன்ன இடங்களில் க, ச, த, ப மிகும் என்பதைப் பிள்ளைகளுக்கு உதாரணத்துடன் அறிவித்து, இந்த அறிவைப் பாடங்கள் மூலமாகப் பெருக்கிப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் பிள்ளைகளைப் பழக்குதல் நல்ல தொண்டாகும்.

8. ர, ற; ல, ள; ந, ண, ன—இவற்றின் வேறுபாடு விளங்கச் சொற்களில் இவற்றை வைத்து உச்சரிக்கப் பழக்குதலும், பொருளை அறிந்து கொள்ளுமாறு பழக்குதலும் மாணவரது தமிழ் அறிவிற்கு இன்றியமையாத அடிப்படையாகும்.

9. பாட்டுகளைச் சீர் பிரித்துப் பிழையின்றி வரிவரியாக எழுதப் பழக்குதல் மிகவும் நல்லது.

10. சுகாதாரம் முதலிய சிறப்புடைய செய்திகளின் விவரங்களைப் படங்கள், காட்சிகள், கதைகள் இவற்றின் மூலமாக நன்கு விளக்கி, அவற்றில் தகுந்த கவலை எடுத்துக்கொள்ளும்படி மாணவரைப் பழக்குதல் மாண்புடையதாகும்.

உள்ளுறை

எண்	பொருள்			பக்கம்
1.	நமது தாய்மொழி	...	...	1
2.	நல்ல நண்பர்கள்	...	...	5
3.	உள்நாட்டு வாணிபம்	...	...	9
4.	நவராத்திரி விழா	...	...	13
5.	மேட்டூர் அணைக்கட்டு	...	...	17
6.	மாணவர் தமிழ்க் கழகம்	...	...	21
7.	எழுதும் பயிற்சி	...	...	25
8.	இது என்ன திருவிழா?	...	...	30
9.	பத்திரிகைப் படிப்பு	...	...	31
10.	ஆட்டம்	...	...	35
11.	சேரன்—செங்குட்டுவன்	...	...	40
12.	கட்டுரை எழுதுதல்	...	...	45
13.	காவிரிப்பூம் பட்டினம்	...	...	49
14.	வெளிநாட்டு வாணிபம்	...	...	54
15.	சீத்தலைச் சாத்தனார்	...	...	58
16.	கதைப் படம்	...	...	62
17.	நூல் நிலையம்	...	...	64
18.	கடிதங்கள்	...	...	68
19.	மாலைக் காட்சி	...	...	72
20.	பெரியோர் உரைநடை	...	...	74
21.	சென்னைச் சேவா சாதனம்	...	...	78
22.	இயற்கைக் காட்சி	...	...	82
23.	கதைப்படம்	...	...	87
24.	செஞ்சிக் கோட்டை	...	...	89
25.	கோபால கிருஷ்ண கோகலே	...	...	94
26.	இலங்கைத் தீவு	...	...	97
27.	குமண வள்ளல்	....	...	102
	செய்யுள் பாடம்	...	...	109

காவேரி வாசகம்

---

1. நமது தாய் மொழி

புதிய சொற்கள்:—தாலாட்டு—உற்றார்—பழகும்—தாய்மொழி—வட எல்லை—குடாக்கடல்—ஏறக்குறைய—கொச்சி—திருவாங்கூர்—சமஸ்தானம்—சுமார்—கொண்டிருந்தது—மூவேந்தர்—சங்கநூல்கள்—இன்றுள்ளவை—ஏற்பன—போர்த்திறம்—வாணிபச் சிறப்பு-நல்லொழுக்கம்—தவறு தீர்கள்—போற்றுங்கள்.

நாம் பேசுவது **தமிழ் மொழி**. நாம் நமது சிறு பருவத்திலிருந்து இன்றளவும் தமிழிலேயே பேசிவருகின்றோம். நமது தாயார் நம்மைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுப் பாடியது தமிழ்மொழியிற்றான். நாம் நம் தாய் தந்தையர், உற்றார், உறவினர் இவர்களோடு தமிழிலேயே பேசுகின்றோம். இவ்வாறு நம் தாய் முதல் உற்றார் உறவினர் வரை பேசிப் பழகும் மொழி **தாய் மொழி** எனப்படும். நமது தாய் மொழி தமிழ்.

தமிழ் வழங்கும் நாடு **தமிழ் நாடு** எனப்படும். தமிழ் நாடு என்பது திருப்பதியை வடஎல்லையாக உடையது; கன்னியாகுமரியைத் தெற்கெல்லையாக உடையது; வங்காளக் குடாக்கடலைக் கிழக்கெல்லையாக உடையது ; கொச்சி, திருவாங்

கூர்ச் சமஸ்தானங்களை மேற்கெல்லையாக உடையது. இந்த நான்கு எல்லைகளுக்கும் உட்பட்டுள்ள நிலப்பகுதியே இன்றைய தமிழ்நாடு ஆகும். இப்பகுதியில் ஏறக்குறைய பன்னிரண்டு ஜில்லாக்கள் அடங்கியுள்ளன. இவற்றுள் உள்ள தமிழ் பேசும் மக்கள் தொகை சுமார் இரண்டு கோடி ஆகும்.

பண்டைத் தமிழ்நாடு சேர, சோழ, பாண்டிய நாடுகள் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டிருந்தது. இப்போது மலையாளம் வழங்கும் மேற்குக் கடற்கரைப் பகுதி முழுவதும் சேர நாடாக இருந்தது. அது போக, இன்றுள்ள தமிழ் நாட்டில் திருப்பதி முதல் திருச்சிராப்பள்ளி ஜில்லா முடியச் சோழ நாடாக இருந்தது. எஞ்சிய ஜில்லாக்கள் பாண்டிய நாடாக இருந்தன.

இம்மூன்று நாடுகளையும் சேரர், சோழர், பாண்டியர் என்பவர் ஆண்டுவந்தனர். இவர்கள் முடியுடை மூவேந்தர் எனப்பட்டனர். இவர் மூவரும் நமது தாய்மொழியைப் போற்றி வளர்த்து வந்தனர்; தமிழ்ப் புலவர்களைக் கொண்டு பல தமிழ் நூல்களைச் செய்தனர்; பல சங்கங்களைக் கூட்டித் தமிழை வளர்த்தனர். அச் சங்கங்களில் செய்யப்பட்ட நூல்கள் சங்க நூல்கள் எனப்படும். அந்நூல்களுள் பல அழிந்து போயின. இன்றுள்ளவை சிலவே ஆகும்.

புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, திருக்குறள், பத்துப்பாட்டு முதலியவை இன்றுள்ள சங்க நூல்களாம்.

இன்றுள்ள சங்க நூல்களைப் படிப்பதால் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த தமிழ்ப் பேரரசர், சிற்றரசர், வள்ளல்கள், புலவர்கள், குடிகள் இவர்தம் பழக்க வழக்கங்களும் பிறவும் நன்கு அறியலாம்; நாம் அவற்றுள் ஏற்பன கைக்கொண்டு வாழலாம்; நம் முன்னோர் போர்த்திறம், வாணிபச் சிறப்பு, நல்லொழுக்கம் முதலிய நல்ல இயல்புகளை அறிந்து பெருமை அடையலாம். ஆதலால், நீங்கள் பெரியவர்கள் ஆன பின். சங்க நூல்களைப் படிக்கத் தவறுதீர்கள்; நமது தாய் மொழியைப் போற்றுங்கள்.

கேள்விகள்

1. தாய் மொழி என்பது யாது?
2. தமிழ்—நமது தாய் மொழி ஆதல் எப்படி?
3. தமிழ் நாட்டு எல்லைகள் எவை?
4. தமிழ் நாட்டு மூன்று அரசுகள் எவை?
5. தமிழ் நாட்டு ஜில்லாக்கள், ஜனத்தொகை எவை?
6. 'சங்க நூல்கள்' என்பன யவை? அவை ஏன் அப்பெயர் பெற்றன?
7. நாம் சங்க நூல்களால் என்ன அறிதல் கூடும்?
8. நீவிர் இப்பாடத்தால் பெறும் நன்மை யாது?

பயிற்சி

1. தமிழ்நாட்டுப் படம் வரைந்து, சேர சோழ பாண்டிய நாடுகளைக் குறி; தமிழ் நாட்டு எல்லைகளைக் குறிப்பிடு.

2. ஏறக்குறைய, சுமார் } இவை ஒரு பொருட்சொற்கள்.
பெருமை, சிறப்பு } இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

இவை போன்ற ஒரு பொருட் சொற்கள் நான்கு கூறு.

3. சில, முன்னோர், இன்று, பேரரசர்— எதிர்பதம் கூறுக.

4. தாலாட்டு, சிறப்பு, திறம், எல்லை, முடிய—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

5. முதல் பிரிவில் (பாராவில்) உள்ள வாக்கியங்கள் எத்தனை? அவற்றில் உள்ள எ. ப. செ. கூறு.

6. இரண்டாம் பாராவில் உள்ள பெயர்ச் சொற்களைக் கட்டம் போட்டு எழுது.

7. மூன்றும் பாராவில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயர் எச்சம் கூறு.

8. நான்காம் பாராவில் உள்ள ஒருமை, பன்மை கூறு.

9. ஐந்தாம் பாராவில் உள்ள எ. ப. செ. எழுது.

10. சிறு வாக்கியங்களாகப் பிரி:—

பண்டைத் தமிழ்நாடு சேர சோழ பாண்டிய நாடுகள் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது.

11. ஒரே வாக்கியமாக்கு:—

சேர சோழ பாண்டியர் மூன்று அரசர். அவர்கள் தமிழ் நாட்டை ஆண்டு வந்தார்கள். அவர்கள் 'முடியுடை மூவேந்தர்' எனப்பட்டார்கள்.

12. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப்படி:—

(1) தமிழ்———மக்கள்———சுமார்——————ஆகும்.

(2) தமிழ்———நாடு——————.

(3) நமது——————தமிழ்.

2. நல்ல நண்பர்கள்

(மௌன வாசிப்பு)

புதிய சொற்கள் :—ஆற்காடு—ஜில்லா—செஞ்சி—மலைநாடு—ஜய சிங்கு—மன்னன்—பக்திமான்—குணங்கள்—குடிகள்—படைத் தலைவன்—முஹம்மத்கான்—சதை—படையெடுத்தான்—போர்க் கோலம்—பூண்டான்—அரங்கநாதர்—மனைவி — விடைபெற்றான் — போர்க்களம்—புகுந்தான் — திருமணம் — மணமகன்—போர்ச் செய்தி—மணப்பந்தல் — பெரியோர்களே — உயிர்—நவாபு—மண அறை—கடமை—தீர்க்கவேண்டும்—ஆசீர்வாதம் மண்டபத்தில்—கண்கலங்கினர் — ஆறுதல் — தட்டிவிட்டான் — வெகுவேகமாக — தழுவிக் கொண்டான்—‘ஆனந்தக் கண்ணீர்’—வெற்றி—மாய்த்துக்கொண்டான்—தன்னைத்தானே.

தென் ஆற்காடு ஜில்லாவில் செஞ்சி என்னும் மலைநாடு இருக்கிறது. அந்நாட்டை ஜயசிங்கு என்னும் மன்னன் ஆண்டு வந்தான். அவன் போர் செய்வதில் சிறந்தவன்; சிறந்த பக்திமான்; நல்ல குணங்களை உடையவன். அவன்

தன் குடிகளை அன்புடன் நடத்திவந்தான். அவனுக்குச் சிறந்த நண்பனும் படைத்தலைவனுமாக இருந்தவன் முஹம்மத்கான் என்பவன். முஹம்மத்கானும் ஜயசிங்கும் நகமும் சதையும் போல ஒற்றுமையாக இருந்தனர்.

ஆற்காட்டு நவாபு திடீரெனச் செஞ்சியின்மீது படை எடுத்தான். ஜயசிங்கும் போர்க்கோலம் பூண்டான்; தான் வழிபடு தெய்வமான அரங்கநாதரைப் பூசித்தான்; தன் மனைவியிடம் விடை பெற்றான்; முஹம்மத்கானுக்குச் செய்தி சொல்லி அனுப்பினான். ஜயசிங்கு போர்க்களம் புகுந்தான்.

முஹம்மத்கான் வீட்டில் திருமணம் நடக்க இருந்த சமயம்: யாருக்குத் திருமணம்? முஹம்மத்கானுக்கே திருமணம். அவன் மணப் பந்தலில் தன் மணமகளுடன் இருந்த சமயம்—ஜயசிங்கு அனுப்பிய போர்ச் செய்தி வந்தது. அவன் உடனே எழுந்து நின்றான். அவன் திருமணத்துக்கு வந்தவர்களைப் பார்த்து,

"பெரியோர்களே, என் உயிர் நண்பரும் அரசரும் ஆகிய ஜயசிங்கு மன்னர் போருக்குப் போய்விட்டார்; என்னை வரச்சொல்லி ஆள் அனுப்பி இருக்கிறார். ஆற்காட்டு நவாபு எங்கள்மீது படைஎடுத்து வந்திருக்கிறானும். ஆதலால், நான் உடனே போக வேண்டும். நான் மண அறையை விட்டு—திருமணம் செய்துகொள்வதை விட்டுப் போவதை நீங்கள் கவனிக்க வேண்டும். என் திருமணத்தை விட என் நண்பர் முக்கியமானவர். அவருக்கு என் கடமையை நான் செய்து தீர்க்க வேண்டும். நீங்களே என்னை ஆசீர்வதித்து அனுப்புங்கள்" என்றான்; உடனே குதிரைமீது பாய்ந்தான்.

திருமண மண்டபத்தில் இருந்த எல்லோரும் கண் கலங்கினர்; மணப்பெண் அழுதாள். முஹம்மத்கான் அவர்களுக்கு ஆறுதல் கூறினன்; குதிரையைத் தட்டிவிட்டான். குதிரை வெகு வேகமாக ஓடியது. முஹம்மத்கான் போர்க்களம் புகுந்தான்; ஜயசிங்கைக் கண்டான். அவன் மணக்கோலத்தோடு போருக்கு வந்ததைக் கண்ட ஜயசிங்கு அவனை மார்போடு தழுவிக்கொண்டான்; தன் மகிழ்ச்சியை ஆனந்தக் கண்ணீரால் தெரிவித்தான்; "நண்பனே, உன் திருமணத்தையும் கவனியாமல் போருக்கு வந்த நீயே என் உயிர் நண்பன்" என்று கூறி மீண்டும் அவனைத் தழுவிக்கொண்டான்.

போர் கடுமையாக நடந்தது. முஹம்மத்கான் போரில் இறந்தான். ஜயசிங்கு போரில் வெற்றி பெற்ருன். ஆயினும் என்ன? 'என் நண்பன் இறந்த பின், நான்மட்டும் எப்படி உயிர் வாழ்வேன்!' என்று எண்ணி, ஜயசிங்கு தன்னைத்தானே மாய்த்துக்கொண்டான். நீங்கள் இந்த இரண்டு நண்பர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

கேள்விகள்

1. ஜயசிங்கு எப்படிப்பட்டவன்?
2. முஹம்மத்கான் சபையோரிடம் என்ன சொன்னுன்?
3. அவன் ஏன் திருமணத்தை விட்டுப் போருக்குப் புறப்பட்டான்?
4. இரண்டு நண்பரும் சந்தித்ததைப் பற்றிக் கூறு.
5. ஜயசிங்கு ஏன் தற்கொலை செய்துகொண்டான்?
6. நீ இப்பாடத்திலிருந்து அறியும் நீதி யாது?

பயிற்சி

1. முதல் பாராவில் உள்ள எ. ப. செ. கூறு.

3. போர்க்கோலம், போர்க்களம், மண அறை, மணமகள்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. நகமும் சதையும் போல—பூவும் மணமும் போல-கண்ணும் இமையும் போல—இந்தத் தொடர்கள் பிரியாமல் இருக்கும் இருவரைச் சுட்டும் பொழுது பயன்படுபவை. ஆதலால், நீ இவற்றை வாக்கியங்களில் உபயோகிக்க அறிந்து கொள்.

4. மணமகன் × மணமகள்
மணம் × பிணம்
வேகமாக × மெதுவாக
வெற்றி × தோல்வி
பிறந்தான் × இறந்தான்
நண்பன் × பகைவன்

} எதிர்ப்பதங்கள். இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

பாராவின் இலக்கணம்:—ஒரு குறிப்பிட்ட செய்திகளையே கொண்ட தொகுதி (சில வரிகள் அல்லது வாக்கியங்கள்) 'பாரா' எனப்படும். ஒரு பாடத்தில் கூறப்படும் பல விஷயங்களில், ஒரு விஷயத்தைப் பற்றியே வரும் பகுதி 'பாரா' எனப்படும். இப்பாடத்தில், முதல் பாராவில் ஜயசிங்கு, முஹம்மத்கான் இவர்களைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. இரண்டாம் பாரா, ஜயசிங்கு போர்க்களம் போதலைப்பற்றிக் கூறுகிறது. மூன்றும் பாராவும் நான்காம் பாராவும் முஹமத்கான் போருக்குப் புறப்படுதலைப் பற்றிக் கூறுவன. ஐந்தாம் பாரா முஹம்மத்கானும் ஜயசிங்கும் சந்தித்தலைப்பற்றிக் கூறுவது. ஆறும் பாரா 'நண்பர் இலக்கணம்' பற்றிக் கூறுவது.

இவ்வாறு ஒவ்வொரு பாராவின் விஷயத்தை அறிந்து தலைப்புக் கொடுக்கப் பழகுக.

3. உள்நாட்டு வாணிபம்

புதிய சொற்கள் :—சாதனங்கள்—பஸ் — லாரி—பிரயாணம்—உள் நாடு—வியாபாரம்—விளையாத—மாகாணம்—துறைமுகம்—கல்கத்தா — வங்காளம் — புதுச்சேரி, நாகப்பட்டினம்—வாணிபம்—அயல் நாடு—அந்தந்த—சணல்—கோதுமை—பட்டாடை—பருத்தி—கம்பளம் — பெங்களூர் — நெல்லூர் — பக்கிங்ஹாம் கால்வாய் — வெற்றிலை—இலக்ஷம்—பிழைக்கின்றனர்—தரிசு.

நமது நாட்டில் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குப் போகப் புகை வண்டி, மோட்டார், பஸ் முதலிய சாதனங்கள் இருக்கின்றன. மக்கள் பெரிய ஆறுகள், கால்வாய்கள் இவற்றைப் படகுகள்மூலம் கடந்து, வேறு ஊர்களுக்குப் போவதும் உண்டு. இவ்வாறு மக்கள் பிரயாணம் செய்வதைப் போலவே உள்நாட்டு வியாபாரமும் நடைபெறுகிறது.

ஒரு ஜில்லாவில் விளையாத பொருள்கள்—ஒரு மாகாணத்தில் விளையாத பொருள்கள் மற்ற இடங்களில் விளைவது உண்டு. வியாபாரிகள் அப் பொருள்களை, அவை இல்லாத இடங்களுக்குப் புகை வண்டி மூலம் அனுப்புவார்கள்; படகுகள் மூலமும் அனுப்புவார்கள். மோட்டார் லாரிகள் மூலம் பல பொருள்களை வேறு இடங்களுக்குக் கொண்டு போதலும் உண்டு.

நமது நாட்டில் பல துறைமுகங்கள் உண்டு. கல்கத்தாத் துறைமுகத்திலிருந்து வங்காள மாகாணப் பொருள்கள் கப்பல்கள் மூலம் நமது சென்னை, நாகப்பட்டினம், புதுச்சேரி முதலிய துறைமுகங்களுக்கு வந்து இறங்குதலும்

உண்டு. இவை எல்லாம் ஒரு நாட்டிலேயே நடைபெறுவதால் உள்நாட்டு வாணிபம் எனப்படும்.

ஒரு நாட்டுப் பொருள்கள் வேறு நாடுகளுக்குக் கடல் கடந்து போதலோ—அந்த நாட்டுப் பொருள்கள் வேறு நாட்டுக்குக் கடல் கடந்து வருதலோ—வெளி நாட்டு வாணிபம் எனப்படும். அந்தந்த நாடுகளில் இல்லாத பொருள்களை அந்த அந்த நாட்டார் அவை இருக்கும் நாடுகளிலிருந்து பெற்றுக்கொள்வர்.

சணல், கோதுமை, பலவகைப் பட்டாடைகள், பருத்தி ஆடைகள், இரும்புச் சாமான்கள், மருந்துப் பொருள்கள், கம்பள ஆடைகள் முதலியன வட இந்தியாவிலிருந்து நமது சென்னை மாகாணத்திற்கு வருகின்றன. மேல் நாட்டுக் காய்கறிகள் பெங்களூரிலிருந்து பல மாகாணங்களுக்குப் போகின்றன. படகுகள், நெல்லூர் முதலிய இடங்களிலிருந்து அரிசி மூட்டைகளைப் பக்கிங்ஹாம் கால்வாய் மூலம் பிற இடங்களுக்குக் கொண்டு செல்கின்றன.

நமது மாகாணத்திற்குள்ளேயே வெற்றிலைக் கட்டுகள், வாழை இலைக் கட்டுகள், வேறு காய்கறி வகைகள், பழங்கள் முதலியன புகை வண்டி மூலமும் கால்வாய்கள் மூலமும் மோட்டார் லாரி மூலமும் ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவிற்குப் பிரயாணம் செய்கின்றன.

இந்த உள்நாட்டு வியாபாரத்தில் இலக்ஷக்கணக்கான மக்கள் பிழைக்கின்றனர்; பயிர் வேலையும் ஒழுங்காக நடைபெறுகிறது. தரிசாய்க் கிடக்கும் நிலங்களிலும் பயிர்கள் நிறையுமானால், உள் நாட்டு வியாபாரம் மேலும் சிறப்படையும்; நாமும் சிறப்பு அடைவோம்.

கேள்விகள்

1. உள் நாட்டு வாணிபம் என்பது என்ன?

2. வெளி நாட்டு வியாபாரம் என்பது என்ன?

3. உள் நாட்டு வாணிபத்துக்கு உரிய வழிகள் எவை?

4. நமது மாகாணத்துக்கு வரும் மற்ற மாகாணப் பொருள்கள் எவை?

5. நமது மாகாணத்திற்கு உள்ளேயே பிரயாணமாகும் பொருள்கள் எவை?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:—

(1) உள் நாட்டு —— இலக்ஷக் —— மக்கள் ——.

(2) நமது நாட்டில் பல —— உண்டு.

(3) உள் நாட்டு —— படகுகள் —— புகை வண்டி —— மோட்டார் —— மூலமும் ——.

2. பிரயாணம், துறைமுகம், வாணிபம், அயல் நாடு—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துப் படி.

3. முதல் பாராவில் உள்ள பெயர்ச் சொற்களைச் சொல்.

4. இரண்டாம் பாராவில் உள்ள வினைச் சொற்களைக் கூறு.

5. மூன்றும் பாராவில் உள்ள எ. ப. செ. கூறு.

6. நான்காம் பாராவில் உள்ள வினை முற்றுகள் எந்தக் காலத்தவை?

7. ஐந்தாம் பாராவில் உள்ள ஒருமை, பன்மைகளைக் கூறு.

8. ஆறும் பாராவில் உள்ள இடப் பெயர்களைச் சொல்.

இலக்கணம்

ஒன்றன் பெயரே பெயர்ச் சொல் (Noun). பெயர்ச் சொல்லில் அறியவேண்டுவன திணை, பால், எண், இடம், வேற்றுமை என்பன.

(1) திணை—குலம். மக்கள், தேவர்—உயர் திணை; மற்ற உயிர் உள்ளவையும் இல்லாதவையும்—அஃறிணை. (அஃறிணை—உயர்வு அல்லாத திணை.)

இப் பாடத்தில் உள்ள உயர்திணை, அஃறிணைப் பெயர்களைக் கட்டம் போட்டுக் காட்டு.

(2) பால்—பிரிவு. உயர் திணையில் ஆண்பால், பெண்பால், பலர் பால் என மூன்று பிரிவுகள் உண்டு.

இராமன், அரசன் — ஆண்பால்		
சீதை, அரசி — பெண்பால்	}	உயர்திணை.
அரசர், அரசியர் — பலர்பால்		

அஃறிணையில் ஒன்றன்பால், பலவின்பால் என இரண்டு பிரிவு கள் உண்டு.

எலி, ஆறு, கப்பல் — ஒன்றன்பால்	}	அஃறிணை.
எலிகள், ஆறுகள் — பலர்பால்		

இப் பாடத்தில் உள்ள பெயர்ச் சொற்களுக்குப் பால் கூறு. (கட்டம் போட்டு எழுது.)

(3) எண்: —பொருள்களின் எண்ணிக்கை 'எண்' எனப்படும். அஃது ஒருமை எண், பன்மை எண் என இருவகைப்படும்.

இராமன், கழுதை — ஒருமை எண்.

அரசிகள், எலிகள் — பன்மை எண்.

இப் பாடத்தில் உள்ள ஒருமை, பன்மைப் பெயர்களைக் கட்டம் போட்டு எழுது.

4. நவராத்திரி விழா



புதிய சொற்கள் :—இந்துக்கள்—பண்டிகை—நவராத்திரி—தச ராத்திரி—தசரா—இலக்குமி — கலைமகள் — காளி பூசை—சம்பந்த மான—மகிடாசுரன்—அசுரன்—கொடுமை — நாரதர் — முனிவர்—மலையண்டை—மணக்க—மங்கை—தக்கவன்— குறிப்பிட்ட — எதிர் நோக்கி—இசைய வில்லை—விஜய தசமி—வரிசை வரிசையாக—அலங் கரிக்கப்படும்—ஆயுத பூஜை—புதுக்கோட்டை—மைசூர்—திருவாங் கூர்—சமஸ்தானம்—இறுதி நாள்.

இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகளுள் நவராத்திரி ஒன்ருகும். இஃது ஒன்பது நாட்கள் கொண்டாடப்படும். வடநாட்டார் இதனைப் பத்து நாட்கள் கொண்டாடுவர். அதனல் இது 'தசராத்திரி' அல்லது 'தசரா' எனப் பெயர் பெறும்.

இத்திருவிழா, புரட்டாசி மாதம் அமாவாசைக்கு அடுத்த நாள் முதல் ஒன்பது நாட்கள் முடிய நடை பெறும். முதல்

மூன்று நாள் இலக்குமி பூசையும், அடுத்த மூன்று நாள் கலைமகள் பூசையும், கடைசி மூன்று நாள் காளி பூசையும் நடைபெறும். முதல் இரண்டு பூசைகள் வீட்டில் நடைபெறுவன. காளி பூசை கோவிலில் நடப்பது.

இவ்விழாச் சம்பந்தமான கதை ஒன்று உண்டு: 'மகிடாசுரன்' என்னும் அசுரன் பழைய காலத்தில் மிக்க கொடுமைகள் செய்து வந்தான். அவனைக் கொல்ல நாரத முனிவர் ஒரு தந்திரம் செய்தார். அவர் அவ்வசுரனிடம் சென்று ஒரு மலையைக் குறிப்பிட்டு, "அந்த மலையண்டை அழகிய மங்கை ஒருத்தி இருக்கிறாள். நீயே அவளை மணக்கத் தக்கவன்" என்றார்.

அசுரன் அவர் குறிப்பிட்ட மலையினிடம் தன் படையோடு சென்றான். அங்கு அவன் வரவை எதிர் நோக்கிக் காளிதேவியே பெண் உருவத்தில் இருந்தாள். இந்த இரகசியம் அறியாத அசுரன் அவளை மணக்க விரும்பினான். ஆனால் அவள் இசையவில்லை. உடனே இருவருக்கும் போர் நடந்தது. அப் போர் ஒன்பது நாட்கள் நடந்தன. அசுரன் பத்தாம் நாள் நடந்த போரில் இறந்தான். காளியம்மை தசமியன்று (பத்தாம் நாள்) விஜயம் (வெற்றி) பெற்றாள். அதனால் இவ்விழாவின் கடைசிநாள் 'விஜய தசமி' எனப்பட்டது.

இந்த நவராத்திரி விழா வீடுகளிலும் கோவில்களிலும் கொண்டாடப்படும். பொம்மைகள் வரிசை வரிசையாக வைத்து அலங்கரிக்கப்படும். பலர் இக் காட்சியைக் காண வீடு வீடாகப் போவர். ஒன்பதாம் நாள் 'சரஸ்வதி பூசை'

நடைபெறும். அதுவே 'ஆயுத பூசை' என்றும் சொல்லப் படும்.

நவராத்திரி விழா மைசூர், புதுக்கோட்டை, திருவாங் கூர் முதலிய சமஸ்தானங்களில் மிகவும் சிறப்பாகக் கொண் டாடப்படும். இவ்விழாவின் இறுதி நாளில் முதன் முதல் சிறுவரைப் படிக்க விடுதல் நம்மவர் வழக்கம். பலர் விஜய தசமி யன்று புதிய வேலைகளைத் தொடங்குவர். இத் திரு விழா மிக்க பழமையானது.

கேள்விகள்

1. நவராத்திரி—இதன் வேறு பெயர் யாது? ஏன் அப்பெயர் வந்தது?
2. இவ்விழா எப்படி—எப்பொழுது நடைபெறும்?
3. இவ்விழாத் தொடர்பான கதை யாது?
4. ஆயுத பூசை என்பது யாது?
5. இவ்விழா எங்கெங்குச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது?

பயிற்சி

1. நீ பார்த்த நவராத்திரி விழாவைப்பற்றி 12 வாக்கியம் கூறு.
2. நீ அறிந்த வேறு திருவிழாவைப் பற்றி 10 வாக்கியம் எழுது.
3. வட இந்தியர், கடைசி, பெறும், இறந்தான்—எதிர்ப்பதங் கள் கூறு.
4. எதிர் நோக்கி, மணக்க, வரிசை வரிசையாக, சம்பந்தமான —இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்தெழுது.

இலக்கணம்

5. இடம்—இடம் மூன்று வகைப்படும்: தன்மை இடம், முன்னிலை இடம், படர்க்கை இடம் என்பன.

பேசுபவன்—**தன்மை இடம்**, முன் நின்று கேட்பவன்—**முன்னிலை இடம்**, பேசப்படுவன்—**படர்க்கை இடம்.**

நான்	உன்னிடம்	அவனைப்பற்றி பேசினேன்.
↓	↓	↓
தன்மை இடம்	**முன்னிலை இடம்**	**படர்க்கை இடம்**

(1) நான், யான், நாங்கள் நாம், யாம், யாங்கள் } —**தன்மை** இடத்துப் பெயர்கள்.

(2) நீ, நீர், நீங்கள், நீவிர்—**முன்னிலை** இடத்துப் பெயர்கள்.

(3) அவன், அவள், அது, அவை, அவர்கள், வேறு எல்லாப் பெயர்களும் } —**படர்க்கை** இடத்துப் பெயர்கள்.

இப்பாடத்தில் உள்ள படர்க்கைப் பெயர்களை எழுது.

6. மூவிடத்துப் பெயர்களைக் கட்டம் போட்டு எழுது :—

(1) நான் மோட்டாரில் போகையில் உன்னையும் நாயையும் கண்டேன். (2) நீ அவரோடு பேசுகையில் நாங்கள் உன்னைக் கண்டோம். (3) நாய் ஆடுகளைத் துரத்துகையில் நானும் நீயும் மரத்தின்மீது இருந்தோம்.

5. மேட்டூர் அணைக்கட்டு

புதிய சொற்கள் :—வேளாண்மை — உரியவை — நன்முறை — நோக்கம்—கையாண்டு—வளப்படுத்தி—இடைவிடாமல்—குடகுநாடு —மேட்டுப் பாங்கான—ஐந்நூறு—கரைபுரண்டு—சவவெளி—கடல் மட்டம்—தேக்கப்படும்— பரப்புள்ள—சாகுபடி —மின்சாரம்— விளக்கெரிக்க.

வேளாண்மையும் கைத்தொழிலுமே ஒரு நாட்டு உயர்வுக்கு உரியவை. வேளாண்மை நன்முறையில் நடைபெற வேண்டுமாயின், நாட்டில் பெரிய ஆறுகள் இருப்பது அவசியம். அந்த ஆறுகளின் நீரை வயல்களுக்குக் கொண்டு செல்லத்தக்க கால்வாய்கள் பல இருத்தல் வேண்டும். ஆறுகள் ஆண்டு முழுவதும் நீருடையனவாக இருத்தல் நலமே. அவை 'உயிர் உள்ள ஆறுகள்' எனப்படும்.

பல ஆறுகள் ஆண்டில் பல மாதங்கள் நீர் அற்றனவாக இருக்கின்றன. இத்தகைய ஆறுகளில் வெள்ளம் வரும்போது அந்த வெள்ளத்தை அணை ஒன்றைக் கட்டித் தேக்கி, ஆற்றில் தண்ணீர் இல்லாதபோது, அத் தேக்கத்திலிருந்து கால்வாய்கள் மூலம் நீரை வயல்களுக்குப் பாய்ச்சுதல் நல்ல முறைஆகும். எல்லா நாட்டினரும் இந்த முறையைக் கையாண்டு வருகிறார்கள். நமது தமிழ் நாட்டிலும் இத்தகைய அணைக்கட்டுகள் பல உண்டு. பழைய தமிழ் நாட்டு மன்னரும் இம்மாதிரி அணைகளைக் கட்டிப் பயிர்த் தொழிலை வளப்படுத்தி வந்தனர். சோழ மன்னர் காவிரியாற்றில் கட்டிய 'கல் அணைக்கட்டு' இன்னும் இருக்கிறது.

தஞ்சாவூர், சேலம் முதலிய ஜில்லாக்களில் உள்ள மேட்டுப்பாங்கான இடங்களுக்கு நீர் பாய வசதி இல்லாமல் இருந்தது. அதனால் அவ்விடங்களில் நெடுங்காலமாகப் பயிர்த்தொழில் செவ்வையாக நடைபெறவில்லை. இக் குறையைப் போக்க அரசாங்கத்தார் முனைந்தனர்; ஆறு கோடி எண்பது லக்ஷம் ரூபாய் செலவு செய்தனர்; ஆறு ஆண்டுகள் இடைவிடாமல் வேலை செய்தனர்; மேட்டூர் என்னும் இடத்தில் காவிரியில் மிகப் பெரிய அணை ஒன்றைக் கட்டினர். அஃது உலகில் உள்ள எல்லா அணைக்கட்டுகளிலும் பெரியது என்று கூறப்படுகிறது.

காவிரியாறு சுமார் ஐந்நூறு மைல் நீளம் உள்ளது. இது குடகு நாட்டு மலையொன்றில் உற்பத்தியாகிக் கிழக்கு நோக்கிப் பாய்கிறது. இது முதலில் மைசூர் நாட்டின் வழியாய் ஓடி, மலைநாட்டு வழியே பாய்ந்து, மேட்டூருக்கு அருகில் சமவெளியில் பாய்கின்றது. இதில் ஆவணி முதல் மார்கழி வரையில் வெள்ளம் கரைபுரண்டு ஓடும். இந்த நீர் முடிவில் வங்காளக் குடாக்கடலில் சென்று கலக்கின்றது. இக் கலப்பால் யாருக்கும் நன்மை இல்லை அல்லவா? அதனாற்றான் இந்நீர் வீணாகாமல் இருக்க அணைக்கட்டு அவசியமாகிறது.

மேட்டூர் என்பது சேலம், கோயமுத்தூர் என்னும் இரண்டு ஜில்லாக்களும் கலக்கும் இடத்தில் உள்ள இடம். அதன் அருகில் காவிரியாறு இரண்டு மலைகட்கு இடையே ஓடுகின்றது. அங்கு அதன் அகலம் ஆயிரத்து நூறு அடி ஆகும். அந்த இடத்தில் இரண்டு மலைகளையும் எல்லைகளாகக் கொண்டு, நடுவில் அணை கட்டப்பட்டு இருக்கிறது.

இதில் தேக்கப்படும் நீர், காவிரியாற்றில் சுமார் முப்பத்து மூன்று மைல் தூரம் பரவக்கூடிய நீராகும். இந்த அணைக் கட்டின் உயரம் கடல் மட்டத்துக்குமேல் சுமார் எண்ணூறு அடியாகும். இதன் அகலம் இருபதரை அடி ; அணைக்கட் டின் நீளம் ஒரு மைல் இருபது அடி ஆகும்.

இந்த அணைக்கட்டு நீரைக் கொண்டு, முன் சாகுபடி செய்யப்பட்டு வந்த வயல்களைப் போல மூன்று மடங்கு மிகுதியான பரப்புள்ள நிலங்களைச் சாகுபடி செய்யலாம் என்று அதிகாரிகள் அறைகிறார்கள். இந்த அணைக்கட்டு நீரிலிருந்து மின்சாரம் உண்டாக்கப்படுகிறது. அம் மின் சாரம் மேட்டூருக்கும் சென்னைக்கும் இடையில் உள்ள இடங்களில் விளக்கெரிக்கப் பயன்படுகிறது. நீங்கள் இப் பெரிய அணைக்கட்டைச் சென்று காண்பது மிகவும் அவசிய மாகும்.

கேள்விகள்

1. அணைக்கட்டு என்பது யாது? அதன் அவசியம் என்ன?
2. மேட்டூர் அணைக்கட்டைப் பற்றி நீ யாது அறிவாய்?
3. அவ்வணைக்கட்டால் என்ன நன்மை உண்டாகிறது?
4. நீ அறிந்த வேறு அணைக்கட்டுகள் எவை?

பயிற்சி

1. இடைவிடாமல், கரைபுரண்டு, சமவெளி, மின்சாரம்— இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

2. முதல் பாராவில் உள்ள எ. ப. செ. கூறு.

3. இரண்டாம் பாராவில் உள்ள உயர்திணை, அஃறிணைப் பெயர்களை எழுது.

4. மூன்றாம் பாராவில் உள்ள ஐம்பால் பெயர்களை எழுது.

இலக்கணம்

வேற்றுமை—இராமன் வந்தான், இராமனைக் கண்டேன்—இந்த இரண்டு வாக்கியங்களிலும் 'இராமன், இராமனை' என்னும் பெயர்களைக் கவனி. 'இராமன்' என்பது ஒருவன் பெயர். அத்துடன் 'ஐ' சேர்வதால் 'இராமனை' என்பது உண்டாகிறது. முதற்பெயர்க்கும், 'இராமனை' என்பதற்கும் வேற்றுமை (வித்தியாசம்) உண்டாகி இருக்கிறது அன்றோ? இங்ஙனம் பெயர்ச் சொல்லின் பொருள் வேறுபடுதல் **'வேற்றுமை'** எனப்படும். அஃது எட்டு வகைப்படும்.

இராமன்—முதல் வேற்றுமை

இராமனை (ஐ)—இரண்டாம் வேற்றுமை

இராமனால், இராமனோடு, இராமனுடன் (ஆல், ஓடு, உடன்)—மூன்றாம் வேற்றுமை.

இராமனுக்கு (கு)—நான்காம் வேற்றுமை

இராமனில்	(இல்)	ஐந்தாம் வேற்றுமை
மலையிலிருந்து	(இருந்து)	
இராமனது	(அது)	ஆறாம் வேற்றுமை
இராமனுடைய	(உடைய)	
பெட்டியில்	(இல்)	ஏழாம் வேற்றுமை
இராமனிடம்	(இடம்)	
இராமன்கண்	(கண்)	

இராமன்! இராம! இராமா!—எட்டாம் வேற்றுமை (அழைக்கும் வேற்றுமை).

இப்பாடத்தில் வந்துள்ள வேற்றுமைப் பெயர்களை இம்முறைப்படி எடுத்து எழுது.

இயல்பான பெயர்ச் சொல்லோடு வேற்றுமையை உணர்த்தி வருபவை **'வேற்றுமை உருபுகள்'** எனப்படும்.

ஒவ்வொரு வேற்றுமை உருபுகளையும் கூறு.

6. மாணவர் தமிழ்க் கழகம்

புதிய சொற்கள் :—கழகம்—செயலாளன்—காரியதரிசி—தேர்ந்தெடுத்தார்கள் — நடவடிக்கை — கையெழுத்து—தலைவர் — ஏற்கப்பட்டது—தலைமை வகித்தனர்.

நான் ஐந்தாம் வகுப்பு மாணவன். என் பெயர் **கண்ணன்**. எங்கள் பள்ளிக்கூடத்தில் **மாணவர் தமிழ்க் கழகம்** உண்டு. நான் அதன் செயலாளன் (காரியதரிசி). ஆசிரியர் என்னிடம் ஒரு நோட்டுப் புத்தகம் கொடுத்துள்ளார். நான் அதில் நான்கு, ஐந்து-இவ்விரண்டு வகுப்புப் பிள்ளைகளின் பெயர்களை எழுதி இருக்கிறேன். அந்தப் பிள்ளைகளே என்னை இக்கழகச் செயலாளனாகத் தேர்ந்தெடுத்தார்கள்.

நான் மாணவர் தமிழ்க் கழகத்தை வெள்ளிக்கிழமை தோறும் மாலை 4-30 மணிக்குமேல் கூட்டுவேன். ஒவ்வொரு கூட்டத்திலும் மாணவர் சிலர் பேசுவர்; பள்ளிக்கூட ஆசிரியர் தலைமை வகித்துக் கூட்டத்தை நடத்துவர். சில நாட்களில் பிள்ளைகளே தலைமை வகிப்பதும் உண்டு. கூட்டம் ஆரம்பமானது முதல் முடியும்வரை எல்லாப் பிள்ளைகளும் அமைதியாக இருப்பார்கள்.

மாதத்திற்கு ஒரு முறை வெளியாரை வரவழைப்பது உண்டு. அவர் தலைமையில் பல பிள்ளைகள் பேசுவார்கள். ஆசிரியர்கள் நாங்கள் பேசுவதைக் கவனிப்பார்கள்; மறுநாள், எங்கள் பேச்சில் உண்டான குறைகளைத் திருத்துவார்கள். இம்முறையால் நாங்கள் திருத்தமாகப் பேசும் பழக்கத்தை அடைந்து வருகிறோம்.

நான் எனது கழக நோட்டுப் புத்தகத்தில், கூட்டம் கூட்டப்பட்ட தேதி, மாதம், வருஷம், தலைமை வகித்தவர் பெயர், பேசுபவர் பெயர்கள், பேசப்பட்ட விஷயங்கள் முதலிய எல்லா விஷயங்களையும் குறித்துள்ளேன். ஒவ்வொரு கூட்டத்துச் செய்தியையும் அடுத்த கூட்டத்தின் முதலில் வாசித்துத் தலைவரின் கையெழுத்தைப் பெற்று வருகிறேன். அதன் பொருள், முதற் கூட்டத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் பிள்ளைகளால்—கழக உறுப்பினரால் ஏற்கப்பட்டது என்பதே ஆகும்.

இதுவரையில் எட்டுக் கூட்டங்கள் நடந்துள்ளன: அவற்றின் விவரம் கீழே காண்க :—

	பேசின மாணவன்		பேசப்பட்ட பொருள்
1.	கோவிந்தன்	(4-ஆம் வகுப்பு)	'எனக்குத் தெரிந்த விலங்குகள்'
2.	தணிகாசலம்	(5-ஆம் வகுப்பு)	'நான் பார்த்த திருவிழா'
3.	கோபாலன்	(5-ஆம் வகுப்பு)	'ஆறுகளும் அவற்றின் பயன்களும்'
4.	ஜான்	(4-ஆம் வகுப்பு)	'மலைகள்'
5.	முருகன்	(4-ஆம் வகுப்பு)	'தீபாவளிப் பண்டிகை'
6.	கண்ணன்	(5-ஆம் வகுப்பு)	'கண்காட்சிச் சாலை'
7.	வேலன்	(5-ஆம் வகுப்பு)	'சாரணர் இயக்கம்'
8.	அப்துல்லா	(4-ஆம் வகுப்பு)	'நூல் நிலையம்'

இக் கூட்டங்களுக்கு ஆசிரியர் நால்வரும் மாணவர் மூவரும் தலைமை வகித்தனர். எட்டாம் கூட்டத்தன்று எங்கள் நகரசபைத் தலைவர் தலைமை வகித்தார். நாங்கள் பேசுவதைக் கண்டு, அவர் மிகுந்த களிப்பு அடைந்தார். உங்கள் பள்ளிக்கூடத்தில் தமிழ்க் கழகம் உண்டா?

கேள்விகள்

1. கழக நோட்டுப் புத்தகம் யாது? அதில் என்ன எழுதப் படும்?

2. செயலாளன் வேலை என்ன?

3. தமிழ்க் கழகம்-இதனால் மாணவர் பெறும் நன்மை என்ன?

4. கண்ணன் நடத்திய எட்டுக் கூட்டங்களில் பேசப்பட்ட விஷயங்கள் எவை?

பயிற்சி

1. அந்த எட்டு விஷயங்களுக்கும் குறிப்புகளைத் தயார் செய்.

2. ஒவ்வொன்றைப் பற்றியும் மும்மூன்று பாராக்களைக் கொண்ட கட்டுரைகள் எழுது.

3. இப்பாடத்தில் வந்துள்ள வேற்றுமை உருபுகளைச் சுட்டு.

4. இப்பாடத்தில் உள்ள உயர்திணை, அஃறிணைப் பெயர்களைக் கூறு.

5. ஆண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்—இவற்றுக்கு நான்கு உதாரணங்கள் இப்பாடத்திலிருந்து கூறு.

6. இப் பாடத்தில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களை எழுது.

7. முதல் இரண்டு பாராக்களில் உள்ள எ. ப. செ. கூறு.

8. மூவிடப் பெயர்களைக் குறி :—

(1) நான் படித்த போது நீ வந்தாய். (2) அவனை உன்னுடன் பார்த்த போது நான் மகிழ்ந்தேன். (3) அவள் அவரோடு வந்ததை நீ பார்த்தாயா?

இலக்கணம்

சொல் இலக்கணம் கூறுதல்—வாக்கியத்தில் வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் இலக்கணம் கூறுதல் (Parsing).

கண்ணன் கப்பலை ஓட்டினான்.

1. **கண்ணன்**—பெயர்ச்சொல், உயர்திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கை இடம், முதல் வேற்றுமை, 'ஓட்டினான்' என்னும் பயனிலைக்கு எழுவாய்.

2. **கப்பலை**—பெயர்ச்சொல், அஃறிணை, ஒன்றன்பால், ஒருமை எண், படர்க்கை இடம், இரண்டாம் வேற்றுமை, 'ஓட்டினான்' என்னும் பயனிலைக்குச் செயப்படுபொருள்.

3. **ஓட்டினான்**—வினைமுற்று, உயர்திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கை இடம், இறந்தகாலம், 'கண்ணன்' என்னும் எழுவாய்க்குப் பயனிலை.

குறிப்பு:—வினைச்சொல்லுக்கு வேற்றுமை இல்லை. பெயர்ச்சொல்லுக்குக் காலம் இல்லை.

7. எழுதும் பயிற்சி

புதிய சொற்கள்:—கீழ்க்கண்டவாறு—துண்டுத்தாள்—சண்முகம்—சன்மார்க்கம்—திருநீலகண்டபுரம்—சென்னை—பிரசங்க அறிக்கை—அன்புடையீர்—பிற்பகல்—வித்துவான்—திருக்குறள்—பொருள் பற்றி—இன்புறுமாறு—கரந்தை—ஐயன்மீர்—நிகழும்—பிரமாதி—யாழ்ப்பாணம்—பரமேஸ்வரக் கல்லூரி—சொற்பொழிவாளர்—தொல்காப்பியம்—கவியரசு—கரந்தை—சிவஞான சுவாமிகள்—குமரகுருபரர்—கைலாயம்—இறைவன்—திருவருள்—முன்னிட்டு—லக்கினம்—விக்ரம ஆண்டு—திருநிறை—நன்னிலம்—ஸ்ரீவாஞ்சியம்—திருக்கண்டீஸ்வரம்—பிராமிசரி நோட்டு—ரொக்கம்—இசைவு—சாக்ஷி.

அன்புள்ள பிள்ளைகளே! நீங்கள் கீழ்க்கண்டவாறு பலவகைத் துண்டுத் தாள்களை எழுதும் பயிற்சி பெறுதல் அவசியமானது. ஆதலால் இவற்றை நன்கு படித்துப் பழகுங்கள்; இவை போன்ற பல தாள்களையும் படித்துப் படித்தும் எழுதி எழுதியும் பழகுங்கள்.

I

சண்முக சன்மார்க்க சபை

திருநீலகண்டபுரம், சென்னை.

பிரசங்க அறிக்கை

அன்புடையீர்,

1940-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு லாயிட் ரோட் நகராண்மைக் கழகப் பள்ளியில் திருவாளர் வித்துவான் மா. இராசமாணிக்கம், B. O. L. அவர்கள் 'திருக்குறள்' என்னும்

பொருள் பற்றிப் பேசுவார்கள். தாங்கள் வந்து கேட்டு இன்புறுமாறு வேண்டுகிறேன்.

இங்ஙனம்:
ச. நித்தியானந்தன்,
செயலாளன்.

II

கரந்தைத் தமிழ்ச் சங்கம்
28-ஆம் ஆண்டு விழா

ஐயன்மீர்,

நிகழும் பிரமாதி ஆண்டு, ஆவணித் திங்கள், நாள் 3, 4 (19, 20—8—1939) சனி, ஞாயிறுகளில் ஷை விழாக் கொண்டாடப் பெறும். அது போது,

தலைவர்:

யாழ்ப்பாணத்துப் பரமேஸ்வரக் கல்லூரித் தலைவர் பெருமை மிக்க திரு. அ. நடேச பிள்ளை, B A., B.L., M.L.C. அவர்கள்.

முதல் நாள்

சொற்பொழிவாளர்: பொருள்:

1. திருவாளர், வித்துவான்
மா. இராசமாணிக்கம், B.O.L. அவர்கள்
—"தொல்காப்பியமும் சங்க நூல்களும்."

2. கரந்தைக் கவியரசு
R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள்
—"கலித்தொகை."

3. பண்டிதமணி
மு. கதிரேசச் செட்டியார் அவர்கள்
—"சிவஞான சுவாமிகள்."

இரண்டாம் நாள்

சொற்பொழிவாளர்: பொருள்:

1. ச. க. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள், M.A.
—"பண்டைத் தமிழர் நாகரிகம்."
2. வித்துவான், ஔவை,
சு. துரைசாமி பிள்ளை அவர்கள்-"தேவார மாண்பு."
3. பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்
—"குமரகுருபரர்."
4. சுவாமி விபுலானந்தா B. Sc. (London) அவர்கள்
—"கைலாயக் காட்சி."

III

திருமண அழைப்பு இதழ்

கடவுள் துணை

அன்புடையீர்,

இறைவன் திருவருளை முன்னிட்டு நிகழும் விக்ரம ஆண்டு ஆவணி மாதம் 15-ஆம் தேதி (30—8—'40) வெள்ளிக்கிழமை காலை 6-7½ மணிக்குள் கன்னி லக்கினத்தில்,

எனது மூத்த மகன் திருநிறை செல்வன் செங்குட்டுவனுக்கும்,	திருவாரூர், தியாகராஜ பிள்ளை அவர்கள் இளைய மகள் திருநிறை செல்வி அன்னக்கிளிக்கும்,

திருமணம் நடத்தப் பெரியோர் நிச்சயித்திருப்பதால், ஷை திருமணம் சென்னை-வண்ணாரப்பேட்டை வள்ளுவன் தெரு

2-ஆம் எண்ணுள்ள எனது இல்லத்தில் நடைபெறும். அவ்வமயம் தாங்கள் உற்றூர் உறவினருடன் வந்திருந்து மணத்தைச் சிறப்பித்து, மணமக்களை வாழ்த்தியருள வேண்டுகிறேன்.

தங்கள் நல்வரவை அன்புடன் எதிர் நோக்கும்
அன்பன்,
சென்னை, 15—8—1940. } கா. மயில்வாகனம் பிள்ளை.

IV

பத்திரம் (பாண்ட்)

15—8—1940 தஞ்சாவூர் ஜில்லா நன்னிலம் தாலூகா, ஸ்ரீவாஞ்சியம் கிராமத்தில் இருக்கும் வெ. ஷண்முக முதலியார் மகன், ஷ. விசுவநாத முதலியாருக்கு, ஷை ஜில்லா ஷை தாலூகா திருக்கண்டீச்சுரக் கிராமத்தில் உள்ள பு. குப்புமுத்து முதலியார் மகன் கு. அழகுமுத்து முதலியார் எழுதிக் கொடுத்த 'பாண்ட்' யாதெனில்,

நான் எனது மூத்த மகன் திருமணத்துக்காகத் தங்களிடம் ரொக்கமாகப் பெற்றுக் கொண்டது ரூ. 250/-. இந்த ரூபாய் 250-க்கும் மாதம் ஒன்றுக்கு நூற்றுக்கு 8 அணா வீதம் வட்டி சேர்த்து, கூடிய வட்டியும் முதலும் தங்களுக்காவது, தங்கள் இசைவு பெற்றவர்க்காவது வேண்டும் பொழுது கொடுக்கக் கடமைப்பட்டவன். இது என் முழு மனத்துடன் எழுதிக் கொடுக்கப்பட்டது.

கு. அழகுமுத்து முதலியார்.

சாக்ஷிகள் :

1. நல்லதம்பி பிள்ளை, திருக்கண்டீஸ்வரம்.
2. சிவகாமியா பிள்ளை, ஸ்ரீவாஞ்சியம்.
3. கோபால் நாயடு, நன்னிலம்.

பயிற்சி

1. மகன் திருமணத்திற்குத் தந்தை எழுதுகிற மாதிரி—திருமண அழைப்பு இதழ் ஒன்று வரை.

2. உங்கள் தமிழ் மாணவர் கழக ஆண்டு விழாவிற்கு அழைப்பிதழ் ஒன்று எழுதிக் காட்டு.

3. உன் வீட்டைச் சீர் செய்ய ரூ. 500-0-0 கடன் வாங்கியதாகப் பாண்ட் ஒன்று எழுது.

இலக்கணம்

தமிழ் எழுத்துகள்

(1) அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ—இப் பன்னிரண்டும் தாமாக இயங்கக் கூடிய எழுத்துகள். ஆதலால், இவை உயிர் எழுத்துகள் எனப்படும்.

(2) க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் —இப் பதினெட்டும் உயிர் எழுத்துகளின் உதவி இல்லாமல் இயங்க முடியாதவை. ஆதலால், இவை மெய் எழுத்துகள் எனப்படும்.

(3) க் + அ = க. இப்படி உயிரும் மெய்யும் சேர்வதால் உண்டாகும் புதிய எழுத்து 'உயிர் மெய் எழுத்து' எனப்படும். இவை (18 × 12) 216 ஆகும்.

(4) ஃ – இஃது ஆய்த எழுத்து. இது மூன்று புள்ளி வடிவமானது. ஆகவே, தமிழ் எழுத்துகள் (12 + 18 + 216 + 1) 247 ஆகும்.

க, சி, லு, பெ. டே, மௌ.—இவற்றைப் பிரித்துக் காட்டு.

8. இது என்ன திருவிழா ?

(உறியடி)



பயிற்சி

1. இத்திருவிழாவைப்பற்றி 15 வாக்கியங்கள் எழுது.

2. இவ்விஷயத்தை இரண்டு பாராக்களில் எழுது. அப் பாராக்களுக்குத் தலைப்புக் கொடு.

3. சவுக்கமரம், எண்ணெய், சட்டம், உறி, பணம், ஆடை, மரமேறல், தண்ணீர் அடித்தல், வழுக்குதல்—இவற்றைக் கொண்டு ஒரு சிறு கட்டுரை எழுது. அக் கட்டுரைக்குத் தலைப்புக் கொடு.

9. பத்திரிகைப் படிப்பு

புதிய சொற்கள் :—பேருதவி—அன்றாடம்—பல்வேறு—புரிகின்றன—வாசியாதிரார்—கொண்டுள்ளனர்—அவ்வாற்றுக்கு—ஏற்ப—செப்பஞ்செய்து—இலக்கியம்—சமயம் — சுதேசமித்திரன் — தினமணி —கலைமகள் — விடுதலை — பாரததேவி — நகரதூதன்—குடியரசு—ஆனந்தவிகடன்—குமரன்—தொழிலாளி—செந்தமிழ்—செந்தமிழ்ச் செல்வி—திருவிளக்கு—பிரியமுடைய – உகந்த—மேம்படும்.

இந்த உலகம் மிகவும் பெரியது; பல நாடுகளைக்கொண்டது ; பலவகை மக்களைக் கொண்டது ; பலவகை மொழிகளைக் கொண்டது ; பல்வேறு நாகரிகங்களைக் கொண்டது ; இவற்றை நாம் அறியப் பேருதவி செய்வன 'பத்திரிகைகள்' என்னும் 'செய்தித் தாள்களே' ஆகும். இவற்றால் நாம், கடல் கடந்துள்ள நாடுகளைப் பற்றிய விஷயங்களையும் அன்றாடம் அறிந்துகொள்கிறோம். வியாபாரச் செய்திகள், போர்ச் செய்திகள், பல்வேறு நிகழ்ச்சிகள் முதலியவற்றை அன்றாடம் அறியப் பத்திரிகைகள் பேருதவி புரிகின்றன.

மேல் நாடுகளில் பத்திரிகைகளின் நன்மையை ஒவ்வொருவரும் உணர்ந்திருக்கின்றனர். அவர்கள் தினந்

தோறும் பத்திரிகையை வாசியாதிரார். அவர்கள் ஒரு நாளில் செய்ய வேண்டும் பல வேலைகளுள் பத்திரிகை வாசித்தலையும் ஒன்றாகக் கொண்டுள்ளனர். அதனால், அவர்கள் அன்றாடம் உலக விஷயங்களை அறிந்துகொண்டு அவ்வவற்றுக்கு ஏற்பத் தங்கள் தொழில்களையும் வியாபாரத்தையும் செப்பம் செய்துகொள்கின்றனர்.

நமது தமிழ் நாட்டிலும் இத்தகைய செய்தித் தாள்கள் பல உண்டு. தினந்தோறும் வெளியாகும் பத்திரிகைகள், வாரந்தோறும் வெளிப்படும் பத்திரிகைகள், பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை வெளிவரும் பத்திரிகைகள், மாதம் ஒரு முறை வெளியாவன, மூன்று மாதங்கட்கு ஒரு முறை வெளியாவன எனப் பலவகை உண்டு. இவை சாதிப் பத்திரிகைகள், சமயப் பத்திரிகைகள், வியாபாரப் பத்திரிகைகள், விகடப் பத்திரிகைகள், படக்காட்சிப் பத்திரிகைகள், இலக்கியப் பத்திரிகைகள் எனப் பலவகை ஆகும்.

சுதேசமித்திரன், தினமணி, விடுதலை, பாரததேவி, தாருல் இஸ்லாம் முதலியன தினசரிப் பத்திரிகைகள். குடியரசு, நகர தூதன், ஆனந்த விகடன், விநோதன், குமரன் முதலியன வாரப் பத்திரிகைகள். இந்தியத் தொழிலாளி முதலிய பத்திரிகைகள் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை வருவன. செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி, கலைமகள், தமிழ்ப்பொழில் முதலியன மாதம் ஒருமுறை வெளியாகும் பத்திரிகைகள்.

இப் பத்திரிகைகள் பலவகைப்பட்ட செய்திகளை வெளியிடுதலால், அவ்வச் செய்திகளிற் பிரியமுடைய மக்கள் அவ்வப் பத்திரிகையைப் படித்துப் பயன் அடைகின்றனர். நீங்

கள் தினசரிப் பத்திரிகை ஒன்று தினந்தோறும் படித்தல் நலம்; அதில் உங்களுக்கு உகந்த செய்திகளைக் கத்திரித்து, உங்கள் 'செய்தி நோட்டுப் புத்தகத்'தில் ஒட்டி வைத்துக் கொள்ளுங்கள். வெளி நாட்டு மாணவர்களைப்பற்றிய செய்திகள், கதைகள், பல பள்ளிக்கூட நிகழ்ச்சிகள் முதலியன நீங்கள் படித்து அறியத்தக்கவை அல்லவா?

பத்திரிகைகளைத் தினமும் வாங்க இயலாதவர் பத்திரிகைப் படிப்பகம் (Reading Room) சென்று படிக்கட்டும். எங்ஙனமேனும் தினந்தோறும் செய்தித் தாள்களைப் படித்தல் வேண்டும் என்னும் உறுதி உங்களிடம் இருத்தல் வேண்டும். பத்திரிகைப் படிப்பால் உங்கள் அறிவு மேம்படும்.

கேள்விகள்

1. நாம் பத்திரிகைகளால் பெறும் நன்மை யாது?
2. நமது நாட்டில் உள்ள பத்திரிகைகள் எவை?
3. அவை எவ்வெப்பொழுது வெளியாவன?
4. மாணவர் பத்திரிகைப் படிப்பால் என்ன நன்மை பெறுவர்?
5. 'படிப்பகம்' என்பது யாது?

பயிற்சி

1. பேருதவி, அன்றாடம், பல்வேறு, ஏற்ப, உகந்த-இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்து எழுது:—

(1) மேல் நாடுகளில் —— நன்மையை —— உணர்ந்திருப்பர்.

(2) நமது தமிழ் —— இத்தகைய —— உண்டு.

(3) பத்திரிகைப் —— உங்கள் —— மேம்படும்.

3. முதல் பாராவில் உள்ள பெயர்ச் சொற்களுக்குத் திணை, பால், எண், இடம் கூறுக.

4. இரண்டாம் பாராவில் உள்ள வேற்றுமை உருபுகளைச் சுட்டு.

5. மூன்றும் பாராவில் உள்ள பெயர் எச்சங்களைக் கூறு.

6. நான்காம் பாராவில் உள்ள வினைமுற்றுகளைக் கூறு.

7. கடைசிப் பாராவில் உள்ள ஒருமை, பன்மை கூறு; எ. ப. செ. கூறு.

இலக்கணம்

1. உயிர் எழுத்துகள் பன்னிரண்டில், அ, இ, உ, எ, ஒ—குறுகிய ஓசை உடையவை (குறில்); ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ—நீண்ட ஓசை உடையவை (நெடில்).

2. மெய்யெழுத்துகள் பதினெட்டும் உச்சரிப்பால் மூன்று வகைப்படும்:

(1) க், ச், ட், த், ப், ற்—வல்லினம் (வலித்த ஓசை உடையவை)

(2) ங், ஞ், ண், ந், ம், ன்—மெல்லினம் (மெலிந்த ,,)

(3) ய், ர், ல், வ், ழ், ள்—இடையினம் (இடைத்தர ,,)

10. ஆட்டம்

புதிய சொற்கள் :—மாகாணத்தார் — அற்புதமாய் — ஆக்குகின்ருர்—பொற்புறு—பொலிவற்ருர் — பற்றின்றி—நலிவுற்ருர்—பெண்ணுரிமை—வரை மகள்—வழங்கினர்—கறை—பெண்ணடிமை—ஏர்சிர்குலேந்த—பார் அறிய—தலேயாலங்கானம்—இலச்சினே—அலேக் கழித்த—ஆணழகன்—வார்குழலீர் — நஞ்சுண்டார்—பக்தனென—வஞ்சமற்ருேன்.

1. அம்மானே



1. பற்பலமா காணத்தார் பாஷைகளேப் பண்படுத்தி
அற்புதமாய் நூற்கள்பல ஆக்குகின்ருர் அம்மானே!
அற்புதமாய் நூல்கள்பல ஆக்குகின்ருர் ஆமாயின்,
பொற்புறுநம் தமிழர்ஏன் பொலிவற்ருர்? அம்மானே!
நற்றமிழர் பற்றின்றி நலிவுற்ருர் அம்மானே!

2. பிறைஅணிந்த சிவபெருமான் பெண்ணுரிமை
[நன்குணர்ந்தே
வரைமகளுக் கிடப்பாகம் வழங்கினன்காண்
[அம்மானை!
வரைமகளுக் கிடப்பாகம் வழங்கினனே ஆமாயின்,
கறையுடைப்பெண் அடிமைஏன் காண்கிறதிங்
[கம்மானை?
கறையுடைய ஆடவர்செய் கொடுமைகாண் அம்மானை!

2. ஊசல்



ஏருடைய ஏழரசர் ஏற்றத்தைச் சீர்குலைத்துப்
பாரறியத் தலையாலங் கானத்தில் வென்றநெடுஞ்
சீர்செழியன் புகழ்பாடி ஆடாமோ ஊசல்!
சிறப்புடையான் சீர்பாடி ஆடாமோ ஊசல்!

2. இமயம்வரை படையெடுத்தே இமயத்தில்
[இலச்சினையை
அமைத்தங்கு ஆரியரை அலைக்கழித்த
[நெடுஞ்செழியற்(கு)
அமைந்தநற் புகழ்பாடி ஆடாமோ ஊசல்!
ஆணழகன் சீர்பாடி ஆடாமோ ஊசல்!

3. பந்து

1. சீர்குலைந்த சோழநாட்டைச் சீர்படுத்தி ஆண்டஎம்
ஆரணிந்த அரியபக்தன் அண்ணல் ராஜராஜனே
'வார்குழலீர்! அவன் வாழ்க' என்றுபந் தடித்துமே.
வாயாரப் புகழ்ந்தவனை வாழ்த்திப்பந் தடித்துமே.

2. தஞ்சையில் பெரியகோவில் தழைத்திடவே செய்தவன்
நெஞ்சையள்ளும் தேவாரப் பாடல்கள்நேர்
[செய்தவன்
நஞ்சுண்டார் பக்தனென நாடிப்பந் தடித்துமே
வஞ்சமற்றோன் வாழ்கெனநாம் வாழ்த்திப்பந்
[தடித்துமே.

—வித்வான் மா. இராசமாணிக்கம் B.O.L.

அரும்பொருள் :—1. பொற்புறு—அழகு பொருந்திய, பொலி வற்றார்—அழகு குன்றினர் (சிறப்பிழந்தார்), பற்றின்றி—தாய் மொழிமீது கவலை இல்லாமல், நலிவுற்றார்—துன்பம் அடைந்தார்.

2. வரைமகள்—பார்வதி, வழங்கினன்—தந்தான், கறை—களங்கம், பெண் அடிமை—பெண்ணை அடிமையாக நடத்துதல், காண் கிறது—காணப்படுகிறது, கறை—குற்றம்.

1. ஏர்—அழகு, ஏழரசர்—சேரன், சோழன், சிற்றரசர் ஐவர்; ஏற்றம்—உயர்வு, பார்—உலகம், சீர்—சிறப்புடைய, நெடுஞ்செழி யன்—பாண்டியன் பெயர். இவன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் என்பவன்.

2. இதில் சொல்லப்படும் நெடுஞ்செழியன் வேறு. இவன் ஆரி யப்படை கடந்த நெடுஞ்செழியன். இலச்சினை—முத்திரை (கயல் மீன் முத்திரை பாண்டியர்க்கு உரியது.)

1. ஆர்—ஆத்திமாலை (இது சோழர்க்கு உரியது; பாண்டி யர்க்கு வேப்பம்பூ மாலை உரியது; சேரர்க்குப் பனம்பூமாலை உரியது.) வார்குழலீர்—நீண்ட கூந்தலையுடையீர்! அடித்தும்—அடிப்போம், நேர் செய்தவன்—முறைப்படுத்தியவன், நஞ்சுண்டார்—சிவபெரு மான், வஞ்சம்—வஞ்சனை.

கேள்விகள்

1. தமிழ்மொழி வலிமை குறைந்திருப்பதற்குக் காரணம் என்ன?

2. சிவபெருமானைப்பற்றி அம்மானைப் பாட்டில் யாது கூறப்பட்டுள்ளது?

3. ஊசல், அம்மானை—யாவை?

4. ஊசற்பாக்களில் யார் யார் குறிப்பிடப்பட்டவர்?
அவர்கள் செய்த வீரச் செயல்கள் எவை?

5. நீ, இராஜராஜனைப் பற்றி யாது அறிவாய்?

பயிற்சி

1. பண்படுத்தி, அற்புதமாய், ஏற்றம், சீர்ப்படுத்தி—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துப் படி.

2. தேவாரம், ஆரியர், தஞ்சாவூர் பெரிய கோவில்—குறிப்பு எழுது.

இலக்கணம்

1. இரண்டாம் வேற்றுமை உருபுக்கு (ஐ—க்கு) முன் வல்லின எழுத்துகளில் தொடங்கப்படும் சொல் வந்தால், அந்த எழுத்து இரட்டும்.

கண்ணனை + கண்டேன் = கண்ணனைக் கண்டேன்.
கண்ணனை + சந்தித்தேன் = கண்ணனைச் சந்தித்தேன்.
பணத்தை + தந்தேன் = பணத்தைத் தந்தேன்
கண்ணனை + பார்த்தேன் = கண்ணனைப் பார்த்தேன்.

2. நான்காம் வேற்றுமை உருபுக்கு (கு—வ்வுக்கு) முன் வரும் வல்லின எழுத்து இரட்டும்.

கண்ணனுக்கு + கொடு = கண்ணனுக்குக் கொடு
கண்ணனுக்கு + சோறு = கண்ணனுக்குச் சோறு
கண்ணனுக்கு + தந்தேன் = கண்ணனுக்குத் தந்தேன்
கண்ணனுக்கு + பால் = கண்ணனுக்குப் பால்.

சேர்த்துப்படி :—வரதனை + பார், கந்தனை + கேள், முருகனுக்கு + தா. முருகனை + சந்தி, முருகனுக்கு + கொடு, வேலனை + கேள்.

11. சேரன்—செங்குட்டுவன்

(மௌன வாசிப்பு)

புதிய சொற்கள் :—நற்சோணை—செதுக்க —குற்றமற்றவன் —நிரூபித்தான்—தவற்றை—கோப்பெருந்தேவி—மாண்டாள் — தணியாத—நெடுவேள் குன்றம்—விமானம்—விண்ணுலகம்— மலைவாணர்—வேந்தன்—செப்பினர்—வழிநெடுக—முறியடித்தான் — கயவாகு—இலண்டன்—பொருட்காட்சிச்சாலை — பக்தன் — தானதருமம்—வரலாறுகிய—சிலப்பதிகாரம்.

சேர நாடு என்பது கொச்சி, திருவாங்கூர்ச் சமஸ்தானங்களும் மேல் கடற்கரைப் பிரதேசமும் சேர்ந்த நிலப் பரப்பாகும். இந்நாட்டுத் தலைநகரம் வஞ்சி மாநகரம். சேர அரசருள் சிறப்புப் பெற்றவன் **செங்குட்டுவன்** என்பவன். அவன் தம்பியே **இளங்கோ அடிகள்.**

செங்குட்டுவன் கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் வாழ்ந்தவன். அவன் பல நாடுகளை வென்ருன்; சோழ—பாண்டியரை அடக்கி ஆண்டான்; கப்பல்களைக் கடலிற் செலுத்திப் பகைவரை வென்ருன்; தன் தாயான **நற்சோணை** என்பவள் உருவத்தைச் செதுக்க இமயத்தில் இருந்து கல்லைக் கொணர்ந்தான்.

செங்குட்டுவன் காலத்திற்றுன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் பாண்டிய நாட்டை ஆண்டுவந்தான். அவன் கோவலனைக் கள்வன் எனக் கருதிக் கொல்லச் செய்தான். கோவலன் மனைவியான **கண்ணகி,** தன் கணவன் குற்றமற்றவன் என்பதை நிரூபித்ததும், தன் தவற்றை

உணர்ந்த பாண்டியன் உயிர் விட்டான். அவனது கோப் பெருந் தேவியும் அப்பொழுதே மாண்டாள்.

கோபம் தணியாத கண்ணகி, மதுரையை எதிர்த்துச் சேரநாட்டை அடைந்தாள்; நெடுவேள் குன்றம் அடி வைத்து ஏறினள்; அங்கு ஒரு மரத்தடியில் நின்றாள். அங்கு அவளது கணவன் தெய்வ விமானத்தில் வந்து அவளை விண்ணுலகம் அழைத்துச் சென்றான்.

இக் காட்சியைக் கண்ட மலைவாணர், தம் வேந்தனான செங்குட்டுவனிடம் செப்பினர். அவன் மனைவியான **இளங்கோ வேண்மாள்** கண்ணகிக்குக் கோவில் எடுத்து வழி



பட விரும்பினள். அரசன் கண்ணகியின் உருவத்தைச் செதுக்கக் கல் கொணர இமயம் நோக்கிப் பெரும்படை யுடன் புறப்பட்டான். வழிநெடுக இருந்த அரசர் பலர் அவனுக்கு மரியாதைகள் செய்து நண்பராயினர். ஆனால், கங்கைக்கு வடக்கே இருந்த அரசர்கள் அவனை எதிர்த்தார் கள். செங்குட்டுவன் யானைக் கூட்டத்துள் பாயும் சிங்கம்

போல அவர்கள் படைமீது பாய்ந்து, முறியடித்தான்; இமயமலையிலிருந்து கல்லைக்கொண்டு வஞ்சி மாநகரத்தை அடைந்தான்.

கண்ணகிக்குக் கோவில் கட்டப்பட்டது; விழாச் சிறப்பாக நடைபெற்றது. அவ்விழாவிற்கு இலங்கை அரசன் கயவாகுவும், சோழ பாண்டியரும் பிற அரசரும் வந்திருந்தனர். அவர்கள் தங்கள் நாடுகளில் கண்ணகியைக் கோவில் கட்டி வழிபட்டனர். இலங்கையில் இருந்த கண்ணகியின் உருவச்சிலை இப்போது இலண்டன் பொருட் காட்சிச் சாலையில் இருக்கின்றது.

செங்குட்டுவனைக் கண்ணகித் தெய்வம் வாழ்த்தியது. செங்குட்டுவன் சிறந்த சிவ பக்தன்; புகழ் பெற்ற போர் வீரன்; நல்ல ஒழுக்கம் மிக்கவன்; புலவர்களை ஆதரித்தவன்; தான தருமங்களிற் சிறந்தவன். அவன் ஐம்பது ஆண்டுகள் அரசாண்டான். அவன் காலத்தில் பாடப்பட்டதே கோவலன் கண்ணகி வரலாறாகிய **சிலப்பதிகாரம்** என்பது.

கேள்விகள்

1. சேரநாடு—யாது?
2. செங்குட்டுவன் வீரச் செயல்கள் எவை?
3. கண்ணகி தெய்வமானாள்.—எப்படி?
4. செங்குட்டுவன் வடநாட்டு யாத்திரையை விளக்கு.
5. செங்குட்டுவன் குணாதிசயங்கள் எவை?
6. பத்தினியைத் தொழ வந்த அரசர்கள் யாவர்? அவர்கள் என்ன செய்தனர்?

பயிற்சி

1. செதுக்க, தணியாத, வழிநெடுக, வரலாறு—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

2. தணியும் × தணியாத
விண் × மண்
} இவை எதிர்ப்பதங்கள். இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

3. முதல் இரண்டு பாராக்களில் உள்ள அறுவகைப் பெயர்களையும் எழுது.

4. மூன்றும் பாராவில் உள்ள எ. ப. செ. எழுது.

5. நான்கு-ஐந்தாம் பாராக்களில் உள்ள பெயர்ச்சொற்களை எழுதி, அவற்றுக்குத் திணை, பால், எண், இடம், வேற்றுமைகள் எழுது.

6. ஆறும் பாராவில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயர் எச்சம் எழுது.

7. ஏழாம் பாராவில் உள்ள எ. ப. செ. கூறு.

8. இப்பாடத்தை **மௌனமாகப்** படி; பாராக்களுக்குப் பொருத்தமான **தலைப்புக்** கொடு.

9. இப் பாடத்தை 15 வரிகளில் சுருக்கி எழுது.

10. சேரநாடு—செங்குட்டுவன் வீரச் செயல்கள்—அவனுடைய குணாதிசயங்கள்: இம்மூன்று குறிப்புகளைக் கொண்டு மூன்று பாராக்களில் **கட்டுரை** ஒன்று எழுது.

இலக்கணம்

1. அந்த, இந்த, எந்த
2. அங்கு, இங்கு, எங்கு
3. அப்படி, இப்படி, எப்படி
} இவற்றின் முன்வரும் வல்லின எழுத்து இரட்டும்.

1. அந்த + காகம் = அந்தக் காகம்
இந்த + பெண் = இந்தப் பெண்
எந்த + தாய் = எந்தத் தாய்
அந்த + சபை = அந்தச் சபை

2. அங்கு + காண் = அங்குக் காண்
இங்கு + சந்தி = இங்குச் சந்தி
எங்கு + தந்தாய் = எங்குத் தந்தாய்
அங்கு + பார் = அங்குப் பார்

3. அப்படி + கேள் = அப்படிக் கேள்
இப்படி + சாதித்தான் = இப்படிச் சாதித்தான்
எப்படி + தந்தான் = எப்படித் தந்தான்
அப்படி + படி = அப்படிப் படி

12. கட்டுரை எழுதுதல்

புதிய சொற்கள் :—தக்கபடி—முறைப்படுத்தி — அமைப்பு — அமைதி—இலக்கணச் செய்தி—பல்லவ அரசர் — சிற்பங்கள்—தேர்வு—மஹாபலிபுரம்—செதுக்கப்பட்டு—கவர்ந்தன—காட்சிகள்.

பிள்ளைகளே, நீங்கள் இதுவரை அறிந்துகொண்ட இலக்கணச் செய்திகளின் உதவிகொண்டு, கீழ்வரும் பொருள் பற்றிக் கட்டுரை ஒன்று எழுதுங்கள்; முதலில் குறிப்புகளைத் தயார் செய்து கொள்க; குறிப்புகளின் எண்ணிக்கைக்குத் தக்கபடி பாராக்களை முறைப்படுத்தி, வார்த்தைக்கு வார்த்தை இடம் விட்டு எழுதுங்கள்; எழுதிய பின் வாக்கிய அமைப்பு, பொருள் அமைதி, இலக்கண அமைதி முதலியவை இருக்கின்றனவா என்பதைக் கவனியுங்கள்; எழுதியதை இரண்டு மூன்று முறை நன்ருய்க் கவனித்துப் படித்துத் திருத்துங்கள்; இவ்வளவும் முடிந்த பிறகே உங்கள் கட்டுரையை ஆசிரியரிடம் காட்டுங்கள்.

கோடை விடுமுறையைக் கழித்த விதம்

குறிப்புகள் :—1. கோடை விடுமுறை—யாது ?

2. அவ்விடுமுறையில் செய்தவை—

(i) மஹாபலிபுரம்

(ii) காஞ்சிபுரம்

3. அவற்ருல் அடைந்த நன்மை

4. முடிவு

கட்டுரை

1. ஏப்ரல், மே, ஜூன் மாதங்கள் கோடைக்கால மாதங்கள் ஆகும். எங்கள் பள்ளிக்கூடம் ஏப்ரல் 21-ஆம் தேதி

முதல் ஜூன் 20-ஆந் தேதி முடிய மூடப்பட்டது. ஏப்ரல் 20-ந்தேதியன்றே நான் ஆண்டுத் தேர்வில் தேர்ச்சிபெற்ற தாக அறிவிக்கப்பட்டது. இப்படி, ஆண்டு இறுதியிலேயே பரீட்சை முடிவைத்தெரிவித்தல் எங்கள் பள்ளிக்கூட வழக் கம் ஆகும்.

2. நான் அடுத்த நாள் சென்னையை விட்டுப் புறப்பட் டேன்; என் மாமன் இருந்த மஹாபலிபுரம் சென்றேன்; அங்குப் பதினைந்து நாள் தங்கி இருந்தேன். என் மாமன் என்னை அழைத்துச் சென்று, அங்குள்ள பாண்டவர் இர தங்கள், பழைய விளக்குக் கூண்டு, புதிய விளக்குக் கூண்டு, கடற்கரையில் உள்ள பழைய கற்கோவில், பாறையில் செதுக்கப்பட்டு உள்ள சிற்பங்கள் முதலியவற்றைக் காட்டி விளக்கினர். அவை பல்லவ அரசர்களால் செய்யப்பட் டவையாம். பல்லவ அரசர்களே நம் நாட்டில் முதன் முதலில் கற்கோவில்களைக் கட்டியவர்களாம். அவர்கள் காலத்தில் மஹாபலிபுரம் சிறந்த துறைமுகப் பட்டினமாக விளங்கிய தாம். நான், என் மாமன் அவ்விடத்தைப்பற்றிக் கூறிய அனைத்தையும் எனது குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் கொண்டேன்.

நான், மே மாதம் 6-ஆந் தேதி என் அக்காள் இருக்கும் காஞ்சிபுரத்தை அடைந்தேன். நான் அதற்குமுன் காஞ்சி புரம் சென்றதில்லை; அங்கு அந்த மாதம் முடிய இருந்தேன். என் மாமன் என்னை அழைத்துச் சென்று அவ்வூரில் உள்ள எல்லாக் கோவில்களையும் மண்டபங்களையும் சிற்பங் களையும் காட்டினர். அக் கோவில்களில் பல பல்லவ அரசர்களாற்றான் கட்டப்பட்டவை. கோவில் சிற்பங்கள்

என் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன. என் மாமன் கூறிய எல்லா விவரங்களையும் என் குறிப்புப் புத்தகத்தில் குறித்துக்கொண்டேன்.

3. நான் சென்னையை அடைந்ததும், என் குறிப்புப் புத்தகத்தில் உள்ளவற்றை என் பெற்றோரிடம் படித்துக் காட்டி விளக்கினேன்; என் நண்பர் பலரிடமும் கூறினேன். அவர்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள். இந்த இரண்டு இடங்களில் நான் கண்ட காட்சிகளால், நமது தமிழ் நாட்டுக் கோவில் அமைப்பு, சிற்பத் திறமை, கட்டட அமைப்பு, பல்லவர் ஆட்சி முறை முதலிய சரித்திர சம்பந்தமான பல விஷயங்களை உணர்ந்தேன். சரித்திரப் படிப்பிற்கு இக் காட்சிகள் மிக்க உதவி புரிகின்றன அல்லவா?

4. நான் இங்ஙனமே இனி ஒவ்வொரு விடுமுறையிலும் சிறந்த இடங்களுக்குச் சென்று பார்வையிட வேண்டும் என்று முடிவு செய்துகொண்டேன்; என் விருப்பம் நிறைவேற இறைவனை வேண்டுகின்றேன்.

கேள்விகள்

1. கட்டுரை எவ்வாறு எழுத வேண்டும்?
2. குறிப்புகள் என்பன யாவை?

பயிற்சி

1. நீ, சென்ற கோடை விடுமுறையில் செய்த வேலைகளைப் பற்றி ஒரு கட்டுரை வரை.

2. இக்கட்டுரையின் முதல் இரண்டு பாராக்களில் உள்ள எ. ப. செ. எழுது.

3. மூன்றும் பாராவில் உள்ள வேற்றுமை உருபுகளைக் கூறு.

4. நான்காம் பாராவில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் கூறு.

5. இப்பாடத்தில் வந்துள்ள அறுவகைப் பெயர்களையும் கட்டம் போட்டு எழுது.

6. இப்பாடத்தில் உள்ள உயர்திணைப் பெயர்களையும் அஃறிணைப் பெயர்களையும் கட்டம் போட்டு எழுது.

7. ஒருமை, பன்மைப் பெயர்களைக் கட்டம் போட்டு எழுது.

8. 'நான் பல்லவர்கள் கட்டிய கோவில்களைக் கண்டேன்.'—சொற்களுக்குச் 'சொல் இலக்கணம்' கூறு.

இலக்கணம்

முடிந்த பொருளைத் தரும் வினைச்சொல் **வினைமுற்று** எனப்படும்.

போனான், வருவான், படிக்கிறான்—வினைமுற்றுகள்.

முடிவு பெறாத வினைச்சொல் **எச்சம்** எனப்படும்.

போன, போய், வந்து, படித்து, படிக்கிற—எச்சங்கள்.

இவற்றுள், பெயரைத் தழுவும் எச்சம் **பெயர் எச்சம்** எனப்படும்.

வினையைத் தழுவும் எச்சம் **வினை எச்சம்** ஆகும்.

(i) **வந்த** பையன்—பெயர் எச்சம்.

(ii) **வந்து** போனான்—வினை எச்சம்.

இப்பாடத்தில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களை எடுத்து எழுது.

1. ஆக, ஆகி, ஆய் இவற்றில் முடியும் சொற்களுக்கு முன் வரும் வல்லின எழுத்து மிகும்.

நல்லவனாக + போனான் = நல்லவனாகப் போனான்.

நல்லவனாகி + போனான் = நல்லவனாகிப் போனான்.

நல்லவனாய் + போனான் = நல்லவனாய்ப் போனான்.

2. வகை, வித, எல்லா—இவற்றின் முன் வரும் வல்லின எழுத்து மிகும்.

பலவகை + கதைகள் = பலவகைக் கதைகள்

பலவித + கதைகள் = பலவிதக் கதைகள்

எல்லா + கதைகள் = எல்லாக் கதைகள்

13. காவிரிப்பூம் பட்டினம்

புதிய சொற்கள் :—பூபாகம்—பிரதேசம் — மாயூரம்—தாலுகா—விளங்கின—பொலிவுற்று—இலங்கின—சிறப்புற்று—ஒருபால்—செய்பொருள்—செல்வநிலை—செவ்வியின்—நவமணி—இரத்தினம்—சுங்கச்சாவடி — துறைமுகம் — இந்திர விழா — ஆங்காங்கு—தேவலோகம்—மத வாதிகள்.

சோழ நாடு என்பது தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களும் கிழக்குக் கடற்கரைப் பிரதேசமும் சேர்ந்த பூபாகம் ஆகும். இதன் பழைய தலைநகரம் காவிரிப்பூம் பட்டினம் என்பது. அது மாயூரம் தாலுகாவில் காவிரியாறு கடலில் கலக்கும் இடத்தில் அமைந்திருந்தது. அது ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்குமுன் கடலில் மூழ்கிவிட்டது. அது இருந்த இடத்திற்கு அருகில் இப்போது ஒரு கிராமம் இருக்கிறது. அதற்குக் 'காவேரிப் பட்டினம்' என்பது பெயர்.

கடல் கொண்ட காவிரிப்பூம் பட்டினம் சோழர் தலைநகரமாக விளங்கின காலத்தில் எப்படி இருந்தது? அது சேரரது வஞ்சி மாநகரைப் போலவும், பாண்டியரது மதுரை மாநகரம் போலவும் பொலிவுற்று விளங்கியது. அந்நகரம் கிழக்கே கடலாலும் ஏனைய மூன்று பக்கங்களிலும் நிலத்தாலும் சூழப்பட்டு இருந்தது. நகரத்தின் நடுவில் சோழர் கோவில் சிறப்புற்று விளங்கி இருந்தது. அதனைச் சுற்றிலும் உத்தியோகஸ்தர் வாழும் தெருக்கள் இருந்தன. அவற்றைச் சுற்றிப் பலவகை வியாபாரிகள் வசிக்கும் தெருக்களும் கடை வீதிகளும் இலங்கின.

கடை வீதியில் ஒருபால் சோழ நாட்டு விளைபொருள்களும் செய்பொருள்களும் பிற தமிழ் நாட்டுப் பொருள்களும் இருந்தன; மற்றொருபால் கடல் வழியே வந்த விளைபொருள்களும் செய்பொருள்களும் இருந்தன. ஒவ்வொரு கடைக்கு முன்பும் 'இஃது இன்ன கடை' என்பதை அறிவித்தற்கு உரிய கொடி இருந்தது. இரத்தின வகைகள், பொன் வகைகள், நவமணிகள் இவற்றை உடைய கடைகள் பல அந் நகரத்தின் செல்வ நிலையைச் செவ்விதின் விளக்கி நின்றன.

கடற்கரையில் பெரிய அழகிய துறைமுகம் இருந்தது. அங்கு வெளி நாடுகளிலிருந்து கப்பல்கள்மூலம் வந்த கண்ணாடி, சாராயம், பட்டாடைகள் முதலியன பெட்டிகளிற் குவிந்து கிடந்தன. சோழ நாட்டுப் பொருள்கள் பலவும் மூட்டைகளாகக் கட்டப்பட்டு ஏற்றுமதிக்குத் தயாராக இருந்தன. அம் மூட்டைகள்மீது சோழரது 'வில் கொடி' முத்திரை இடப்பட்டு இருந்தது. துறைமுகத்தை அடுத்துச் 'சுங்கச் சாவடி' இருந்தது. வெளி நாட்டு வியாபாரிகள் துறைமுகத்தை அடுத்திருந்த பெரிய மாளிகைகளில் வாழ்ந்துவந்தனர்.

இத்தகைய பெருஞ் சிறப்பு வாய்ந்த காவிரிப்பூம் பட்டினத்தில் ஆண்டுக்கு ஒருமுறை சித்திரை மாதத்தில் இந்திரனுக்குத் திருவிழா நடத்தப்படும். அதற்கு 'இந்திர விழா' என்பது பெயர். அஃது இருபத்தெட்டு நாள் நடக்கும். அந் நாட்களில் அந் நகரம் தேவலோகமாக விளங்குமாம். நகரம் முழுவதும் அலங்கரிக்கப்பட்டு இருக்கும்; கோவில்களில் பூசைகள் நடைபெறும்; மத வாதிகள் ஆங்

காங்குப் பிரசங்கம் செய்துகொண்டு இருப்பார்கள். இசையில் வல்ல பெண்கள் அரங்குகளில் இசை விருந்து அளிப்பார்கள்; நடிகர்கள் நடனம் செய்வார்கள்; தேவரும் வெளி நாட்டாரும் அந் நகரத்தில் வந்திருந்து திருவிழாவில் கலந்து கொள்வார்கள்.

இப் பெருமை பெற்ற காவிரிப்பூம் பட்டினம் அழிந்தமையால், அக் கால நாகரிகத்தைப் பற்றியோ—கட்டட அமைப்பு முதலியவற்றைப் பற்றியோ இன்றுள்ள நாம் அறிந்து மகிழக் கூடவில்லை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 MAR 1942
MADRAS

கேள்விகள்

1. சோழ நாடு எது?
2. காவிரிப்பூம் பட்டினம் எங்கு இருந்தது?
3. அந்த நகர அமைப்பைக் கூறுக.
4. கடை வீதிகளில் இருந்த பொருள்கள் எவை?
5. துறைமுகத்தில் இருந்த பொருள்கள் எவை?
6. 'இந்திர விழா' என்பது யாது?
7. நீ இப் பாடத்தால் அறியும் செய்திகள் எவை?

பயிற்சி

1. நீ இப் பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்கள் எவை? அவற்றை உன் சொந்த வாக்கியங்களில் பயன்படுத்து.

2. முதல் பாராவில் உள்ள பெயர்ச் சொற்களைக் கூறு.

3. இரண்டாம் பாராவில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களைக் கூறு.

4. மூன்றும் பாராவில் உள்ள எ. ப. செ. கூறு.

5. நான்காம் பாராவில் உள்ள ஒருமை, பன்மைகளைக் கூறு.

6. ஐந்தாம் பாராவில் உள்ள பெயர்ச் சொற்கட்குப் பால் கூறு. (கட்டம் போட்டு எழுது.)

7. ஆரும் பாராவில் உள்ள மூவிடப் பெயர்களைக் கூறு.

8. இப் பாடத்தை மௌனமாகப் படி; பாராக்களுக்குத் தலைப்புக் கொடு.

9. இப் பாடத்தைக் கீழ்வரும் குறிப்புகளைக் கொண்டு ஒரு கட்டுரையாக எழுது :—(1) சோழ நாடு (2) தலைநகர அமைப்பு (3) கடைவீதிகள் (4) துறைமுகம் (5) இந்திர விழா (6) முடிவு.

10. நீ பார்த்த ஒரு நகரத்தைப்பற்றிக் கீழ்வரும் குறிப்புகளைக் கொண்டு ஒரு கட்டுரை வரை :—(1) நகர அமைப்பு (2) கடை வீதி (3) கோவில்கள் (4) மக்கள் வாழ்க்கை (5) முடிவு.

இலக்கணம்

ஒரு வினை முற்றையோ, வினையெச்சத்தையோ, பெயரெச்சத்தையோ கொடுத்தால், மற்ற இரண்டையும் சொல்லத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். அதற்கு உதவியாகக் கீழ்வருவனவற்றை அறிந்து கொள் :—

எண்	வினைமுற்று	வினை எச்சம்	பெயர் எச்சம்
1.	போனான்	போய்	போன
2.	வந்தாள்	வந்து	வந்த
3.	படித்தார்	படித்து	படித்த
4.	ஆடினது	ஆடி	ஆடின
5.	எழுந்தன	எழுந்து	எழுந்த

கீழ் வருவனவற்றிற்கு உரிய ஏனை இரண்டும் கூறு :—

எண்	வினைமுற்று	வினை எச்சம்	பெயர் எச்சம்
1.			ஓடின
2.		அழுது	
3.	தொழுதாள்		
4.		மடங்கி	
5.			தடித்த

14. வெளிநாட்டு வாணிபம்

புதிய சொற்கள் :—அரேபியா—சிரியா—அபிஸீனியா—எகிப்து—இத்தாலி—கிரீஸ்—சாராயம் — அண்மை—கப்பல் கப்பலாக — பிண்ணுக்கு — குடியேறி — ரப்பர் — தேயிலை — பொருளாதார நிலைமை—சீர்படும்—யாழ்ப்பாணம்—இலங்கைத் தீவு.

நமது நாட்டிற் குள்ளேயே பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அனுப்புதலும் வரவழைத்தலும் **உள்நாட்டு வாணிபம்** எனப்படும். அதுபோலவே நமது நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குப் பொருள்களை அனுப்புதலும் அந் நாடுகளிலிருந்து நம் நாட்டிற்குப் பொருள்களை வரவழைத்தலும் **வெளிநாட்டு வாணிபம்** எனப்படும். உள்நாட்டு வியாபாரத்தில் பேருதவி செய்வன புகைவண்டிகள். அவை போல வெளிநாட்டு வியாபாரத்தில் பேருதவி புரிவன கப்பல்கள் ஆகும்.

பண்டைத் தமிழ் நாட்டிலிருந்து முத்து, மயில் தோகை, யானைத் தந்தம், மிளகு, பொன் நகைகள், அரிசி, சந்தன மரம், தேக்க மரம் முதலியன அரேபியா, சிரியா, அபிஸீனியா, எகிப்து, இத்தாலி, கிரீஸ் முதலிய நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டன. அந் நாடுகளிலிருந்து குதிரைகள், கண்ணுடிப் பொருள்கள், படங்கள், சாராய வகைகள், பட்டாடைகள் முதலியன தமிழகத்தில் இறக்குமதி ஆயின.

இங்ஙனமே இன்றும் இவ் வெளிநாட்டு வாணிபம் நடைபெற்று வருகிறது. இன்று எல்லா அயல் நாடுகளிலிருந்தும் இந்தியாவிற்குப் பொருள்கள் கப்பல் கப்பலாக வந்து குவிகின்றன. இங்கிருந்து அரிசி, வேர்க்கடலை,

பஞ்சு, பிண்ணுக்கு வகைகள், எரு வகைகள், எண்ணெய் வகைகள் முதலியன அவ் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி ஆகின்றன.

இந்தியாவுக்குத் தெற்கே அண்மையில் உள்ள இலங்கைத் தீவிலிருந்து தேங்காய், தேயிலை, ரப்பர் முதலியவை நம் நாட்டிற்கு அனுப்பப்படுகின்றன. இங்கிருந்து அரிசி முதலிய தானிய வகைகளும் பிறவும் இலங்கைக்கு ஏற்றுமதி ஆகின்றன. தமிழ் மக்கள் இலங்கைத் தீவிலும் அதன் வடக்கே உள்ள யாழ்ப்பாணம் என்னும் இடத்திலும் குடியேறி வாழ்ந்து வருகின்றனர். ஆயிரக் கணக்கான தமிழர் அங்குக் குடியேறித் தேயிலைத் தோட்டங்களிலும் ரப்பர்த் தோட்டங்களிலும் வேலை செய்து வருகின்றனர்.

பட்டாடைகள், பருத்தி ஆடைகள், இரும்புச் சாமான்கள், பெப்பர்மின்ட் வகைகள், பான வகைகள், எழுதுகோல் வகைகள், கண்ணாடி, சீப்பு முதலிய நூற்றுக் கணக்கான பொருள்கள் அயல் நாடுகளிலிருந்து நமது நாட்டில் இறக்குமதி ஆகின்றன. ஏற்றுமதியும் இறக்குமதியும் சிறந்துள்ள நாடே 'வியாபார நாடு' என்று கூறப்படும். பிற நாடுகள் பொருள்களைச் செய்து நமக்கு ஏற்றுமதி செய்கின்றன. ஆனால் நாமோ, பொருள்களைச் செய்யும் சாமான்களையே பெரிதும் ஏற்றுமதி செய்கிறோம். அவற்றைக் கொண்டு நாமே பொருள் செய்ய அறிதல் மிக்க நன்மையைத் தரும்; நமது செல்வம் வெளிநாடுகளுக்கு மிகுதியாகச் செல்லாது. அந்நாளே நமது பொருளாதார நிலைமை சீர்படும் நன்னாள் ஆகும்.

கேள்விகள்

1. உள்நாட்டு வாணிபம், வெளிநாட்டு வாணிபம் என்பன யாவை?

2. பண்டைத் தமிழ்நாடு எந்நாடுகளோடு வாணிபம் செய்தது?

3. அஃது ஏற்றுமதி செய்த பொருள்கள் எவை? இறக்குமதி செய்த பொருள்கள் எவை?

4. இன்று ஏற்றுமதி, இறக்குமதி ஆகும் பொருள்கள் எவை?

5. இலங்கைத் தீவில் நம்மவர் எங்கெங்கு இருக்கின்றனர்? என்ன செய்கின்றனர்?

6. ஒரு நாடு எப்பொழுது பொருளாதார நிலைமையில் சிறந்திருக்கும்?

பயிற்சி

1. இப்பாடத்தை மௌனமாகப் படி; பாராக்களுக்குத் தலைப்புக் கொடு.

2. பெருதவி = பெருமை + உதவி
யானைத் தந்தம் = யானை + தந்தம்
} இம்மாதிரி வரும் தொடர்களைப் பிரித்துக் காட்டு.

3. இரண்டாம் பாராவில் உள்ள இடப்பெயர்களைக் கூறு.

4. மூன்றும் பாராவில் உள்ள எ. ப. செ. கூறு.

5. நான்காம் பாராவில் உள்ள அறுவகைப் பெயர்களைக் கூறு.

6. ஐந்தாம் பாராவில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களைக் கூறு.

7. இராமனைச் சீதை கண்டு மகிழ்ந்தாள்.—சொற்களுக்குச் சொல் இலக்கணம் கூறு.

8. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை எழுது :—

(a) வெளிநாட்டுப் பொருள்கள் இந்தியாவிற்குக் ——— மூலம் வருகின்றன.

(b) இலங்கைத் தீவில்——— ———த் தோட்டங்கள் உண்டு.

இலக்கணம்

செய்வினை—செயப்பாட்டு வினை

1. இராமன் இராவணனைக் கொன்றான்.—இதில், 'கொன்றான்' என்பது இராமன் செய்த வினையாகும். ஆகவே, இது செய்வினை எனப்படும்.

2. இராவணன் இராமனால் கொல்லப்பட்டான். — இதில், 'கொல்லப்பட்டான்' என்பது இராமனால் செய்யப்பட்ட வினையாகும். ஆகவே, இது செயப்பாட்டு வினை எனப்படும்.

பூனை எலியைப் பிடித்தது, இராமன் பாடம் படித்தான், மங்களம் கோலம் போட்டாள்—செய்வினைகளைச் செயப்பாட்டு வினைகளாக மாற்று.

கந்தன் கண்ணனால் அடிக்கப்பட்டான், புத்தகம் வேலனால் தைக்கப்பட்டது, வரதன் வண்டிக்காரனால் அழைக்கப்பட்டான்.— இச் செயப்பாட்டு வினைகளைச் செய்வினைகளாக மாற்று.

15. சித்தலைச் சாத்தனுர்

(மௌன வாசிப்பு)

புதிய சொற்கள்:—கடைச் சங்கம்—நாற்பத்தொன்பதின்மர்—சித்தலை — சாத்தனுர் — கூலவாணிகன்—தவருக — மணிமேகலை—பௌத்த—பிக்ஷுணி—பற்றுக்கொண்டாள்— வேற்றுரு—வல்லவள்—அடக்கமானுள்—அறவுரை—தரிசித்தான் — பெருங்காப்பியம் — இரட்டை நூல்கள்—உயரிய—மதக் கொள்கை—வாயார—புகழ்வோமாக.

ஏறக்குறைய ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்குமுன் மதுரையில் இருந்த தமிழ்ச் சங்கம் 'கடைச் சங்கம்' எனப்படும். அச் சங்கத்தில் இருந்த தமிழ்ப்புலவர் நாற்பத்தொன்பதின்மர். அவருள் சிறந்தவர் நக்கீரர், கபிலர், பரணர், சித்தலைச் சாத்தனுர் முதலியோர் ஆவர். நக்கீரரே அச் சங்கத் தலைமைப் புலவர். இப்புலவர் பலரும் பல பாடல்கள் பாடியுள்ளார்கள்: அரசர்களைப் பற்றிய பாடல்கள் பல; வள்ளல்களைப் பற்றிய பாடல்கள் பல; அறம், பொருள், இன்பம், வீடு பற்றிய பாக்கள் பல. அப் பாடல்களைக் கொண்ட நூல்கள் 'கடைச் சங்க நூல்கள்' எனப்படும்.

சாத்தனுர் என்பவர் 'சித்தலை' என்னும் ஊரினர். அதனுல் அவர் 'சீத்தலைச் சாத்தனுர்' எனப்பட்டனர். அவர் மதுரையில் (கூல - தானியக்) கடை வைத்திருந்தார். அதனுல் அவர் 'மதுரைக் கூல வாணிகன் சாத்தனுர்' என்றும் அழைக்கப்பட்டார். அவர் வியாபாரத்துடன் தமிழ்க் கல்வியையும் பயின்று சிறந்த புலவராக இருந்தார். அவர் பாடிய பாடல்கள் கடைச்சங்க நூல்களில் பல உள்ளன.

சாத்தனார் காலத்திற்முன் ஆரியப் படை கடந்த **நெடுஞ் செழியன்** மதுரையை ஆண்டு வந்தான். அவனே கோவலனைத் தவருகக் கொல்வித்தவன் என்பதை நீங்கள் அறிவீர்கள் அல்லவா? அக் கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள் **மணிமேகலை** என்பவள். அவள், தன் தந்தை கொல்லப்பட்டதும், தாய் பௌத்த பிக்ஷுணி ஆனதைக் கண்டு, தானும் பௌத்த மதத்திலே பற்றுக்கொண்டாள். மணிமேகலா தெய்வம் அவளுக்கு மூன்று மந்திரங்களை உபதேசித்தது. அவள் அவற்றின் உதவியால் வானத்தில் பறக்கவும், ஏழைகளுக்கு உணவளிக்கவும், வேற்றுருக் கொள்ளவும் வல்லவள் ஆனள்.

மணிமேகலை இலங்கை, ஜாவா முதலிய தீவுகளுக்குச் சென்று மீண்டாள்; இரண்டு தமிழ்நாடுகளின் தலைநகரங்களான புகார், வஞ்சி ஆகிய நகரங்களில் பௌத்த அறவுரைகளைக் கேட்டு அறிந்தாள்; காஞ்சி நகரத்தில் ஏழைகளுக்கு அன்னம் அளித்தாள்; வஞ்சி மாநகரில் கண்ணகி கோவிலைத் தரிசித்தாள்; முடிவில் காஞ்சிபுரத்திலேயே அடக்கமானள்.

அவளது வரலாற்றைச் சீத்தலைச் சாத்தனார் நன்கு அறிந்தவர். அதனல் அவர் '**மணிமேகலை**' என்னும் பெருங் காப்பியத்தைப் பாடினர். அவர் நண்பரான இளங்கோ அடிகள், கோவலன்—கண்ணகி வரலாற்றைச் '**சிலப்பதிகாரம்**' என்னும் பெருங்காப்பியமாகப் பாடியுள்ளார். இவ்விரண்டும் ஒரே குடும்பத்தினர் வரலாற்றைக் கூறுவன; ஒரே காலத்தில் பாடப்பட்டவை. ஆதலால் இவை, 'இரட்டை நூல்கள்' எனப் பெயர் பெறும்.

மணிமேகலை என்னும் நூலில் காவிரிப்பூம் பட்டினம், காஞ்சிபுரம், வஞ்சி மாநகரம் என்னும் தலைநகரங்கள் வருணிக்கப்பட்டுள்ளன; பல வகை மதக் கொள்கைகள் விளக்கப்பட்டு உள்ளன; காலை—மாலை வருணனைகள் இடம் பெற்றுள்ளன; தீவு, கடல், நகரம் முதலியன வருணிக்கப் பட்டுள்ளன; தருமம் செய்தலின் சிறப்புக் கூறப்பட்டுள் ளது. பொதுவாக இந்நூல், எளிய தமிழ் நடையில் உயர்ந்த கருத்துகளையும் இயற்கை—செயற்கை அழகுகளையும் எடுத் துக் கூறுவதாகும். இவ்வரிய காப்பியத்தைச் செய்த சீத் தலைச் சாத்தனாரை நாம் வாயாரப் புகழ்வோமாக!

கேள்விகள்

1. சாத்தனாருடைய வேறு பெயர்கள் எவை? அவை ஏன் வழங்கப்பட்டன?
2. கடைச் சங்க நூல்கள் எவை?
3. மணிமேகலை யாவள்? அவள் வரலாறு யாது?
4. இரட்டை நூல்கள் எவை? எப்படி?
5. மணிமேகலையில் உள்ள செய்திகள் எவை?

பயிற்சி

1. இப்பாடத்தை **மௌனமாக** வாசி; பாராக்கட்குத் தலைப்புக் கொடு.
2. சாத்தனார் வரலாற்றைக் கட்டுரையாக வரை.
3. இவ்வரலாற்றைச் சாத்தனாரே கூறுதல் போல எழுது.
4. மணிமேகலை தன் வரலாற்றைக் கூறுதல் போல எழுது.
5. வரலாறு, கடைச்சங்கம், சங்க நூல்கள், பௌத்த மதம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.
6. முதல் பாராவில் உள்ள எ. ப. செ. கூறு.

7. 2-ஆம் பாராவில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் கூறு.

8. 3-ஆம் பாராவில் உள்ள பெயர்ச்சொற்களுக்குத் திணை, பால் முதலியன கூறு.

9. 4-ஆம் பாராவில் உள்ள செய்வினைகளைச் செயப்பாட்டு வினைகளாக மாற்று; செயப்பாட்டு வினைகளைச் செய்வினைகளாக மாற்று.

10. 5-ஆம் பாராவில் உள்ள பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் கட்டம் போட்டு எழுது.

11. பிழைகளைத் திருத்து:—

கந்தனை கண்டேன், அவனுக்கு தந்தேன், அந்த பையன், எந்த பெட்டி, பெரியவனாக போனான், எல்லா பிள்ளைகளும், நானா வித பொருள்கள்.

12. சேர்த்து எழுது:—ஆங்கு + ஆங்கு, பெருமை + காப்பியம், அறம் + உரை.

இலக்கணம்

1. கந்தன் பந்தை **எறிந்தான்.**—இதில் 'எறிந்தான்' என்பது வினைமுற்று (பயனிலை). **எதை** எறிந்தான்? என்று கேட்டால், 'பந்தை' என்பது பதில் ஆக வரும். ஆகவே, 'பந்து' செயப்படு பொருள். இங்கு 'எறிந்தான்' என்னும் வினைமுற்றுச் செயப்படு பொருளைப் பெற்று இருக்கிறது. ஆதலால், இவ்வினை **செயப்படு பொருள் குன்றுவினை** எனப்படும்.

2. கந்தன் **வந்தான்.**—இதில் 'வந்தான்' என்பது பயனிலை. '**எதை** வந்தான்?' என்று கேட்டால், விடை இல்லை. அஃதாவது, 'வந்தான்' என்னும் வினைமுற்றுக்குச் செயப்படுபொருள் இல்லை. ஆகவே, இவ்வினை—**செயப்படு பொருள் குன்றிய வினை** எனப்படும்.

இப்பாடத்தில் இவ்விரண்டு வினைமுற்றுகளையும் கண்டறிந்து எழுது.

16. கதைப் படம்

படம் பார்த்துக் கதை சொல்.

(காக்கையும் பாம்பும்)



பயிற்சி

1. இக்கதைக்குத் தலைப்புக் கொடு.

2. இக்கதையை 25 வாக்கியங்களில் சொல்.

3. காக்கை அரண்மனை நகையைப் புற்றில் போட்டது.

(i) எ. ப. செ. கூறு.

(ii) பொருள், இடப் பெயர்களைக் கூறு.

(iii) காக்கை, புற்றில்—திணை, பால், எண், இடம், வேற்றுமை கூறு.

4. வேலைக்காரர்கள் காக்கையை விரட்டி வந்து, புற்றைக் கஷ்டப்பட்டு இடித்தார்கள்.

(i) இதில் உள்ள உயிர், மெய், உயிர்மெய் எழுத்துகள் எவை?

(ii) குறில், நெடில் கூறு.

5. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:—

(i) நரி காகத்திற்கு ——— சொன்னது.

(ii) காகம் நகையைப் ——— போட்டது.

(iii) வேலைக்காரர்கள் ——— இடிக்கிறார்கள்.

(iv) பாம்பு ——— உடைத்துக் ———.

6. வந்து போன பையன், நின்று பேசின பெண், விழுந்து எழுந்த மாமன், தூங்கி விழித்த பாட்டி.

இவற்றில், (i) வினைமுற்றுகள் எவை? (ii) வினையெச்சங்கள் எவை? (iii) பெயரெச்சங்கள் எவை?

17. நூல் நிலையம்

புதிய சொற்கள் :—அரசாங்கம்—நூல் நிலையம்—மகிழ்ச்சியோடு—பயன்பெற—அமைதி—இலங்கியது—கன்னிமாரா — கவர்னர்—தாவரம் — சாஸ்திரம்—வான சாஸ்திரம்—சிற்பம் — ஓவியம்—பூ சாஸ்திரம்—பூகோளம்—கணிதம்—மக்கிய—சாஸனம் — பட்டயம்—செதுக்கப்பட்ட.

நான் ஐந்தாம் வகுப்பு மாணவன். என் பெயர் நாராயணன். நான் என் வகுப்புப் பிள்ளைகளோடும் என் வகுப்பு ஆசிரியருடனும் சென்னையில் உள்ள அரசாங்க நூல் நிலையம் சென்றேன். அது ஓர் அழகிய நந்தவனத்தின் நடுவில் அமைந்திருக்கிறது. என் ஆசிரியர் நூல் நிலையத் தலைவரிடம் எங்கள் பள்ளிக்கூடத்தின் பெயர் முதலிய விவரங்களைக் கூறினார். அத்தலைவர் மகிழ்ச்சியோடு எங்களைப் பார்த்து, 'இந்த நூல் நிலையத்தை நன்றாய்க் கவனியுங்கள்; என்னென்ன விதமான நூல்கள் இருக்கின்றன, அவை எப்படி வைக்கப்பட்டுள்ளன என்னும் விஷயங்களை அறியுங்கள்; நீங்கள் இந்த நூல்களைப் படித்துப் பயன் பெற, அடிக்கடி இங்கே வரவேண்டும். இவை உங்களுக்காகவே இங்கு வைக்கப்பட்டுள்ளன' என்றார்.

'கன்னிமாரா' என்னும் பிரபு சென்னையில் கவர்னராக இருந்தார். அவரால் திறக்கப்பட்டதால் அந்த நூல் நிலையம், 'கன்னிமாரா நூல் நிலையம்' எனப் பெயர் பெற்றதாம். அந்த நூல் நிலையம் அமைதிக்கு இருப்பிடமாக இலங்கியது. ஆ! கூடத்தில் இருந்த வட்ட மேஜைகளைச் சுற்றிப் பல நாற்காலிகள் போடப்பட்டு இருந்தன. அவற்

றில் ஆடவரும் பெண்களும் அமர்ந்து, நூல்களைப் படித்துக் கொண்டு இருந்தனர். அவர்கள் மௌனமாக வாசித்துக் கொண்டிருந்ததால், அவ்விடம் அமைதியாகக் காணப் பட்டது.

கூடத்தைச் சுற்றிலும் உயர்ந்த இடங்களில் படிக் கட்டுகள் இருந்தன. நாங்கள் முதல் தட்டில் ஏறினோம்; ஆயிரக் கணக்கான நூல்கள் 'எண்' இடப்பட்டு ஒழுங்காக அடுக்கப்பட்டிருந்தன. சரித்திரம், பூகோளம், கணிதம், நில நூல், வான நூல், மர நூல், பயிர்த்தொழில், கைத் தொழில், சிற்பம், வரலாறு, பிரசங்கம், கடிதம், ஓவியம் முதலிய பலவிதக் கலைகளைப் பற்றிய நூற்றுக் கணக்கான நூல்கள், தனித்தனியே முறைப்படி அடுக்கப்பட்டு இருந் தன.

உலகில் உள்ள எல்லா வகை மதங்களைப்பற்றிய விரி வான நூல்களும் இருந்தன. உலகத்து மக்கள் அனைவ ருடைய பழக்க வழக்கங்களைப் பற்றிய நூல்கள் நூற்றுக் கணக்கில் இருந்தன. பழைய காலத்துப் புத்தகங்கள் சில, மக்கிய காகிதங்களோடு காட்சி அளித்தன. பூமியைத் தோண்டி ஆராய்ச்சி செய்தபோது கிடைத்த நாணயங்கள் முதலியவற்றிலும், கோவில் சுவர்களிலும், பிற பாறைகளி லும், செம்புப் பட்டயங்களிலும் செதுக்கப்பட்ட விஷயங் களைக் கொண்ட 'சாஸன நூல்கள்' பல இருந்தன. அவற்றால் பண்டைக் கால அரசர் முதலியவரைப் பற்றிய செய்திகளை அறியலாமாம்.

கன்னிமாரா நூல் நிலையம் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. 'இந்த நூல்களை எல்லாம் படிக்க

நமது ஆயுள் போதாது. சில நூல்களை யேனும் கற்றுப் பயன் பெறுவது நமது கடமையாகும். நாம் மேல் வகுப்பு களில் வாசிக்கும் போது அடிக்கடி இங்கு வரவேண்டும்' என்று நான் முடிவு செய்துகொண்டேன். சுருங்கக் கூறின், நூல் நிலையம் இல்லாத ஊர், கண்ணில்லாத முகம் போன் றது என்னலாம். நூல் நிலையத்தைப் பயன்படுத்துபவரே கல்வியிற் சிறந்து விளங்குவர்.

கேள்விகள்

1. 'கன்னிமாரா நூல் நிலையம்'—பெயர்க் காரணம் யாது?
2. அது எப்படி இருக்கிறது?
3. அதில் உள்ள நூல்கள் எவை?
4. அதைக் கண்டு நாராயணன் கொண்ட முடிபு யாது?
5. நூல் நிலையத் தலைவர் யாது கூறினர்?
6. நீ நூல் நிலையத்தால் பெறும் நன்மை யாது?

பயிற்சி

1. இப்பாடத்தை மௌனமாகப் படி; பாராக்களுக்குத் தலைப்புக் கொடு.

2. கன்னிமாரா—நூல் நிலையம்—அமைதி — அடுக்குகள்—பலவகைக் கலைகள்—சாஸன நூல்கள்—படிக்க வேண்டும்.

இக்குறிப்புகளைக் கொண்டு ஒரு கட்டுரை வரை.

3. உன் ஊரில் உள்ள நூல் நிலையத்தைப் பற்றி ஒரு சிறு கட்டுரை எழுது.

4. முதல் பாராவில் உள்ள செய்வினைகள் யாவை? அவற்றைச் செயப்பாட்டு வினை ஆக்கு.

5. இரண்டாம் பாராவில் உள்ள செயப்படுபொருள் குன்றிய வினை, செ. குன்றா வினை இவற்றைக் குறி.

6. செதுக்கப்பட்ட, மகிழ்ச்சியோடு, பயன்பெற, அமைதி—உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

இலக்கணம்

i. இராமன் ஓடினான்.—இராமன் ஓடுதலாகிய செயலைத் தானே செய்தான். ஆதலால் 'ஓடினான்' என்பது **தன் வினை.**

ii. இராமன் ஆடுகளை ஓட்டினான்.—இராமன் ஆடுகளை ஓடச் செய்தான். ஆதலால் 'ஓட்டினான்' என்பது **பிற வினை.**

தன்வினை	பிறவினை
படித்தான்	படிப்பித்தான்
ஆடினான்	ஆட்டினான்
கூடினாள்	கூட்டினாள்
உண்டார்	உண்பித்தார்
வந்தன	வருவித்தன
எழுந்தான்	எழுப்பினான்

இப்பாடத்தில் வந்துள்ள தன் வினை—பிற வினைகளை எழுது.

18. கடிதங்கள்

புதிய சொற்கள் :—வணக்கம்—சுகமாக — நலத்தை—அவா — மறவேன் — தேர்வு — தேறினது — சித்திரை—பிரியமுள்ள — குடி புகுதல்—அமயம்—பொற்காலம் — பிரதிகள் — வியாபாரி—தியாக ராய நகர்—மாளிகை—தென்னிந்திய—நாடக மேடை—இராணி—சுந்தராம்பாள்—இசை—விருந்து—மண்ணடி—குரலோசை— மகிழ் தற்கு—பவளக்காரத் தெரு—நடைபெறும்—ஐயங்கடை.

1. தந்தைக்குக் கடிதம்

120, தங்கசாலை வீதி,
சென்னை,
15—10—1940.

அன்புள்ள அப்பா,

வணக்கம். நான் அக்காள் வீட்டில் சுகமாக இருக்கிறேன். அங்குத் தாயார், தம்பி, தங்கை முதலியவர் நலத்தை அறிய அவா. நான் எனது கால் வருடத் தேர்வில் முதல்வனாகத் தேறியுள்ளேன் என்பதை அறிய நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள் அல்லவா? தாங்கள் ஒவ்வொரு வகுப்பிலும் முதல்வராகத் தேறினது போலவே நானும் தேற முயலவேண்டும் என்று நீங்கள் சொன்னதை யான் என்றும் மறவேன். நான் ஒவ்வொரு தேர்விலும் முதல்வனாக வர முயற்சி செய்வேன். வணக்கம். பிற பின்.

இங்ஙனம் :
தங்கள் பிரியமுள்ள மகன்,
கோபாலன்.

திரு. கி. முருகேச முதலியார் அவர்கள்,
15. வடக்குச் சித்திரை வீதி,
மதுரை.

2. வியாபாரக் கடிதம்

ஐயங்கடைத் தெரு,
தஞ்சாவூர்,
15—10—1940.

திரு. கே. பழநியாண்டிப் பிள்ளை கம்பெனிப்
பொறுப்பாளர் அவர்களுக்கு,

ஐயா,

தாங்கள் வெளியிட்டுள்ள நூல்களில் கீழ்க்கண்டவற்றைக் கீழ்க்கண்ட கணக்குப்படி அனுப்புக.

(1) பொற்கால வாசகம் I, II, III ஒவ்வொன்றிலும் 12 பிரதிகள்.

(2) பொற்காலக் கணிதம் 4-ஆம் புத்தகம் 24 பிரதிகள்.

(3) பொற்காலத் தமிழ் இலக்கணம் 2-ஆம் புத்தகம் 12 பிரதிகள்.

வழக்கம் போல நூற்றுக்கு 20 'கமிஷன்' தள்ளி அனுப்பவும்.

இங்ஙனம் :
தங்கள் அன்பன்,
கு. கோவிந்தசாமி பிள்ளை,
புத்தக வியாபாரி.

3. அழைப்புக் கடிதம்

2, வள்ளுவன் தெரு,
வண்ணாரப்பேட்டை, சென்னை,
20—10—1940.

அன்புள்ள நண்பா,

நாங்கள் தியாகராய நகரில் புதிதாக ஒரு மாளிகை கட்டியிருத்தல் உனக்குத் தெரியும் அல்லவா? நாங்கள் நாளை மாலை 5 மணிக்கு அதிற் குடி புகுவோம். அவ்வமயம் நீ உன் தங்கையோடு வருதல் வேண்டும்; சுந்தராம்பாள் இசை விருந்து நடைபெறும். தென்னிந்திய நாடக மேடை இராணியாகிய அப் பெண்மணியின் குயிலினும் இனிய குரலோசை கேட்டு மகிழ்தற்கு உரியது. இசைக்குப் பின் விருந்து நடைபெறும். நீ அவசியம் வா. வரத் தவறாதே.

இங்ஙனம்:
உன் வரவை எதிர்நோக்கும் நண்பன்,
பு. கிருஷ்ணசாமி.

திரு. குப்புசாமிக்கு,
103, பவளக்காரத் தெரு,
மண்ணடி, சென்னை.

பயிற்சி

1. உன் அண்ணன் திருமணத்துக்கு வரும்படி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

2. உங்கள் பள்ளிக்கூட ஆண்டு விழாவிற்கு வரும்படி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

3. ஒரே வாக்கியமாக மாற்று :—

(1) நான் கடைக்குப் போனேன்; நான் பேனு வாங்கினேன்.

(2) நீ பள்ளிக்கூடம் போனுய்; நீ பாடம் படித்தாய்; நீ திரும்பிவந்தாய்.

4. தனித்தனி வாக்கியமாகப் பிரி :—

(1) நான் அழுத பிள்ளையைத் தூக்கினேன்.

(2) நான் கடைக்குப் போகையில் அவனைக் கண்டேன்.

(3) நான் புத்தகம் வாங்கும்போது அவன் வழி மறித்தான்.

5. சில புத்தகங்களை அனுப்பும்படி ஒரு புத்தக வியாபாரிக்குக் கடிதம் எழுது.

6. முதல் கடிதத்தில் வந்துள்ள செய் வினை, செயப் பாட்டு வினைகள் கூறுக.

7. இரண்டாம் கடிதத்தில் உள்ள தன் வினை, பிற வினைகளைக் கூறுக.

8. மூன்றும் கடிதத்தில் உள்ள செ. குன்று வினை, செ. குன்றிய வினைகளைக் கூறுக.

9. முதற் கடிதத்தில் உள்ள எ. ப. செ. கூறு.

10. இரண்டாம் கடிதத்தில் உள்ள ஒருமை, பன்மை கூறு.

11. மூன்றும் கடிதத்தில் உள்ள திணை, பால்களைக் கூறு.

12. மூன்றும் கடிதத்தில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களைக் கூறு.

19. மாலைக் காட்சி

புதிய சொற்கள்:—கலகல—பலபல—செவிடுபட—யுகம்—கூத்தாட—நற்காட்சி—சாந்தி—பழுது—பகலவன்—பரி—முகில்—ஓரத்தில்—தூரத்தில்—கடுகி—ஆக்கை—ஆனந்த—நர்த்தனம்.

கலக லெனக் காற்றும் நகைக்குது
　　காதும் செவிடுபட—மேலும்
பலப லயுகம் பார்த்தும் இருக்குது
　　பாடி வரும்நதிதான். 1

கோல மயிலுந்தன் தோகை விரித்தே
　　கூத்தாட வில்லையோ தான்—இது
சால நற்காட்சி அல்லவோ! என்மனம்
　　சாந்தி அடைகிறதே! 2

உழுத உழவர்கள் பாடிக்கொண் டேவீட்டுக்
　　கோடி வருகின்றாரே—உயர்
பழுதில் பகலவன் பரியும் வேகமாய்ப்
　　பாய்கிறதே மேற்கே! 3

தூரத்தி லேதோன்றும் முகில்ஒன் றைஒன்று
　　தொட்டுக் கலந்திடுமே—மலை
ஓரத்தி லேநிற்கும் பாறைகள் மாலை
　　ஒளியில் கலந்திடுமே! 4

காக்கை கரையுது, கருடனும் ஓடுது
　　கடுகிக் கூடுதேடி—நல்ல
ஆக்கை இருக்கையில் ஆனந்த நர்த்தனம்
　　ஆடுவோ மே கூடி! 5

—புதுவை-கவிதாமண்டலம்

அரும்பொருள் :

யுகம்—பல வருஷங்கள் கொண்டது ஒரு யுகம், கோல—அழகிய, சாந்தி—அமைதி, பழுது இல்—குற்றம் இல்லாத, பகலவன்—சூரியன், பரி—குதிரை, முகில்—மேகம், கடுகி—வேகமாய், ஆக்கை—உடல், நர்த்தனம்—நடனம்.

கேள்விகள்

1. மாலையில் வீடு திரும்பும் உயிர்கள் எவை?
2. மாலைக்காட்சி எப்படி இருக்கிறது?

இலக்கணம்

3. 4-ஆம் வகுப்பு நூலில் காமா, முற்றுப்புள்ளி முதலிய நிறுத்தக் குறிப்புகளைக் கற்றீர்கள் அல்லவா? இங்கு எல்லா நிறுத்தக் குறிகளையும் பற்றி அறிக.

, இது காமா. இது பெரும்பாலும் வினையெச்சங்களை அடுத்து வரும்.

: இது கோலன். 'இதனைப் பார்', 'அது பின்வருமாறு' என்று வரும் இடங்களில் இக் குறியை இடவேண்டும்.

; இது செமிகோலன். பெரிய வாக்கியத்தில் முதலில் எழுவாய் வந்து, பிறகு வரும் வாக்கியங்களில் எழுவாய் வராவிடில், பயனிலை முடியும் இடங்களில் எல்லாம் இக்குறியை இடவேண்டும்.

. இது முற்றுப் புள்ளி. இது வாக்கிய முடிவில் இடவேண்டுவது.

? இது கேள்விக் குறி.

! இது வியப்புக் குறி. இஃது ஆச்சரியம், வருத்தம், இரக்கம் முதலியவற்றைக் குறிக்கும் இடங்களில் இடத்தக்கது.

" "—இவை, நேர் நேராகப் பேசும் பேச்சைச் சொல்லும் பொழுதும் பேசும் பொழுதும் இடவேண்டுபவை. முன்னது ஆரம்பத்திலும், பின்னது முடிவிலும் இடத் தக்கவை.

20. பெரியோர் உரைநடை

புதிய சொற்கள்:—இளவேனில் — முதுவேனில் — பையப் பைய — கானல்—காடை — கவுதாரி—வலியான் — வானம்பாடி—இலுப்பை—நாவல்—உண்மையான—கல்விமான்கள்—வரையறுக்க—புலமை—ஒருங்கு—வீற்றிருக்கும் — ஆடம்பரம்—இயைபு— உலகியல்—அறிவற்றவர்—புறக்கணிக்கப்பட்டு — புருஷார்த்தம் — களர் நிலம்—அலக்ஷியம் — பூஷணம்—இம்மை—மறுமை—மோக்ஷம்.

1. மெய்ப் புலவரும் பொய்ப் புலவரும்

உண்மையான கல்விமான்கள் யாவரையும் உலகம் அறிந்து கொள்வதில்லை. உருவத்தைக் கண்டும் வெளி ஆடம்பரங்களைக் கண்டும் புலமையை வரையறுக்க முடியாது. ஏழ்மை நிலையிலேயே பிறந்து வளர்ந்த புலவர்கள் பலர், பின்பு அரசரோடு அரியாசனத்தில் ஒருங்கு வீற்றிருக்கும் பேறு பெற்றுர்கள் என்று பண்டை வரலாறுகளால் அறிகிறோம். வீண் ஆடம்பரத்தினுலும் அறிவுக்கு யாதோர் இயைபும் இல்லாத உலகியற் பயிற்சியாலும் பலர் அறிவாளிகளாக மதிக்கப்படுகிறுர்கள். அவ்விரண்டும் இல்லாத பல உண்மை அறிவாளிகள் ஏனைய மனிதர்களோடு ஒருங்கு எண்ணப்பட்டு வாழ்ந்துவருகிறுர்கள். அவர்களுட் சிலர் அறிவற்றவர்களாகவும் கருதப்படுவது உண்டு. சிலர் சில காலம் புறக்கணிக்கப்பட்டுப் பின்பு கல்விமான்களாக மதிக்கப்படுகிறுர்கள்.

—டாக்டர் உ. வே. சாமிநாதையர்

2. முதுவேனிற் பருவம்

முன் நல்லவனாக இருந்து குடிகள் இன்பமுற ஆண்டு வந்த அரசன் ஒருவன், பின் மெல்ல மெல்லப் பொல்லாதவனாகி அக்குடிகளை வருத்தத் தலைப்பட்டது போல, எல்லா உயிர்களுக்கும் இன்பம் அளித்துவந்த இளவேனில்-பையப் பைய மாறி அவ்வுயிர்களுக்குத் துன்பம் அளிக்கும் முதிர் வேனில் ஆயிற்று. மேல் காற்று வீசவும், கானல் தோன்றவும், காடை, கவுதாரி, வலியான், வானம்பாடி முதலியன மகிழவும், மல்லிகை, புளி, பாதிரி என்பன மலரவும், நாவல், இலுப்பை முதலிய மரங்கள் காய்க்கவும் தொடங்கின.

—ச. த. சற்குணர், பி.ஏ.

3. கல்வியே புருஷார்த்த சாதனம்

கல்வியைக் கற்றவன், எவ்வளவு தாழ்ந்தவனாக இருந்தாலும், களர் நிலத்தில் உண்டாகிய உப்பைப்போல உயர்ந்தவர்களில் வைக்கப்படுகிறான். ஆதலால், நாம் அவனை அலக்ஷியமாக நினைத்து அவனுக்கு மரியாதை செய்யாமலும் அவனிடத்தில் இருக்கிற கல்வியைக் கற்காமலும் இருக்கக்கூடாது. நன்றாகக் கற்றவன் ஓரூரில் ஓரிடத்தில் வாசம் பண்ணிக்கொண்டிருந்தாலும், அவன் கீர்த்தி எல்லாத் தேசங்களிலும் உலாவிக்கொண்டிருக்கும். கல்லாதவன் புத்தியினால் எவ்வளவு யுக்தியாகப் பேசினாலும், படித்தவர்கள் அதனை ஒரு பொருளாக மதிக்கமாட்டார்கள். வித்தையை உடையவனுக்குக் கல்வியே சிறந்த ஆபரணமாக இருக்கும். ஆகையால், அவனுக்கு வேறே பூஷணம் வேண்டுவதில்லை. அவன் வேறே பூஷணத்தை அணிந்

தால், அது அழகுக்கு அழகு செய்வதைப்போல் இருக்கும். உலகத்தில் அறம் பொருள் இன்பம் வீடு என்று சொல்லு கின்ற இந்த நான்கு உறுதிப் பொருள்களுக்கும் கல்வி யானது, முக்கிய சாதனமாக இருக்கின்றது. ஆதலால், நாம் இம்மையில் செல்வத்தையும் புகழையும், மறுமையில் மோக்ஷத்தையும் அடையவேண்டும் என்று விரும்பினுல், கல்வியைக் குறைவறக் கற்றுக்கொள்வோமாக.

—திமிரி சபாபதி முதலியார்

கேள்விகள்

1. முதிர்வேனில் எவ்வாறு காட்சி அளித்தது ?

2. படித்தவர் மங்கவும் படியாதவர் புகழ் பெறவும் காரணம் என்ன ?

3. கல்வியே புருஷார்த்த சாதனம்.—எப்படி ?

பயிற்சி

1. பேறு, மோக்ஷம், இம்மை, அரியாசனம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

2. இம்மை × மறுமை
மோக்ஷம் × நரகம் } இவை போன்ற எதிர்ப் பதங்களை இப் பாடத்திலிருந்து எழுது.

3. ஆபரணம், பூஷணம், நகை—இவை ஒரு பொருளைத் தரும் சொற்கள். இத்தகைய சொற்களை இப் பாடத்திலிருந்து எழுது.

4. நேர்க்கோடிட்ட இடங்களில் தக்க நிறுத்தக் குறிகளை இடு:

(1) அவை கீழ்வருமாறு|

(2) ஆ| அவன் ஏன் அங்குப் போனுன்|

(3) ஐயோ| பாவம்| அவன் நல்லவன்| பெரிய படிப்பாளி|

(4) அரசன்| ஆ| என்னே இவர் பெருமை| என்று வியந்தான்.

5. மூன்றும் பாராவில் உள்ள செய் வினை, செயப் பாட்டு வினைகளைக் கூறு.

6. அதே பாராவில் உள்ள பெயர்ச் சொற்கள் எவை? அவற்றுக்குத் திணை, பால், எண், இடம், வேற்றுமை கூறு.

7. அதே பாராவில் உள்ள ஒருமை, பன்மைகளைக் கூறு.

8. இப் பாடத்திலிருந்து மூன்று கால வினை முற்றுகளுக்கும் மும்மூன்று உதாரணம் கொடு.

9. இதே பாடத்தில் உள்ள ஆண்பால் வினைமுற்று, பெண் பால் வினைமுற்று, பலர்பால் வினைமுற்றுகளை எழுது.

(உ-ம்) வந்தான் —ஆண்பால் வினைமுற்று.
வந்தாள்—பெண்பால் வினைமுற்று.
வந்தார் —பலர்பால் வினைமுற்று.

இலக்கணம்

நீங்கள் சொற்களைப் பிழைபட உச்சரிக்கலாகாது. பிழையாக உச்சரிப்பது பிழைபட எழுத உதவி புரியும். அது போலவே, சரியாக உச்சரிப்பது சரியாக எழுத உதவி புரியும்.

'வாழைப் பழம்'—இதைப் பலர் 'வாளைப் பளம்' என்றும், 'வாளப் பளம்' என்றும், 'வாயப் பயம்' என்றும் பிழைபட உச்சரிக்கின்றனர். இது பெருந் தவறு. இத்தகைய சொற்களுள் சில கீழே காண்க :—

சரியானவை :	தவறானவை :
1. இழுத்துக்கொண்டு	இஸ்துகுணு, ஈத்துகுணு
2. விளக்கு	வெளக்கு
3. உரல்	ஓரல்
4. எண்ணெய்	எண்ணே
5. சுவரில்	சுவற்றில்

21. சென்னைச் சேவா சாதனம்

புதிய சொற்கள் :—வாய்ந்தவராக - இருபாலர் - பிற்போக்கு - அநாதை - சேவாசாதனம் - பொதுமக்கள் - உலக அறிவு - லேஸ் - பின்னுதல் - மாதர் சங்கம் - ஜிகினா - விடுதி - நேர்முகமாக - அபயம் - நிலையம் - ஸ்ரீமதி - வேங்கட சுப்பராவ் - அம்மையார் - பொன்னெழுத்து - தொண்டாற்றி - முனைவார்களாயின் - சமூகம்.

உலகம் ஆண்-பெண் என்னும் இரண்டு வகை உயிர்களாலும் ஆக்கப்பட்டதாகும். உலகமோ, குடும்பமோ நல்ல முறையில் நடைபெற வேண்டுமானால், இரு பாலரும் கல்வி அறிவு வாய்ந்தவராக இருத்தல் வேண்டும். இந்த உண்மையை நன்கு உணர்ந்த மேனாட்டார், இருபாலர்க்கும் கல்வி-கைத்தொழில் சம்பந்தமான பள்ளிகளை வைத்து மக்கள் அறிவை உயர்த்தி வருகின்றனர். இந்த முயற்சியில் பிற்போக்குடையது இந்தியாவே ஆகும்.

நமது இந்தியாவிலும் இப்பொழுது பெண்கள் சமூகம் சிறிது முன்னேற்றம் அடைந்திருக்கிறது. பெரியோர் பலர் பெண்களுக்குக் கல்வி, கைத்தொழில் இவற்றைப் போதிக்கும் கலாசாலைகள் சிலவற்றைப் பெண்களுக்காக ஏற்படுத்தி இருக்கிறார்கள். வேறு பலர் பொதுமக்களிடம் பணம் வசூலித்து, அநாதைப் பெண்களையும் மற்றப் பெண்களையும் படிப்பித்து, கைத்தொழில் கற்பித்து வருகின்றனர்; குடும்பக் கல்வியும் போதிக்கின்றனர்.

குடும்பக் கல்வியாவது—ஒரு பெண் தன் வீட்டையும் பொருள்களையும் குழந்தைகளையும் தன்னையும் சுத்தமாக வைத்துக்கொள்ளுதல், பின்னல், தையல், நெசவு முதலிய

கைத்தொழில்களைக் கற்றல் முதலியனவாம். பள்ளிக் கூடக் கல்வியால் உலக அறிவும் நாட்டு முன்னேற்றத் துக்குரிய அறிவும் பிறவும் பெறலாம். ஆதலால், பள்ளிக் கல்வியும் குடும்பக் கல்வியுமே பெண்களுக்கு ஏற்ற கல்வி ஆகும். இவ்விரண்டையும் போதிக்கும் நிலையங்கள் சில நம் இந்தியாவில் உண்டு. அவற்றுள் சென்னையில் உள்ள '**சென்னைச் சேவா சாதனம்**' ஒன்றாகும்.

இஃது இந்திய மாதர் சங்கத்தின் ஆதரவில் நடை பெற்று வருகின்றது. இஃது ஆரம்பத்தில் மிகச் சிறிய தாக இருந்தது. பின்னர்ப் பல பெருமக்களின் பொருள் உதவியாலும், மாதர் சங்கத்தாரது அன்பு நிறைந்த மேற் பார்வையாலும் மிக உயர்ந்த நிலைமையை அடைந்து வரு கிறது ; மிகப் பெரிய கட்டிடத்தையும் மாணவிகள் வசிக்கச் சிறு குடிசைகளையும் பெற்று, அழகிய சிங்காரத் தோட் டத்தின் நடுவில் அமைந்துள்ளது.

லேஸ் பின்னுதல், பின்னல் வேலை, தையல் வேலை, துணி வெட்டுதல், நெசவு வேலை, ஜிகினா வைத்துத் தைத் தல், பிரம்பைக் கொண்டு பின்னுதல் முதலிய பல கைத் தொழில்கள் இங்குள்ள மாணவிகளுக்குக் கற்பிக்கப்படு கின்றன ; மேலும், உபாத்தியாயனி வேலையும் வைத்தியப் பயிற்சியும் போதிக்கப்படுகின்றன.

இச்சேவா சாதனத்து மாணவியர் ஒரு நிமிடத்தையும் வீணாகக் கழிப்பதில்லை ; ஒவ்வொருவரும் ஏதேனும் வேலை செய்து கொண்டே இருப்பர் ; இவர்கள் செய்யும் பொருள் கள் உடனுக்குடனே விலையாகின்றன. இவர்களுள் ஒவ் வொருவரும் சாதன விடுதியை தினமும் மேற்பார்வை

இடுதல் வேண்டும். மாணவியர், தங்கள் பிற்கால வாழ்வில் தங்கள் வீடுகளையும் பொருள்களையும் வைத்துக்கொள்ளும் முறை, சாதன விடுதியையும் பொருள்களையும் வைத்துக் கொள்ளும் முறையைக் கொண்டு நேர்முகமாகக் கற்பிக்கப் படுகின்றது.

இச் சேவாசாதனம் சிறப்பாக ஏழைப் பெண்களுக்கும் விதவைகளுக்கும் அநாதைப் பெண் குழந்தைகளுக்கும் அபயம் அளிக்கும் உயர்ந்த நிலையம் ஆகும். இதனை இந்த உயரிய நிலைக்குக் கொண்டுவரப் பெரியார் பலர் பாடுபட்டிருப்பினும், அவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர் **ஸ்ரீமதி ஆண்டாள் வேங்கட சுப்பராவ்** என்னும் அம்மையாரே ஆவர். அவரது தந்நலமற்ற சேவை, இச் சேவா சாதனத்து வரலாற்றில் பொன்னெழுத்துகளில் பொறிக்கத் தக்கது.

பெண்கள் தாமே சுதந்தரத்தோடு வாழவும், நிறைந்த அறிவைப் பெறவும் சிறந்த தொண்டாற்றி வரும் இச் சேவா சாதனம் நேரில் காணத் தக்கது. நம் நாட்டுச் செல்வர் இத்தகைய சாதனங்களை ஜில்லாக்கள் தோறும் ஏற்படுத்தி, ஏழைப் பெண்களையும் விதவைகளையும் முன்னேற்ற முனைவார்களாயின், நம் நாட்டுப் பெண்கள் சமூகம் பெருமை அடையும். அந்த நாள் எந்த நாள்?

கேள்விகள்

1. பெண்கள் முன்னேற்றம் என்பது யாது?
2. 'சேவா சாதனம்'—யாது?
3. சென்னைச் சேவா சாதனம் என்பது என்ன?
4. அங்குப் பெண்களுக்குப் போதிக்கப்படுபவை யாவை?

5. அவற்றால் அப்பெண்கள் அடையும் நன்மை என்ன?

6. இச் சேவா சாதனம் யாரால் முன்னுக்குக் கொண்டுவரப் பட்டது?

7. இத்தகைய சாதனங்களால் என்ன நன்மை உண்டாகிறது?

8. நீ இப்பாடத்தால் அறிவது யாது?

பயிற்சி

1. வாய்ந்தவராக, பிற்போக்கு, பொதுமக்கள், மாதர் சங்கம், பொன்னெழுத்து, தொண்டாற்றி, சமூகம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. முற்போக்கு × பிற்போக்கு
நேர்முகம் × மறைமுகம்
பெருமை × சிறுமை
உயர்ந்த × தாழ்ந்த
} இவை எதிர்ப்பதங்கள். இத்தகைய பதங்களை இப்பாடத்திலிருந்து எடுத்துக் கூறு.

3. இப்பாடத்து ஒவ்வொரு பாராவுக்கும் 'தலைப்பு'க் கொடு.

4. பெண்கள் கல்வியைக் கற்பதால் சமூகம் உயரும்.—'சொல் இலக்கணம்' கூறு.

இலக்கணம்

கண்ணன் **கலகல** என்று சிரித்தான், வரதன் **தடதட** என்று நடந்தான், பத்மினி **படபட** என்று பேசினாள், வைரம் **பளபள** என்று மின்னுகிறது.—இவற்றில் வந்துள்ள கலகல, தடதட, படபட, பளபள என்பவை தனித்தனியே பிரித்து உபயோகிக்க முடியாதவை. இவை எப்போதும் இரட்டையாகவே வரும். ஆதலால் இவை **'இரட்டைச் சொற்கள்'** எனப்படும்.

ஆனால், **'தேள்தேள், பாம்புபாம்பு'** என வருபவை தனித் தனியே பிரிக்கக் கூடியவை. ஆதலால், இவை **'அடுக்குத் தொடர்'** எனப்படும்.

22. இயற்கைக் காட்சி

புதிய சொற்கள் :—சுடர்விடும் - விண்மீன் - உள்ளம் – பூங்கா - பன்னிறம் - மென்காற்று - நறுமணம் - தென்றல் - ஒருங்கே - மண்டலம் - முகடு - கோபுரம் - கணவாய் - சிகரம் - உராய்தல் - குகை - வரையாடு - சிறுத்தை - மலைவாணர் - சுனை - தூய - நீர்க்கால்கள் - பெருமக்கள் - காண்கையில் - உறுத்தும் - மழலை - மந்தி - எழில் - வனப்பு - பூங்கா - பொலிவு - பொன்னடி - போற்றுதல்.

இந்த உலகத்தையும் நீலத்திரைக் கடலையும் நீலக் கம்பளம் விரித்தாற்போன்று விளங்கும் ஆகாயத்தையும் அதனில் மின்னிச் சுடர்விடும் கணக்கற்ற விண் மீன்களையும் சுடுகதிர் தண்கதிர்த் தோற்றத்தையும் காண்கையில், நமது உள்ளத்தில் தோன்றுவது என்ன?

நாம் அழகிய பூங்காவில் நுழைகிறோம். எங்கும் கண்ணைக் கவரும் பலநிறப் பூக்கள் மலர்ந்து மென்காற்றில் அசைந்து ஆடுகின்றன. தோட்டம் எங்கும் நறுமணம் வீசுகிறது. மெல்லிய தென்றற்காற்று அப்பூக்களின் நறுமணத்தை உள்ளடக்கி இன்ப மணத்தோடு நம்மீது வீசுகின்றது. அப்பொழுது நம் அகமும் முகமும் ஒருங்கே மலர்கின்றன. மலர்ந்து மணம் வீசும் மலர்கள்மீது நம் பார்வை பாய்கின்றது; அவற்றை ஆவலோடு நோக்குகின்றது. அந்நேரத்தில் நமது உள்ளத்தில் தோன்றும் எண்ணம் யாது?

ஆ! மேக மண்டலத்தை முட்டி நிற்கும் முகடுகளை உடைய மலைத்தொடர்கள் எப்படி உண்டாயின? மலைக் கணவாய்கள், பனி படிந்து வெள்ளிக் கோபுரங்கள் எனக்

காட்சி அளிக்கும் மலைச் சிகரங்கள், தாமாக ஒன்றோ டொன்று உராய்தலால் தீப்பற்றி எரியும் மரங்களைக் கொண்ட காடுகள், அமைதிக்கு இருப்பிடங்களாக விளங் கும் குகைகள், பிளவுகளைச் சிறிதும் சிரமம் இன்றித் தாண்டிக் குதித்தோடும் வரையாடுகள்—மான்கள்—எருது கள்—புலிகள்—சிறுத்தைகள், மாசற்ற பெரியோர் உள்ளம் போலத் தெளிந்து ஓடும் நீர் அருவிகள், மலைவாணர் மகிழ்ந்து விளையாட அமைந்துள்ள தூய நீருடைய சுனைகள்- இவைகளைக் காண்கையில் நம் உள்ளத்தில் உதிப்பது யாது?

நாம் கிராமத்தைச் சுற்றியுள்ள வயல்களைக் காண்போம்: எங்கும் பசுமை. சிறிய நீர்க்கால்கள் வயல்களுக்குப் பாய்ந்த படி இருக்கின்றன. பச்சைப்பசேர் என்று காணப்படும் பயிர்கள் கண்ணுக்குக் குளிர்ச்சியை அளிக்கின்றன. இவற்றுக்குப் பசுமை எப்படி வந்தது? சில மாதங்கள் ஆனதும், பசுமைநிறப் பயிர்கள் மஞ்சள் நிறம் உடையன வாக மாறுகின்றன. அடக்கம் உடைய பெருமக்கள் தலை குனிந்து நிற்பதுபோல இப்பயிர்கள், கதிர்களாகிய தம் தலைகளைச் சாய்த்து நிற்கும் காட்சிதான் என்னே! இவற் றைக் காண்கையில் நம் மனத்தில் உறுத்தும் எண்ணம் யாது?

என்ன அழகு! சோலை நடுவில் மயில்கள் தம் அழகிய தோகையை விரித்து ஆடுகின்றன. குயில்கள் மரக்கிளை களில் அமர்ந்து கூவுகின்றன. பச்சைநிறக் கிளிகள் மழலை பேசுகின்றன. மந்திகள் குட்டிகளை வயிற்றில் இடுக்கியபடிக் கிளைவிட்டுக் கிளை பாய்கின்றன. ஆண் குரங்குகள் தென்னை மரமேறி இளநீர் பறித்துப் பெரு

மகிழ்ச்சியோடு மந்திகளுக்குத் தந்து மகிழ்கின்றன. இவ் வின்பக் காட்சிகளைக் காண்கையில், 'இவ்வின்ப உயிர்கள் எவ்வாறு தோன்றின? இவற்றைப் படைத்தவர் யார்?' என்னும் வினக்கள் நம் உள்ளத்தில் தோன்றுதல் இயல்பே அல்லவா?

வானத்து எழில், வனப்புடைய பூங்கா, மலைக்காட்சி, பயிர்களின் தோற்றம், பறவைகளின் பொலிவு, விலங்கு களின் இயல்பு முதலியவற்றைக் காண்கையில், 'இவற்றை எல்லாம் படைத்தவர் யார்?' என்னும் கேள்வி எழுதல் இயல்பு அன்ருே? அவரே கடவுள். அவர் எல்லாம் கடந்த வர்; ஆனால், நமக்கு இன்பத்தை ஊட்டும் எல்லாப் பொருள் களிலும் இருப்பவர் அவரே. அவர் இல்லாத இடம் இல்லை. அவரே இவற்றைப் படைக்கிருர்; இவற்றுள் அழகாகக் காட்சி அளிக்கிருர்; இன்பத்தை ஊட்டுகிருர். ஆகவே, 'அங்கு-இங்கு' என்று சொல்லாதபடி எங்கும் பிர காசமாய் இருப்பவர் அவரே. அவரே நம்மையும் படைத் துக் காக்கின்ருர். அவரது பொன்னடி போற்றுதலே நமது கடமை.

கேள்விகள்

1. வானக் காட்சி யாது?
2. சோலைக் காட்சி யாது?
3. மலைக் காட்சி யாது?
4. வயல் காட்சி யாது?
5. பறவைகள் - விலங்குகள் எப்படிக் காட்சி அளிக்கின்றன?
6. இவற்றைக் காண்கையில் உண்டாகும் எண்ணம் யாது?
7. கடவுள் யார்? அவர் சக்தி யாது?

பயிற்சி

1. வரை-மலை, பொலிவு - பிரகாசம், மணம் - வாசனை, எழில்-வனப்பு - அழகு, தோற்றம் - காட்சி: இவை ஒரு பொருட் சொற்கள். இவை போன்ற சொற்கள் சில கூறு.

2. இன்பம் × துன்பம் / சுடுகதிர் × தண்கதிர் / குனிந்து × நிமிர்ந்து } எதிர்ப் பதங்கள். இவை போன்ற எதிர்ப் பதங்களை இப் பாடத்திலிருந்து கூறு.

3. நறுமணம், உள்ளம், பொன்னடி, வனப்பு, பெருமக்கள் - இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

4. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :-

(1) மயில்———விரித்து———.

(2) குகைகள்———இருப்பிடமாக———.

(3) நீர் அருவிகள்———பெரியோர்———போலத்———இருக்கின்றன.

5. இரண்டாம் பாராவில் உள்ள எ. ப. செ. கூறு.

6. அதே பாராவில் உள்ள அறுவகைப் பெயர்ச்சொற்களைக் கூறு.

7. அதே பாராவில் உள்ள பெயரெச்ச, வினையெச்சங்களைக் கூறு.

8. மூன்றும் பாராவில் உள்ள ஒருமை - பன்மைப் பெயர்களைக் கூறு.

9. ஆறும் பாராவில் உள்ள செய்வினை - செயப்பாட்டு வினை, தன்வினை - பிறவினை, செ. குன்றாவினை - செ. குன்றிய வினை இவற்றைக் கூறு.

10. கடவுள் உலககத்தைப் படைத்தவர்.-'சொல் இலக்கணம்' கூறு.

11. பிழைகளைத் திருத்து:—

(1) வருவாய்கு அதகமாச் சிலவு செய்யலாகாது.

(2) அரசன் ஆணையை மீறுபவர் தண்டனை அடையார்.

(3) புஞ்சை நிலத்தில் பஞ்சு விளையும்.

12. இப்பாடத்தின் மூன்றும் பாராவில் உள்ள எ. ப. சே. கூறு.

13. நான்காம் பாராவில் உள்ள முக்கால வினை முற்றுகளைச் சொல்.

14. பார்த்தான், காண்பேன், எறினுள், என்றார், வருகிறது, வருவான், செய்கின்றார்.—இடைநிலைகளையும் காலங்களையும் கூறு.

15. இப்பாடத்தில் வந்துள்ள கால—சினை—குண—தொழில் பெயர்களைக் கூறு.

இலக்கணம்

i இராமன் **வந்தான்** - 'வந்தான்' என்பது செயல் நடந்ததைக் காட்டும் வினை. எனவே இது, **உடன்பாட்டு வினை** (Affirmative) எனப்படும்.

ii. இராமன் **வரவில்லை**. - 'வரவில்லை' என்பது செயல் நடவாததைக் காட்டும் வினை. எனவே இது, **எதிர்மறை வினை** (Negative) எனப்படும்.

iii. இராமன் **வந்தானு**? - 'வந்தானு' என்பது **கேள்வி வினை** (Interrogative).

போனுள், படித்தான், பாடினர், நின்றது, பறந்தன. - இவற்றுக்கு எதிர்மறை, வினு, வினைகளைக் கூறு.

23. கதைப் படம்

படம் பார்த்துக் கதை சொல்.



கேள்விகள்

1. நாய் ஏன் வாயைத் திறந்தது ?
2. நீ இக் கதையால் அறியும் நீதி யாது ?

பயிற்சி

1. நாயே இக் கதையைக் கூறுவது போலக் கூறு.
2. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப்படி:--

(a) நாய்————மீது நடந்தது.

(b) நாய்————தன்————ப் பார்த்தது.

(c) நாய்————வாயில்————மாமிசத்தை————.

3. நாய் - மாமிசத்துண்டு - ஓடை - நிழல் - பேராசை - நஷ்டம் : இக்குறிப்புகளைக் கொண்டு இக்கதையை எழுது.

இலக்கணம்

கலகல - இரட்டைச் சொல். பாம்பு பாம்பு - அடுக்குத்தொடர். இங்ஙனம் இன்றி, சுகதுக்கம், லாபநஷ்டம் என்றாற்போல ஒன்றற்கொன்று மாறான இரண்டு சொற்கள் சேர்ந்து வருதலும் உண்டு. அவை நேர்-மாறான சொற்கள் எனப்படும். இரவு பகல், ஏற இறங்க, ஏறக்குறைய, ஏறத்தாழ, தாறுமாறு, ஆதி அந்தம், காலைமாலை, முன் பின், மேல் கீழ், நியாய அநியாயம், வெற்றிதோல்வி - என்பன நேர் - மாறான சொற்கள். இத்தகைய சொற்களைக் கட்டுரைகளில் இடமறிந்து பயன்படுத்துதல் கட்டுரையை அழகு செய்வதாகும்.

24. செஞ்சிக் கோட்டை

(நாங்கள் பார்வையிட்ட இடம்)

புதிய சொற்கள் : — மலைச்சரிவு - கிரி - சபாமண்டபம் - மேடை - அறிவுள்ள - பிற்பட்ட - பாழ்பட்ட - ஆயிரக்கால் - மதிற்சுவர் - கேழ்வரகு - சோளம் - சேமித்து - கொட்டடி மஹால் - தொடர்ச்சியாக - பாழாய் - பீரங்கி - மணிக்கூண்டு - சுனைகள் - படுகாயம் - சுற்றுப்புறம் - பரிதாப.



நாங்கள், சென்ற நவராத்திரி விடுமுறையில் சென்னையை விட்டுச் செஞ்சிக் கோட்டையைக் காணச் சென்றோம்; எங்கள் ஆசிரியர் கூறியனவற்றை எங்கள் குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் கொண்டோம்: செஞ்சிக் கோட்டை தென்னாற்காடு ஜில்லாவில் 'செஞ்சி' என்னும் தாலூக்காவில் இருக்கின்றது. அக்கோட்டை இரண்டு மலைகள்மீது கட்டப்பட்டுள்ளது. அம்மலையைச் சுற்றிலும்

ஆழமான அகழி இருந்தது. அதன் அடையாளம் இப்போதும் இருக்கிறது. அதனைச் சார்ந்து அகன்று உயர்ந்து அழிவோடு காணப்பட்ட பல உறுப்புகளைக் கொண்டு, வடக்குத் தெற்காகச் சென்று இரண்டு மலைச் சரிவுகளைச் சேர்கின்ற கோட்டைச் சுவர் இருக்கின்றது.

நாங்கள் அச்சுவரில் உள்ள வாயிலைக் கடந்து உட்சென்றோம். எங்கள் வலப்பக்கம் இராஜகிரி என்னும் மலை இருக்கிறது. அதன் உயரம் சுமார் 370 அடி. அதன் உச்சியை அடைய மூன்று வழிகள் இருக்கின்றன. மலை உச்சியில் **சபா மண்டபம்** ஒன்று இருக்கிறது. அதன் நடுவில் அரசர் அமர்வதற்கென்று ஓர் அழகிய மேடை இருக்கிறது. அதனைச் சுற்றி நான்கு பெரிய திண்ணைகள் உள்ளன. அம் மண்டபத்திற்குப் பக்கத்தில் அழிந்த கோவில் ஒன்று இருளடைந்து இருக்கிறது. அதே மலை மீது வேறொரு கட்டடமும் இருக்கிறது. அதன் நீளம் எழுபது அடி, அகலம் முப்பத்தேழு அடி, உயரம் முப்பதடி ஆகும். அக் கட்டடம் சிறிது அழிந்த நிலையில் இருக்கின்றது.

இரண்டாம் மலை இராணி கிரி என்பது. அதனைச் சுற்றிலும் ஓர் அகழி இருக்கின்றது. மலைக்குச் செல்லும் வழியைக் குறிக்கும் வாயிலின் முன் ஒரு மசூதி இருக்கின்றது. அது ஐயசிங்கு மன்னர்க்குப் பிற்பட்ட முஹம்மதியர் காலத்தில் கட்டப்பட்டதாம். அதன் அருகில் பழைய கோவில் ஒன்று பாழ்பட்ட நிலையில் இருக்கின்றது. அதனைச் சுற்றிலும் உயரிய மதிற்சுவர்கள் நிமிர்ந்து நிற்கின்றன. ஆயிரக்கால் மண்டபம் ஒன்று அழிந்து கிடக்கிறது.

வாயிலைத் தாண்டிப் பல மதில்களைக் கடந்து உட் சென்றால், **கலியாண மஹால்** என்னும் கட்டடத்தைக் காண லாம். அஃது இருபதுக்கு இருபதடி சதுரமுள்ளது; ஏழு அடுக்குகளை உடையது; அழகு குன்றாமல் இருக்கின்றது. அதற்கு அப்பால் மூன்று கட்டடங்கள் ஒன்றாகச் சேர்த் துக் கட்டப்பட்டுள்ளன. அவை நெல், கேழ்வரகு, கம்பு இவற்றைச் சேமித்துவைக்கும் இடங்களாகும். எண்ணெய் சேர்த்து வைக்கச் சிறு கட்டடம் ஒன்றும் இருக்கிறது. **கோட்டடி மஹால்** என்னும் பெரிய கட்டடம் ஒன்றும் உண்டு. இவை அல்லாமல் வேறு சில கட்டடங்கள் தொடர்ச்சியாக உள்ளன.

இவற்றைக் கடந்து மலை உச்சியை அடைந்தால், இராஜ கிரியில் உள்ள மூன்று கட்டடங்களைப் போன்றவை இருத் தலைக் காணலாம். இரண்டு கட்டடங்கள் நல்ல நிலையில் இருக்கின்றன. ஒன்று இடிந்து அழிந்து பாழாய்க் கிடக் கின்றது. இவை அல்லாமல் சுமார் பத்தரை அடி நீள முள்ள பீரங்கி ஒன்றும், செங்கற்களால் கட்டப்பட்ட **மணிக் கூண்டும்**, பாழடைந்த **கோவிலும்**, சில கட்டடங்களும், நீருள்ள மூன்று சுனைகளும் இருக்கின்றன. ஒரு பள்ளத்தில் சுமார் அறுபதடி நீளமும் முப்பதடி அகலமும் உள்ள செங்கல் கட்டடம் ஒன்று இருக்கின்றது. அதனுட் சென்று பார்க் கக் கூடவில்லை.

இரண்டு மலைகளுக்கும் இடையில் குடிகள் வசித்திருந்த வீடுகள் அழிந்த நிலையில் இருந்தாலும், படுகாயப்பட்டும் எல்லாம் அழிந்த நிலையில் இருந்தாலும், படுகாயம் பட்டும் வீரம் குறையாத போர்வீரனைப் போலக் காட்சி அளிக்

கின்றன. 'ஆ! ஒரு காலத்தில் இக்கட்டடங்கள், இம்மலைகள், சுற்றுப் புறங்கள் என்ன அழகாக இருந்திருக்கக் கூடும்! இவை இன்றுள்ள பரிதாப நிலைமைதான் என்ன! காலம் என்னென்ன மாறுதல்களைச் செய்துவிடுகிறது பார்த்தீர்களா!' என்றார் எங்கள் ஆசிரியர்.

கேள்விகள்

1. இரண்டு மலைகளின் பெயர்கள் எவை?
2. இராஜ கிரியில் காணத் தக்கவை யாவை?
3. இராணி கிரியில் பார்க்கத் தக்கவை எவை?
4. அடிவாரத்தில் காணத் தக்கவை எவை?
5. இக்காட்சியிலிருந்து நீ அறிவது யாது?

பயிற்சி

1. இப்பாடத்தை மௌனமாகப்படி; பாராக்களுக்குத் தலைப்புக் கொடு.

2. அடிவாரம், இராஜகிரி, இராணிகிரி, முடிவு - இக்குறிப்புகளைக் கொண்டு இப்பாடச் செய்திகளை ஒரு கட்டுரையாக எழுது.

3. கட்டடம், அழிந்து, இடிந்த, அடுக்குகள். - இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

4. முதல் பாராவில் உள்ள எ. ப. செ. கூறு.

5. இரண்டாம் பாராவில் உள்ள அறுவகைப் பெயர்ச் சொற்களைக் கூறு.

6. மூன்றும் பாராவில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயர் எச்சங்கள் கூறு.

7. நான்காம் பாராவில் உள்ள ஒருமை, பன்மைப் பெயர்களைக் கூறு; உயர்திணை, அஃறிணைப் பெயர்களைக் கூறு.

8. ஐந்தாம் பாராவில் உள்ள வேற்றுமை உருபுகளைக் கூறு.

9. ஆறாம் பாராவில் உள்ள செய்வினை - செயப்பாட்டு வினை, தன்வினை - பிறவினை, செ. குன்றாவினை—செ. குன்றியவினைகளைக் கூறு.

10. தேசிங்கு மன்னர் செஞ்சியில் அரசாண்டார்.—சொல் இலக்கணம் கூறு.

இலக்கணம்

கட்டுரை எழுதுகையில் முன்சொன்ன இரட்டைச் சொற்கள், அடுக்குத் தொடர், நேர்—மாறான சொற்கள் என்பவற்றை உபயோகிப்பதோடு உவமைகளையும் பயன்படுத்தல் கட்டுரையை அழகு செய்யும். தாமரை மலர்வதுபோல அவள் முகம் மலர்ந்தது.— இதில் 'தாமரை மலர்வது போல' என்பது உவமை. இத்தகைய உவமைகள் பலவாகும். அவற்றுள் சிலவற்றையேனும் நீங்கள் அறிந்திருத்தல் நலம்.

கயல் போன்ற கண், சந்திரன் போன்ற முகம், தாமரை மலர் போன்ற கண், வேல் போன்ற விழி, முத்துப் போன்ற பல், கொவ்வை போன்ற உதடு, மயில் போன்ற சாயல், குயில் போன்ற குரல், அன்னம் போன்ற நடை, சிங்கம் போன்ற பார்வை, புலியன்ன பாய்ச்சல், ஆலிலை போன்ற வயிறு, மூங்கில் போன்ற தோள், கிளி பேசுதல் போன்ற பேச்சு.

25. கோபால கிருஷ்ண கோகலே

(மௌன வாசிப்பு)

புதிய சொற்கள்:—அரசியல் துறை—பாடுபட்ட—பெருமதிப்பு—மஹாராஷ்டிரர்—உற்சாகம்—மஹாதேவ—ரானடே—கனவான்—வருஷகாலம்—அழுத்தமாக—பேரறிஞர்—வரவு செலவு—சர்வஜன சபை—செல்வநிலை—தக்ஷிணசபை—சட்ட சபை—குடியானவர்—உறுப்பினர்—இலவசக் கல்வி—ஆப்பிரிக்கா—கூலிகள்—உடன் படிக்கை—இன்றளவும்.

நமது இந்தியாவில் தோன்றிய பெரியார் பலருள் **கோபால கிருஷ்ண கோகலே** என்பவரும் ஒருவர். இவர் மக்கள் சீர்திருத்தத்திலும் அரசியல் துறையிலும் பாடுபட்ட பெரியார். இவர் அரசாங்கத்தாரிடம் பெரு மதிப்புப் பெற்றவர்.

இவர் 1866-ல் ஓர் எளிய மஹாராஷ்டிரப் பிராமண குடும்பத்தில் பிறந்தார்; ஆயினும், பலர் உதவி பெற்றுப் படித்துப் பி. ஏ. பட்டம் பெற்றார்; பொது நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட ஆங்கிலக் கலாசாலை ஒன்றில் குறைந்த சம்பளம் பெறும் ஆசிரியர் ஆனார்; அந்த வேலையை மிகவும் உற்சாகத்துடன் செய்துவந்தார்; மஹாதேவ கோவிந்த ரானடே என்னும் மஹாராஷ்டிரக் கனவானிடம் பன்னிரண்டு வருஷகாலம் இருந்து, அரசியல் விஷயங்களை அழுத்தமாக அறிந்து கொண்டார்; அரசாங்க வரவு செலவுக் கணக்கிலும் பேரறிஞராக விளங்கினார்.

அரசாங்கம் அக்காலத்தில் பொதுமக்கள் நன்மைக்காகச் 'சர்வ ஜன சபை' ஒன்றை ஏற்படுத்தி இருந்தது.

கோகலே அதன் உதவிக் காரியதரிசியாக இருந்தார்; அச் சபையினர் வெளியிடும் பத்திரிகையில் இந்தியாவில் செல்வ நிலையைப் பற்றிப் பல கட்டுரைகள் எழுதிப் பெயர் பெற்றார்; பிறகு தாமே 'தக்ஷிண சபை' என்னும் ஒன்றை ஏற்படுத்திப் பொது மக்களுக்குத் தொண்டு செய்து வந்தார்.

1896-ல் இந்திய அரசியல் விஷயங்களை விசாரிக்க ஒரு சபையை அரசாங்கத்தார் ஏற்படுத்தினர். அதில் கோகலே ஒருவராக இருந்தார். அதனால் இவர் இங்கிலாந்து சென்று, இந்தியாவின் செல்வ நிலையைத் தெளிவாக விளக்கிப் புகழ் பெற்றார். 1900-ல் இவர் பம்பாய்ச் சட்டசபையில் ஓர் உறுப்பினர் ஆனார்; அங்கு ஏழைக் குடியானவர்க்காகப் பரிந்து பேசி வரிச்சுமையைக் குறைக்க முயன்றார்; இந்தியர்களுக்கு உயர்ந்த வேலைகள் தருமாறு அரசாங்கத்தைத் தூண்டி வெற்றி பெற்றார். இந்தியர்களுக்கு ஆரம்ப இலவசக் கல்வி அளிக்குமாறு அரசாங்கத்தை வற்புறுத்தி வந்தார்.

கோகலே 1905-ல் பூனாவில் இந்திய ஊழியர் சங்கம் ஒன்றை ஏற்படுத்தினார்; தம்முடைய உடல், பொருள், ஆவி மூன்றையும் அச்சங்க முன்னேற்றத்திற்காக முன் நிறுத்தினார். இன்று அச்சங்கம் அரிய பெரிய சேவைகளைச் செய்து வருகின்றது. அதன் ஆதரவில் பூனாவில் சேவா சாதனக் கல்லூரி ஒன்று பெண்களுக்காகத் தொண்டு செய்து வருகின்றது.

கோகலே, 'தென்னாப்பிரிக்கா முதலிய இடங்களுக்கு ஏழை இந்தியரைக் கூலிகளாக அனுப்பலாகாது' என்று

1910-ல் ஒரு சட்டம் செய்வித்துப் புகழ்பெற்ருர்; 1912-ல் தென் ஆப்பிரிக்கா சென்று இந்தியரைக் கண்டு, அந்த நாட்டு அரசாங்கத்தாருடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். அதனுல் கூலிகள் சிறிது நன்மை பெற்ருர்கள்.

கோகலே, இவ்வாறு பல வழிகளில் இந்தியப் பொது மக்களுக்கு உழைத்துவந்தார். இவர் தந்நலம் அற்ற பெரியார்; பிறர் நலமே தம் நலம் எனக் கருதிய மஹான். இவர் இந்தியர்க்கு ஒவ்வொரு துறையிலும் செய்த சேவை பாராட்டத் தக்கது. இவர் 1915-ல் இறந்தார். ஆயினும், இந்தியர் இவரை இன்றளவும் மறக்கவில்லை.

கேள்விகள்

1. கோகலேயின் அருங்குணங்கள் எவை?
2. அவர் செய்த பொதுத் தொண்டுகள் எவை?
3. அவர் எந்தத் துறையில் சிறந்தவர்?
4. நீ அவர் வரலாற்ருல் அறிவது யாது?

பயிற்சி

1. அரசியல், பாடுபட்ட, பெரு மதிப்பு, உடன்படிக்கை, இன்றளவும்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. இப்பாடத்தை மௌனமாகப் படி; பாராக்களுக்குத் தலைப்புக் கொடு.

3. கோகலேயின் இளம்பருவம்—அவரது பொது நலத் தொண்டு—அவர் அருங்குணங்கள்: இக் குறிப்புகள் கொண்டு இவர் வரலாற்றை மூன்று பாராக்களில் ஒரு கட்டுரை எழுது.

26. இலங்கைத் தீவு

புதிய சொற்கள் :—அண்மை—தொடர்பு—திறத்தார்—சிங்கள வர்—அநாகரிக—நிமித்தம்—துருக்கியர் — அமெரிக்கர் —குடியேறி —உரியவர்—மஹா வம்சம்—த்வீபம்—தீவு—கிறிஸ்து—விஹாரம் —அசோகன்—பிக்ஷுக்கள்—மதப் பிரசாரம்—அரச மரம்—பாதச் சுவடு — யாத்ரிகர் — இலங்கியது — துறைமுகம் — நடுநாயகம்— கொழும்பு—இந்து மஹா சமுத்திரம்—யாழ்ப்பாணம்—தாமோதரம் பிள்ளை—தமிழன்னை.

இந்தியாவுக்குத் தெற்கே—தமிழ் நாட்டிற்கு அண்மையில் நீண்ட காலமாக நெருங்கிய தொடர்புடையது இலங்கைத் தீவாகும். அதில் சிங்களவர், நாகர், தமிழர் முதலிய பலதிறத்தார் வாழ்கின்றனர். காடுகளில் நாகர் முதலிய அநாகரிக மக்கள் வசிக்கின்றனர். இப்பொழுது ஐரோப்பிய நாட்டார், ஜப்பானியர், சீனர், துருக்கியர், அமெரிக்கர் முதலிய பலரும் வியாபார நிமித்தம் அங்குக் குடியேறி இருக்கின்றனர். என்றாலும், சிங்களவரே இலங்கைக்கு உரியவர் ஆவர்.

இலங்கையின் இராஜ வம்சத்தைப் பற்றிய வரலாறு கூறும் நூல்கள் இரண்டு உண்டு. அவை மஹா வம்சம், த்வீப வம்சம் என்பன. 'த்வீபம்' என்பது 'தீவு' என்று பொருள் படும். கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே சிங்கள அரசர்கள் இலங்கையை ஆண்டு வந்தார்கள். அப்பொழுது இருந்தே தமிழர் இலங்கையோடு நெருங்கிய உறவு கொண்டிருந்தனர். கரிகாலன், இராஜராஜன், இராஜேந்திரன் முதலிய சோழ வேந்தர்களும் பாண்டியரும் இலங்கைமீது படையெடுத்துச் சென்று, இலங்கையை வென்று ஆண்டனர்

என்று சரித்திரம் கூறுகிறது. சில சமயங்களில் இலங்கை அரசரும் தமிழ் நாட்டின்மீது படையெடுத்து வந்தனர்.



கி. மு. மூன்ரும் நூற்ருண்டில் இந்தியச் சக்கரவர்த்தியாக இருந்த **அசோகன்**, புத்த மதத்தைப் பரப்பச் சிலரை இலங்கைக்கு அனுப்பினுன். அன்று முதல் இலங்கையில் புத்த மதமே சிறந்து விளங்குகிறது. பல புத்த விஹாரங்கள், பள்ளிகள் நாடெங்கும் ஏற்படுத்தப்பட்டன. ஆயிரக்கணக்கான பௌத்த பிக்ஷுகள் நாடெங்கும் மதப் பிரசாரம் செய்தார்கள். '**அநுராதா புரம்**' என்னும் தலைநகரத்தில் அசோகன் அனுப்பிய அரச மரக் கிளை நடப்பட்டது. அஃது இன்று பெரிய மரமாக இருந்து பௌத்த மதச் சின்னமாக விளங்கி வருகிறது. புத்தர் அரச மரத்தடியில்

ஞானம் பெற்றதால் அரச மரம் புத்தர்களால் கொண்டா டப்படுகிறது. இலங்கையைச் சார்ந்த பல தீவுகளிலும் புத் தர் கோயில்கள் கட்டப்பட்டன. மலையுச்சிகளில் புத்தர் பாதச் சுவடுகள் உண்டாக்கப்பட்டன. பௌத்த நூல்கள் பல, பாலி பாஷையில் எழுதப்பட்டன. அக் காலத்தில் இலங்கைத் தீவு புத்த மதத்திற்குப் பெயர் பெற்றதாக இருந்தது. சீன யாத்ரிகர்களும் இலங்கையைத் தரிசித்துச் சென்றார்கள். அக் காலத்துப் பௌத்த உலகத்துக்கு இலங்கை உயிர் நாடியாக இலங்கியது.

இலங்கைத் தீவு முத்து வியாபாரத்தில் பெயர்பெற்றது. பழைய காலத்தில் தமிழர், அரேபியர், ரோமர், கிரேக்கர், சீனர் முதலியோர் இலங்கையோடு கடல் வாணிபம் செய்து வந்தனர். இன்றைய இலங்கை ரப்பர், தேயிலை முதலிய வற்றை வெளி நாடுகளுக்கு அனுப்பிவருகின்றது. தமிழ் நாட்டு அரிசி, வேர்க்கடலை, துணிமணிகள் முதலியன இலங்கைக்குச் செல்கின்றன. இலங்கைப் பொருள்கள் தமி ழகத்தில் இறக்குமதி ஆகின்றன.

இலங்கையில் சிறந்த துறைமுகப்பட்டினம் கொழும்பு என்பது. அந் நகரத் துறைமுகம், இந்து மஹா சமுத்திரத் தில் நடைபெறும் வியாபாரத்துக்கு நடுநாயகமாக இருப் பது. கிழக்கே சிங்கப்பூர், ஆஸ்ட்ரேலியா, சீனு, ஜப்பான் முதலிய இடங்களுக்குச் செல்லும் கப்பல்களும், இரங்கூன், கல்கத்தா, சென்னை முதலிய இந்தியத் துறைமுகங்களுக்குச் செல்லும் கப்பல்களும் கிழக்கிலிருந்து ஆப்பிரிக்கா, பார சீகம், அரேபியா, ஐரோப்பா முதலிய இடங்களுக்குச் செல் லும் கப்பல்களும் கொழும்பைத் தரிசித்தே செல்கின்றன.

ஆதலால், கொழும்பு நகரில் உலக மக்கள் அனைவரையும் நாம் காணக்கூடும்.

இலங்கைக்கும் தமிழர்க்கும் மிக நெருங்கிய சம்பந்தம் உண்டு. யாழ்ப்பாணத் தீவுகளில் தமிழர் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். தமிழர் பலர் ரப்பர், தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்கின்றனர். இலங்கையில் தமிழ் மொழி வளர்ந்து வருகிறது. பல தமிழ்ப் பள்ளிகள் வளர்ச்சி பெற்று வருகின்றன. சிறந்த தமிழ்ப் புலவர்கள் இருக்கின்றார்கள். தமிழ்ப் பெரு நூல்களை முதன் முதல் அச்சிட்ட சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் யாழ்ப்பாணத் தமிழர் ஆவர். இலங்கையில் அவரைப் பின்பற்றித் தமிழ்ப் புலவர் பலர் இன்றும் தமிழ்த் தாய்க்குச் சேவை செய்து வருகின்றனர். ஆதலால், தமிழ் நாட்டைப் போலவே இலங்கையும் தமிழன்னையின் திருக்கோயில் ஆகும்.

கேள்விகள்

1. இலங்கையில் உள்ள வெளி நாட்டவர் யாவர்?
2. இலங்கையில் அரசாண்டவர் யாவர்? அவர்கள் வரலாறுகளைக் கூறும் நூல்கள் எவை?
3. அசோகனுக்கும் இலங்கைக்கும் உள்ள தொடர்பு யாது?
4. இலங்கை ஏற்றுமதி—இறக்குமதிப் பொருள்கள் எவை?
5. கொழும்புத் துறைமுகம் எவ்வாறு சிறப்புடையது?
6. தமிழர்க்கும் இலங்கைக்கும் உள்ள தொடர்பு யாது?

பயிற்சி

புத்தர், பௌத்தர், தொடர்பு, சம்பந்தம், அண்மை, சமீபம், வரலாறு, சரித்திரம், சேவை, தொண்டு,	ஒரு பொருட் சொற்கள். இவற்றைப் போன்ற சொற்களை இப் பாடத்திலிருந்து எடு.

இலக்கணம்

ஒரு செய்யுளில் வாக்கிய அமைதி நேராக இராது; எழுவாய் பயனிலைகள் ஒழுங்காக இரா; சிதறிக் கிடக்கும். அவற்றை முறைப் படுத்திக் கூறுவது உரைநடைப் படுத்தல் அல்லது 'அங்வயம்' (Prose order) எனப்படும். அங்வயப்படுத்திப் பதம் பிரித்த பிறகே அர்த்தம் கூறுதல் வேண்டும். அர்த்தம் கூறுதல் 'பதவுரை' எனப்படும். மொத்த அர்த்தம் 'பொழிப்புரை' எனப்படும். பாட்டால் அறியப் படும் நீதி 'கருத்துரை' எனப்படும். இம் மூன்றையும் கவனித்து ஒவ்வொரு பாட்டையும் படித்தல் வேண்டும்.

"மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறியர் என்றிருக்க வேண்டா—கடல்பெரிது
மண்ணீரும் ஆகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும்."

i. அங்வயமும் பதப் பிரிவும் :—தாழை மடல் பெரிது; மகிழ் கந்தம் இனிது; உடல் சிறியர் என்று இருக்கவேண்டா :—கடல் பெரிது மண்நீரும் ஆகாது; அதன் அருகே சிற்றூறல் உண்நீரும் ஆகி விடும்.

ii. பதவுரை :—தாழை—தாழம்பூவினது
மடல்—மடல் (இதழ்)
பெரிது—பெரியது.

குறிப்பு—இதுபோலப் பதத்துக்குப் பதம் உரை கூறிச் செல்க.

iii. பொழிப்புரை :—தாழம்பூவினது இதழ் பெரியது.........

குறிப்பு—இவ்வாறு மொத்த அர்த்தத்தைக் கூறிச் செல்க.

iv. கருத்துரை:—சிறு துரும்பும் பல் குத்த உதவும். ஆதலால், சிறியதென்று எதனையும் அசட்டை செய்யலாகாது.

27. குமண வள்ளல்

(நாடகம்)

புதிய சொற்கள் :—குமணன்—தமையனார்—அடைபவர் — எச்சரிக்கை—கணம்—வேலை தீர்த்துவிடு — பள்ளியறை — மாற்று—பசும்பொன்—துரோக சிந்தனை—தாமதித்தல்—இளையவன் — அவனுவது—தருவதாக — கெடுமதி—தோற்றுகிறார் — மூப்படைந்த—உதாரகுணம்—வரையாது — போன்றுரை—பழையபடி—அரியணை—பாக்கியசாலி—அமர்த்துமாறு—உகுத்து—அறிவீனன் — கதறுதல்—ஆற்றுவேன் — இராச்சியத்தை — புகட்டிய — ஆதரவில்—அண்ணல்.

காட்சி 1

[இளங்குமணன்—நண்பர்களான வீரன், சூரன், ஆக மூவரும் பேசுதல்]

வீரன் :—இளவரசே, நீர் உமது தமையனாராகிய குமண வள்ளலை அவர் விருப்பம் போல விட்டுவிடுவீர் ஆனால், அரண்மனைச் செல்வம் காலியாய்விடும். அவருக்குப் பிள்ளை இல்லாமையால், அவர்க்குப் பின் பட்டம் அடைபவர் நீரே. அப்பொழுது பணம் இன்றித் துன்பப்பட வேண்டியவரும் நீரே ஆதலால், நீர் இப்பொழுதே எச்சரிக்கையாக இருத்தல் நலம்.

இளங்குமணன் :—நண்பனே, நீ சொல்வது சரியே. நான் என் செய்வது? பலமுறை சொல்லிப் பார்த்தாய் விட்டது. பயனில்லை. அவர் அறச் செயல் நில்லாது.

சூரன் :—ஆளையே வேலை தீர்த்து விட்டால், என்ன? நீர் இப்பொழுதே இராச்சியத்தை ஏற்றுக்கொள்ளலாமே!

வீரன் :—அது நல்ல யோசனையே.

இ. குமணன் :—சரி. இன்றிரவு நானே அவர் பள்ளி அறையுட் புகுந்து வேலை முடித்து விடுகிறேன்.

(மூவரும் போதல்)

[இவர்கள் பேச்சை அரண்மனை **வேலைக்காரன்** மறைந்து கேட்டுக்கொண்டிருத்தல். அவர்கள் சென்ற பிறகு அவன் வெளியே வந்து,]

என்ன அநியாயம்! அண்ணன் வரையாத வள்ளல்! மாற்றறியாத பசும்பொன்! அருங்குணங்களே உருவெடுத் தாற் போன்ற அண்ணல். இளையவனே அப்பெருமானைக் கொல்லத் துணிந்துவிட்டான். என்ன துரோக சிந்தனை! நான் இதனை அரசரிடம் கூறி, அவரைத் தப்புவித்தல் வேண்டும்; அரைக் கணமும் தாமதித்தல் ஆகாது.

(போகிறான்)

காட்சி 2

காடு

குமணன் :—(தனக்குள்) என் தம்பி மிகவும் நல்லவன். அவன் சொல்பவர் பேச்சைக் கேட்பவன்; சுயபுத்தி இல்லா தவன். சுயபுத்தி அற்றவன் நிலைமை ஆபத்தையே விளைக் கும். என் செய்வது! அவனாவது சுகமாக இருந்து நாட்டை ஆளட்டும். நான் இந்தக் காட்டிலேயே இருந்து காலம் கழிப்பேன். என் தலையைக் கொண்டு வருபவர்க்கு ஆயிரம் பொன் தருவதாகத் தம்பி பறை அறைந்தானும். என்ன கெடுமதி!....

(புலவர் வருதல்)

ஆ! அங்கு வருபவர் யார்? தமிழ்ப்புலவர் போலத் தோற்றுகிறார்.

புலவர் :—அரசே, வணக்கம். நான் ஒரு தமிழ்ப் புலவன். தங்களைக் காண நாடு சென்றேன்; நடந்ததை உணர்ந்தேன்; பின் காடு அடைந்தேன்.

குமணன் :—புலவரே, நீர் என்னை நோக்கி வந்த காரணம் யாது?

புலவர் :—நான் மிகுந்த வறியவன்; வீட்டில் மனைவி, மக்கள் பட்டினி கிடக்கின்றனர். மூப்படைந்த என் பெற்றோரும் பசியால் வாடுகின்றனர். தங்கள் உதார குணத்தைக் கேள்வியுற்று வந்தேன். நீங்களோ நாட்டைத் துறந்து காட்டில் இருக்கிறீர்கள். என்ன செய்வது!

(ஏங்கி நிற்றல்)

குமணன் :—புலவரே, நான் வரையாது அளித்த காலத்தில் நீர் வரவில்லை; வறுமையுற்ற காலத்தில் வந்து நிற்கிறீர். ஆயினும் கவலைப்பட வேண்டா. என் தலையைக் கொண்டு வருவோர்க்கு ஆயிரம் பொன் தருவதாகத் தம்பி வாக்களித்துள்ளான். இந்த வாளால் என் தலையை வெட்டிக்கொண்டு போம். உமது வறுமை நீங்கும்.

(வாளைத் தரல்; புலவர் வாங்க மறுத்தல்.)

புலவர் :—(தனக்குள்) [ஆ! இப் பெருங்குண வள்ளலைப் போன்றாரை யான் கண்டதில்லை; கேட்டதும் இல்லை.] அரசே! உம்மைப் போன்ற தமையனாரைப் பெற்ற இளங்குமணர் பேறு பெற்றவரே ஆவர். அவரை உம்மிடம்

அழைத்து வருகிறேன் ; உம்மைப் பழையபடி அரியணையில் வைத்து யான் அகல்வேன். நான் சென்று வருகிறேன்.

(புலவர் போதல்)

காட்சி 3

அரண்மனை—இளங்குமணன்

இ. குமணன் :—நீர் யார் ? எங்கு வந்தீர் ?

புலவர் :—அரசே, நான் ஒரு தமிழ்ப் புலவன் ; வறுமையாளன் ; குமணவள்ளலைக் கண்டு உதவி பெற வந்தேன் ; அவர் உமக்குப் பயந்து காடு சென்று வசிப்பதாகக் கேள்விப்பட்டேன் ; காடு சென்று அவரைக் கண்டேன் ; தமது தலையை வெட்டிக் கொண்டு சென்று உம்மிடம் காட்டி ஆயிரம் பொன் பெறும்படிக் கூறி வாளை ஈந்தார். நான் மறுத்து உம்மிடம் வந்தேன். அரசே, 'உடன் பிறப் போடு தோள் வலி போம்.' அப்பெருமகன் குணத்தைப் பார்த்தபின் என் மனம் பொறுக்கவில்லை. அவரைத் தமையனராகப் பெற்ற நீரே பாக்கியசாலி. அவரை அழைத்து வந்து அரியணைமீது அமர்த்துமாறு உம்மை வேண்டுகிறேன். (புலவர் கண்ணீர் உகுத்தல்)

இ. கு. :—(கண்ணீர் உகுத்து) புலவரே, யான் அறிவீனன். இப்பொழுதே உண்மை உணர்ந்தேன். குமண வள்ளல் குணக்குன்று. அவரே அரசராக இருக்கத் தக்கவர். நாம் இருவரும் இப்பொழுதே காடு செல்வோம் ; அப்பெருந்தகையை அழைத்துவருவோம், புறப்படும்.

(இருவரும் போதல்)

காட்சி 4

காடு

குமணன் :—ஆ! புலவர் என் தம்பியை அழைத்து வருகிறார் போலும்! அவர்கள் தாமா? (உற்றுப் பார்த்தல்)

இ. குமணன் :—(ஆவலோடு ஓடி வந்து) அண்ணா, என் பிழையை மன்னிக்க வேண்டும். (காலில் விழுந்து கதறுதல்)

குமணன் :—(தம்பியைத் தூக்கி நிறுத்தி) அப்பனே, உன் மீது தவறில்லை. எல்லாம் முன்வினைப் பயன்.

இ. குமணன் :—அண்ணா, தாங்களே நாட்டை ஆளுங்கள். அடியேன் தங்கள் அடியின் கீழ் இருந்து பணி ஆற்றுவேன். வாருங்கள் போகலாம். (எல்லோரும் போதல்)

காட்சி 5

குமணன்—புலவர். அரண்மனைப் பூங்கா.

குமணன் :—புலவரே, நான் உம்மால் அல்லவா நாடு அடைந்தேன்! என் தம்பிக்கு அறிவு புகட்டிய பெரியவர் நீரே. ஆதலால், நீர் உமது குடும்பத்துடனே இவ்வூர்க்கு வந்துவிடும்; வறுமை அற்று இங்கு வாழலாம்.

புலவர் :—அரசே, தங்கள் விருப்பம் என் பாக்கியம். இத்தகைய அருங்குண அண்ணலாகிய தங்களைக் காணத் தூண்டியவள் நமது தமிழ்த்தாய் அல்லவா? அவளால் அல்லவா எனது வறுமை நோய் நீங்கிற்று! ஆதலால், தமிழன்னைக்கு என் முதல் வணக்கம் உரியதாகுக.

காட்சி முடிகிறது.

வரையாது—குறையாமல், பேறு—பாக்கியம், அரியணை—சிங்காசனம், பெருந்தகை—நல்லவர், பணி—தொண்டு.

கேள்விகள்

1. இளங்குமணன் ஏன் தமையனைக் கொல்லத் துணிந்தான்?
2. குமணன் எவ்வாறு தப்பினான்?
3. புலவரிடம் குமணன் யாது கூறினான்?
4. புலவர் இளங்குமணனிடம் யாது கூறினார்?
5. முடிவென்ன?
6. தமிழுக்கும் குமண வள்ளல் நாடு அடைந்ததற்கும் புலவர் வறுமை தீர்ந்தமைக்கும் உள்ள தொடர்பு யாது?

பயிற்சி

1. எச்சரிக்கை, கெடுமதி, கதறுதல், அமர்த்துமாறு, இராச்சியம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

2. கோடிட்ட இடங்களில் தக்க இரட்டைச் சொற்களை அமை:—

(1) அவன்———என்று சிரித்தான்.

(2) இவள்———என்று நடந்தாள்.

3. கோடிட்ட இடங்களில் தக்க அடுக்குத் தொடரை அமை:-

(1) புற்றிலிருந்து புறப்பட்டது———.

(2) அவன் ———என்று அறைந்தான்.

4. கோடிட்ட இடங்களில் நேர் - மாறான சொற்களை அமை:-

(1) அவள்——— ப் பேசினாள்.

(2) அவனுக்கு வியாபாரத்தில்———தெரியவில்லை.

5. வினவாக மாற்று:—

(1) அவன் அப்பொழுது போனான்.

(2) அவன் அவ்வீட்டில் இருக்கிறான்.

(3) அவர் வந்து பேசினார்.

6. சாதாரண வாக்கியமாக மாற்று:—

(1) நீ பள்ளிக்குப் போனாயா?

(2) அவன் அங்குச் சென்றானா?

(3) அவள் அவரோடு படித்தாளா?

7. குமணன் பெரிய அரண்மனையுள் சுகமாக வசித்து வந்தான்:—

(1) எ. ப. செ. கூறு.

(2) பெயரெச்சம், வினையெச்சம் கூறு.

(3) குமணன், பெரிய, சுகமாக, அரண்மனையுள்.—'சொல் இலக்கணம்' கூறு.

8. பிரித்து எழுது:—அரசரிடம், வாக்களித்துள்ளான், வறுமையுற்ற, அவனுவது, தமையனாராக.

9. சேர்த்து எழுது:—அற + செயல், கேள்வி + உற்று, தமிழ் + அன்னை, இருக்க + தக்கவர், நாட்டை + துறந்து.

10. குமணன் காட்டில் புலவரோடு பேசினான், புலவரது பேச்சு இளங்குமணனை உருக்கியது, புலவரே! புறப்படுவோம்—இவற்றுள் உள்ள வேற்றுமை உருபுகளைக் கூறு.

செய்யுள் பாடம்

1. மூதுரை

(நன்றி பயன் தரும்)

நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி
'என்று தருங்கொல் ?' எனவேண்டா ;—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால். 1

நன்றி - நன்மை, தரும்கொல் - தருமோ, தளரா - தளராத, தெங்கு - தென்னை மரம் (இச்சொல் இன்னும் மலையாள நாட்டில் வழங்குகிறது.)

(காலத்தின் சிறப்பு)

அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா ;— தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா. 2

எடுத்த - தொடங்கிய, பருவத்தால் - காலத்தால், பழா - பழுக்க மாட்டா.

(நல்லாரால் எல்லோரும் நலம் பெறுவர்)

நெல்லுக்(கு) இரைத்தநீர் வாய்க்கால் வழியோடி
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் ;— தொல் உலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்(டு)
எல்லார்க்கும் பெய்யும் மழை. 3

பொசியும் - ஊறும், தொல் - பழமையான.

(உருவத்தைக் கண்டு இகழலாகாது)

மடல்பெரிது தாழை; மகிழ்இனிது கந்தம்;
உடல்சிறியர் என்றிருக்க வேண்டா;— கடல்பெரிது
மண்ணீரும் ஆகா(து); அதனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும். 4

கந்தம் - வாசனை, தாழை - தாழம்பூ, மகிழ் - மகிழம் பூ, மண்ணீர்- குளிக்கும் நீர், உண்ணீர் - குடிநீர், சிற்றூறல் - சிறிய ஊற்று.

(படித்தவர் பெருமை)

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கில்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்;— மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை; கற்றோர்க்குச்
சென்றஇடம் எல்லாம் சிறப்பு. 5

மாசுஅற - குற்றம் நீங்க, சீர்தூக்கில் - ஆராய்ந்தால், மன்னன் இல் - அரசனைவிட.

—ஔவையார்

2. நல்வழி

(உழவின் உயர்வு)

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே;—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்(கு) ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. 1

விழும் - அழியும், ஏற்றம் - மேன்மை, ஒப்பில்லை - சமானம் இல்லை, கண்டீர் - அறிவீர், பழுது - குற்றம், பணி - தொழில்.

(சிக்கன வாழ்க்கை)

ஆன முதலில் அதிகம் செலவானல்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனய் ஏழ்பிறப்பும் தீயனய்
நல்லார்க்கும் பொல்லனம் நாடு. 2

மதி - அறிவு, பொல்லன் ஆம் - பொல்லாதவன் ஆவான், நாடு - அறிந்துகொள்.

(செல்வத்தின் சிறப்பு)

கல்லானே ஆனலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங்(கு) எதிர்கொள்வர்;—இல்லானை
இல்லாளும் வேண்டாள்; மற் றீன்றெடுத்த தாய்வேண்
[டாள்;
செல்லா தவன்வாயிற் சொல். 3

இல்லானை - பொருள் இல்லாதவனை, இல்லாள் - மனைவி, ஈன்று - பெற்று.

(மானத்தின் மாண்பு)

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சை பலசொல்லி இடித்துண்கை;—சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியா(து)
உயிர்விடுகை சால வுறும். 4

இச்சை - இச்சகம், உண்கை - உண்ணுதல், சால - மிகவும், உறும் - அமையும்.

(ஒரே பொருளை உரைப்பன)

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை

திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர். 5

தேவர் - திருவள்ளுவர், மூவர் - அப்பர், சுந்தரர், சம்பந்தர்; கோவை - மாணிக்கவாசகர் பாடிய 'திருக்கோவையார்' என்னும் நூல், மூவர் தமிழ் - தேவாரம், முனி - திருமூலர், மொழி - திருமந்திரம், நான்மறை - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்கள்.

—ஔவையார்

3. நீதி வெண்பா

(நல்லவர் - கெட்டவர்)

கற்பூரம் போலக் கடலுப்(பு) இருந்தாலும்
கற்பூரம் ஆமோ கடலுப்பு?—பொற்பூரும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ? புகல். 1

பொற்பு ஊரும் - நன்மை மிகுந்த, புகல் - சொல், புல்லியர் - அற்பர்.

(நற்புதல்வன்)

பொற்பறிவில் லாதபல புத்திரரைப் பெறுதலினோர்
நற்புதல்வனைப் பெறுதல் நன்றாமே;—பொற்
[கொடியே!
பன்றிபல குட்டி பயந்ததனால் ஏதுபயன்?
ஒன்றமையா தோகரிக்கென் றோது. 2

பொற்கொடியே - அழகிய கொடி போன்றவளே, மகடூஉ முன்னிலை; அமையாதோ - அவற்றின் பயன் தாராதோ? பொற்பு - நல்ல.

(தீயவர் கற்றவராயினும் தீயவரே)

தீயவர்பால் கல்வி சிறந்தாலும் மற்றவரைத்
தூயவரென் றெண்ணியே துன்னற்க;—சேயிழையே!
தண்ணொளிய மாணிக்கம் சர்ப்பம் தரித்தாலும்
நண்ணுவரோ மற்றதனை ? நாடு. 3

துன்னற்க - நெருங்காதே, சேயிழையே - சிவந்த ஆபரணங்களை அணிந்தவளே, நண்ணுவரோ - நெருங்குவரோ? தண் - குளிர்ந்த.

(கெட்டவர் நட்புக் கேடு பயக்கும்)

நிந்தையிலாத் தூயவரும் நிந்தையரைச் சேரிலவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே;—நிந்தைமிகு
தாலநிழல் கீழிருந்தான் தன்பால் அருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ ? பார். 4

நிந்தை - பழிப்பு, தாலம் - பனைமரம், ஆன்தன்பால் - பசுப் பால், பார் - கவனி.

(கற்றவரைப் பேச்சால் அறிக)

வாக்குநயத் தாலன்றிக் கற்றவரை மற்றவரை
ஆக்கைநயத் தாலறிதல் ஆகாதே ;—காக்கையொடு
நீலச் சிறுகுயிலை நீடிசையால் அன்றியே
கோலத்(து) அறிவருமோ ? கூறு. 5

மற்றவர் - பிறர், ஆக்கை - உடம்பு, கோலம் - உருவம், அறிவருமோ - அறிய வருமோ, நீடு இசை - நீண்ட குரல்.

—ஔவையார்

4. நீதி நெறி விளக்கம்

(நிலை இல்லாமை)

நீரிற் குமிழி இளமை ; நிறைசெல்வம்
நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள் ;—நீரில்
எழுத்தாகும் யாக்கை ; நமரங்காள் ! என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று ? 1

திரை - அலை, யாக்கை - உடம்பு, நமரங்கள் - நம்மவர்களே !

(பயனற்றவை)

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும், கல்லார்
அவையஞ்சா ஆகுலச் சொல்லும்,—நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமும் நல்கூர்ந்தார் இன்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று. 2

அவை - சபை, மெய் - உடல், விதிர்ப்பார் - நடுங்குபவர், அஞ்சா - பயப்படாத, ஆகுலம் - ஆரவாரம், நவை - குற்றம், ஈத்து - கொடுத்து, நல்கூர்ந்தார் - வறுமை அடைந்தவர், இன்னலம் - இனிய தாக்ஷிணியம், பூத்தலில் - உண்டாவதைவிட, பூவாமை - உண்டாகாமை.

(கருவம் கூடாது)

முற்றும் உணர்ந்தவர் இல்லை ; முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க ;—சிற்றுளியால்
கல்லும் தகரும் ; தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால். 3

தகரும் - உடைபடும், களியற்க - சந்தோஷப்படாதே, கனங்குழாய் ! - கனத்த காதணியை அணிந்தவளே ! கொல் - கொல்லன்.

(செய்ய வேண்டுவன)

பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு ;—பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல். 4

பெருஞ்சுட்டு - நன்மதிப்பு, யாண்டும் - எங்கும், நோற்பது - செய்யத் தகுவது, சீர் - நல்லன, சிறுமை - தீயன, புறங்காத்து - மறைத்து, தாழ்ச்சி - பணிவு.

(தீய குறிகள்)

நட்புப் பிரித்தல் பகைநட்டல் ஒற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையும் ஐயுறுதல்—தக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டும் குறி. 5

தக்கார் - பெரியோர், கோறல் - அலக்ஷியம் செய்தல், நெடுமொழி - உறுதிச் சொல்.

—குமரகுருபர சுவாமிகள்

5. சதகச் செய்யுட்கள்

(செல்வத்தின் சிறப்பு)

பணந்தானே அறிவாகும் ; பணந்தானே வித்தையுமாம் ;
பரிந்து தேடும்
பணந்தானே குணமாகும் ; பணமில்லா தவர்பிணமாம்
பான்மை சேர்வர் ;
பணந்தானே பேசுவிக்கும் ; தண்டலைநீள் நெறியாரே !
பார்மீ திற்றான்

பணந்தானே பந்தியிலே; குலந்தானே குப்பையிலே
படுக்குந் தானே. 1

—தண்டலையார் சதகம்—படிக்காசுப் புலவர்

(செய்யத் தக்கவை)

வாலிபந் தனில்வித்தை கற்கவேண் டும்; கற்ற
வழியிலே நிற்கவேண்டும்;
வளைகடல் திரிந்துபொருள் தேடவேண் டும்; தேடி
வளர்அறம் செய்யவேண்டும்;
சீலமுடை யோர்களைச் சேரவேண் டும்; பிரிதல்
செய்யா திருக்கவேண்டும்;
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண் டும்; கொண்டு
தியாகம் கொடுக்கவேண்டும்;
ஞாலமிசை பலதருமம் நாட்டவேண் டும்; நாட்டி
நன்றாய் நடத்தவேண்டும்;
நம்பனிணை அடிபூசை பண்ணவேண் டும்; பண்ணி
னுலுமிகு பக்திவேண்டும்;
ஆலமமர் கண்டனே! பூதியணி முண்டனே!
அநக!எம தருமை மதவேள்!
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே! 2

—அறப்பளீசுர சதகம்—அம்பலவாணக் கவிராயர்

அறம் - தருமம், சீலம் - அறிவு, தியாகம் - தந்நலமற்ற செயல், ஞாலம் - உலகம், நம்பன் - கடவுள், ஆலம் - விஷம், கண்டனே - கழுத்தையுடைய சிவனே, பூதி - விபூதி, முண்டனே - உடம்பை உடையவனே, அநக - குற்றமற்றவனே, சதுரகிரி - ஓர் இடத்தின் பெயர்.

(வேண்டாதவை)

பெற்றதாய் தந்தைதன் சுற்றமே முதலான
பெரியோரை முனிதல் வேண்டா ;
பின்னென்று முன்னென்று பேசியே அவமானப்
பேர்கொண்டு திரிதல் வேண்டா ;
உற்றவர்கள் போலவுட் பகையான வஞ்சகரை
ஒருநாளும் நம்ப வேண்டா ;
ஒருவருக் கிச்சையாய்ப் பொய்சொல்லிப் பின்சபையில்
ஊமைபோல் நிற்றல் வேண்டா ;
சற்றுமே பொறுமையில் லாதவர்கள் சண்டையில்
தான்போய் விலக்க வேண்டா;
தைரியந் தனில்விக்ர மாதித்தன் என்னினும்
தன்னையே புகழ வேண்டா ;
மற்றொன்றும் எண்ணாது செய்யவேண் டாஎன்பர்
மணவாள நாராயணன்
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே !
வரதவேங் கடரா யனே ! 3

—திருவேங்கட சதகம்—நாராயண பாரதி

முனிதல் - கோபித்தல், அலர் - செந்தாமரை மலர்.

6. தனிப்பாடல்கள்

சித்திரமும் கைப்பழக்கம் ; செந்தமிழும் நாப்பழக்கம் ;
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் ;—நித்தம்
நடையும் நடைப்பழக்கம் ; நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம். 1

வேழம் உடைத்து மலைநாடு ; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து ;—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து; தெண்ணீர் வயல்தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து. 2

வேழம் - யானை, மலைநாடு - சேரநாடு, பூழியர்கோன் - பாண்டியன், தென்னாடு - பாண்டிய நாடு, சான்றோர் - பெரியோர்.

மாடில்லான் வாழ்வும், மதியில்லான் வாணிபம், நன்
நாடில்லான் செங்கோல் நடாத்துவதும், —கூடும்
குருவில்லா வித்தை, குணமில்லாப் பெண்டு,
விருந்தில்லா வீடும் விழல். 3

விழல் - வீண்.

—ஔவையார்

மீனாக்ஷி அம்மை குறம்

(பொதியமலைச் சிறப்பு)

மந்தமா ருதம்வளரும் மலையெங்கள் மலையே
வடகலைதென் கலைபயிலும் மலையெங்கள் மலையே
கந்தவேள் விளையாடும் மலையெங்கள் மலையே
கனகநவ மணிவிளையும் மலையெங்கள் மலையே
இந்தமா நிலம்புரக்கும் அங்கயற்கண் அம்மை
இன்பமுறும் தென்பொதிய மலையெங்கள் மலையே.

மந்தமாருதம் - மந்தமாக வீசும் காற்று, மலை - பொதியமலை, வடகலை - சம்ஸ்கிருதம், தென்கலை - தமிழ், கந்தவேள் - முருகன், கனகம் - பொன், அங்கயற்கண் அம்மை - மீனாக்ஷி அம்மை.

—குமரகுருபர சுவாமிகள்

குற்றாலக் குறவஞ்சி

(திரிகூடமலைச் சிறப்பு)

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்;
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும். 1

செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும்;
தேனலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும். 2

கூனல்இளம் பிறைமுடித்த வேணிஅலங் காரர்
குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே. 3

—திரிகூட ராசப்ப கவிராயர்

1. மந்தி - பெண் குரங்கு, வானரம் - ஆண் குரங்கு, வான் கவிகள் - பெரிய குரங்குகள், 2. தேன் அலர் - தேன் உள்ள.

3. கூனல் - வளைவு, வேணி - சடை, அலங்காரர் - சிவ பெருமான்.

அழகர் பள்ளு

(மழைப் பாட்டு)

ஆற்றுவெள்ளம் நாளைவரத் தோற்றுதே குறி—மலை
யாளமின்னல் ஈழமின்னல் சூழமின்னுதே!
நேற்றும் இன்றும் கொம்புசுற்றிக் காற்றடிக்குதே
—கேணி
நீர்ப்படு சொறித்தவளை கூப்பிடுகுதே. 1

மேகமெல்லாம் ஒன்றாய்க்கூடித் தான்கறுக்குதே!
—மெத்த
மின்னல்மின்னி வாசவன்கை வில்லெடுக்குதே;

நாகரிகப் பொதியமலைக் காற்றடிக்குதே—கொண்டல்
நாலுதிக்கும் கோடையிடி தானிடிக்குதே. 2

ஏகபோக மாமரத்தில் குயில்கள் கூவுதே—மழைக்(கு)
ஏற்றமாம் சொறித்தவளை கூப்பிடுகுதே;
ஆகையினால் எங்கள்திருக் கூடல் நகரில்
அந்திநேரம் எல்லாம்மழை வந்துபெய்யுமே. 3

1. ஈழம் - இலங்கை, கேணி - கிணறு.

2. வாசவன் - இந்திரன், வில் - மழைக்குமுன் தோன்றும் வான வில்; கொண்டல் - மேகம்.